Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 30.00
ஒக்.30 - நவ.05, 2014

# வாரமலர் தினமுரசு



சினி விசிட்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1090

## வரவு - செலவுத் திட்டம் 2015



# எதிர்க்கட்சிகளுக்கு ஏமாற்றம்



## ஜெயலலிதாவும் பாரதீய ஜனதாவும்

தமிழக விவகாரம்



## குடி குடியைக் கெடுக்கும்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## காணபத்தியம்

இந்துசமய பிரிவுகளில் ஒன்றாக விளங்கும் காணபத்தியம் கணபதியை முழுமுதல் தெய்வமாக போற்றுகின்றது. இவ்வழி நிற்போரை 'காணபதர்' என்றும் அழைக்கப்படுகின்றது.

கணபதி தனக்கு மேலான ஒரு தலைவர் இல்லாதவனாக, எங்கும் நிறைந்தவனாக, சர்வ வல்லமை பொருந்தியவனாக, 'ஓம்' என்ற பிரணவப் பொருளின் வடிவமாக விளங்குகின்றார்.

அத்துடன், கணபதி என்ற சொல்லின் 'க' என்பது ஞானம் ஆகும். 'ண' என்பது மோட்சம் ஆகும். 'பதி' என்பது இருப்பிடம் என்று பொருள். இதுதவிர, கணேசன் என்ற சொல்லிலும் 'க' என்பது மனோ வாக்குகள் என்றும், 'ண' என்பது அவற்றைக் கடந்த நிலை என்றும், 'ஈசன்' என்பது இறைவன் என்றும் கொள்ளப்படுகின்றன.

பல்லவர் காலத்தில் சங்கரர் என்பவர் கணபதியைப் போற்றி காணபத்திய சாஸ்திரம் மற்றும் கணேச பஞ்சாட்சரம் ஆகிய நூல்களை இயற்றியதாகவும் கூறப்படுகிறது.

**அனந்த நாராயணன், கைவேலி**

ஆன்மீகம்

## கர்த்தரின் சிட்சை

ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபடுவோருக்கு வாழ்க்கையில் சோதனைகள் அதிகம் உண்டென்பதை அனுபவப்பட்டவர்கள் கூறிக்கொள்வதை நாம் பார்க்கின்றோம். அல்லது கேட்கின்றோம். இந்தச் சோதனை ஏன் ஏற்படுகிறது...? ஒரு மாணவனுக்கு படிப்பின் தரத்தை அறிவதற்காக அவனுக்கு பரீட்சை வைத்துப் பார்ப்பது போன்று, கர்த்தரும், தன்னிடத்தில் அன்புகூருபவர்களை பரீட்சை வைத்துப் பார்க்கின்றார். இதைத்தான் நாம் சோதனை என்கின்றோம்.

இவ்வாறு சோதனைக்குட்பட்டவர்களில் ஒருவரான சாலமொன் ராஜா கூறுவதென்னவெனில், "கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாதே. அவர் கடிந்துகொள்ளும்போது, சோர்ந்துபோகாதே. தகப்பன், தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகின்றாரோ அவனைச் சிட்சிக்கிறார் (சோதிக்கிறார்). (நீதிமொழிகள் - 3:11,12)"

**சாமுவேல், புதுக்குடியிருப்பு**

## இஸ்லாம் பாதுகாக்கும்

இஸ்லாத்தை பிளவுபடுத்த நினைப்பவர்கள் இவ்வுலக ஆதாயத்திற்காகவே இதனை செய்யலாம். இவர்களால் இஸ்லாத்திற்கு எதுவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. எவர் ஒற்றுமையின்பால் உலக மக்களை அழைக்கிறார்களோ அவர்களே இஸ்லாத்திற்கு விசுவாசமானவர்கள். என் இறைவனே! எனது சமூதாயத்தவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவாயாக. அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்று அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்.

மண்ணுலக மாந்தர்கள் யாவரும் அல்லாஹ்வின் சிருஷ்டி. அவன் அடிமைகள் என்ற உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திலும் வரவேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: எனது அடியார்களே! நான் அநியாயம் செய்வதை எனக்கு ஹராமாக்கிவிட்டேன். எனவே நீங்களும் அநியாயம் செய்யாதீர்கள்.

ஆதாரம் : முஸ்லிம்.

ஆம். அல்லாஹ் ஹராமாக்கிக் கொண்ட ஒரு விடயத்தை அவர் சிருஷ்டியான மனிதன் செய்யக்கூடாது. இந்த அநியாயத்திலிருந்து மண்ணுலக மாந்தரை இஸ்லாம் பாதுகாக்கும்.

**எம்.சி.கலீல், கல்முனை - 05**

## கவிதைப்போட்டி 1087



● பாராட்டுக்குரியது ●

### விலைமதிப்பில்லா என் தாயே!

மண்ணிலே மலர்ந்த
உன்னிலே உதித்த
என்னிலே – நீயும்
கண்ணிலே என்றும்
கண்ணீரைத் தந்து
காலம்முழுவதும் நானும்
கண்கலங்கி வாழ்ந்திட
விண்ணுலகம் தேடியே – நீயும்
விரைந்ததும் ஏனோ
விலைமதிப்பில்லா என்தாயே.

இளம்பிறை யோகன், புத்தளம்

### அழுகை ஏனோ?

தந்தையின் முகத்திலே
சோகத்தின் சீற்றம் ஏதோ
துன்பத்தைக் கொடுக்கும் காலத்தின்
கஸ்ரம் தானோ
குடும்பத்தைக் காக்கவேண்டிய
போர்வை இவன்
குழப்பத்தின் போர்வையில்
அழுகின்றான் ஏனோ?

செ.நிமால் பிரசாத், உரும்பிராய்




## கவிதைப் போட்டி இல 1090



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.11.2014

**கவிதைப் போட்டி இல. 1090 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### ஒன்றும் தெரியவில்லையே!

இழப்பின் முடிவா எனக்கிது...
தனிமையே என் நிலைமையாயிற்றே...
கண்முன் மறைந்தாளே... போரிலே...
தமிழர்களின் தலைவிதி இதுவா?
அழுவதை விட...
ஒன்றும் தெரியவில்லையே!

P.இவோன், கண்டி.

### தனிமரம்

தாயின் மடியில்
தவழ்ந்தவனல்ல – நான்
தந்தையின் அன்பை
அறிந்தவன் அல்ல.
தனியாக வாழ்ந்தவனுக்கு
தாரமாய் வந்தவளே
தரணியிலே என்னை
தனிமரமாய் தவிக்கவிட்டு
விண்ணுலகம் தேடியே
விரைந்ததும் ஏனோ?

இளம்பிறை யோகன், கண்டி.

### அவல நிலை

அட கடவுளே பார்க்க
மனம் பதைக்கிறது.
பாவிகள் செய்யும்
கொடுமைதனை வாய்
விட்டு கதறினாலும்
வந்தென்னை சாடிடுவர்
வாயில் கைவைத்து மௌன
கண்ணீர் சுருக்கிறது.

கெங்கா, களுவாஞ்சிக்குடி.

### இறைவனின் நியதி

ஏக்கப் பெருமூச்சுவிட்டு
ஏன் நீ அழுகிறாய்
கண்முன் கண்ட காட்சியின்
தாக்கமா?
வீதி விபத்தில்
வீணே உயிரிழந்த
மகனின் மரணத்தால்
மனக் கவலை ஏன்?
உயிரிழப்பு
ஒன்றும் புதிதல்ல
இறப்பும் பிறப்பும்
இறைவனின் நியதி.

எம்.சி.கலீல், கல்முனை -05

### ம னி தா

வேதனைதான் வாழ்க்கையா! மனிதா!
சஞ்சலத்திலே கண்ணீரோ! - மனிதா!
துன்பத்தின் எல்லை...
துயர் கடலோ... மனிதா!
மனுக்குலத்தின் நிலைமை
இதுவோ மனிதா?

A.செல்வராணி, வத்துகாமம்.

## உங்கள் பக்கம்

### வாய்க்கால் மூடுவது எப்போது?

ஒட்டுசுட்டான் தட்டையர் மலை பகுதி வீதிகளின் இரு மருங்கிலும் கழிவுநீர் செல்லும் வாய்க்கால் கட்டப்பட்டுவருகின்றது. இந்த வாய்க்கால் கட்டப்படும் போது அதனை மூடாதுவிடுவதால் அப்பள்ளத்தினுள் மாணவர்கள் மற்றும் கால்நடைகள் விழுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி வீதியால் செல்லும் மக்கள், வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் வீழுந்து காயங்களுக்கு உள்ளாகும் நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இரவுநேரங்களில் வீதி சரியாக தெரியாததால் வெட்டப்பட்டிருக்கும் பள்ளத்தினுள் விழுந்து காயங்களுக்கு உள்ளாகின்றனர். மழை காலம் ஆரம்பித்துள்ளதால் தண்ணீர தேங்கி சேறு சகதியுமாக இருப்பதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இவ்வீதி வாய்க்காலை மூடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தினமுரசு உங்கள் பக்கமூடாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**எம்.தவபாலன், ஒட்டுசுட்டான்.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

### அமைதியின் சொற்கள்

வாழ்க்கையில் மற்றவர்களைப் படிக்க நல்ல முயற்சி செய்தீர்கள். ஆனால் இதயப் புத்தகத்தைப் படிக்க முயற்சி செய்வதில்லை. உண்மையான அறிவாளி தன் வாழ்க்கையில் இதயப் புத்தகத்தின் பக்கங்களைப் படிக்கத் தெரிந்தவன்தான்.

இணையத்தளம்: www.wopg.org

- பிரேம் ராவத்

## வாசகர்சாலை

### பாராட்டுக்கள்!

முரசின் பக்கங்கள் சுவாரசியமானவை. எல்லா பக்கங்களும் சூப்பர். முரசு ஒரு கலக்கு கலக்குகிறது. உதயகுமார் எழுதும் கட்டுரைகள் சூப்பர்.

முரசின் வளர்ச்சியை பாராட்டுகிறேன். மருத்துவப் பகுதியில் இன்னும் பிரயோசனப்படக்கூடிய மருத்துவக் குறிப்புகளை பிரசுரிக்க வேண்டுமென ஆசிரியரை கேட்டுக் கொள்கின்றேன். மென்மேலும் முரசு வளரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

ச.பத்மா, கொக்குவில்.

### காத்திருப்பேன் முரசே!

என் நெஞ்சத்தில் பூத்த
பொக்கிஷமே!
வியாழன்தோறும் உன் வருகைக்காக
காத்திருக்கும் நெஞ்சங்களில்
நானும் ஒருவன்.
உன்னை என்னில்
சிறைப்படுத்திவிட்டேன்.
நிறையானாலும், குறையானாலும்
உன்னை யாசிக்கத் தவறவில்லை நான்.
எப்போதும் உனக்காகவே
காத்திருப்பேன் முரசே!

அ.யானு, யாழ்ப்பாணம்

### சுவாரசியமான தகவல்கள் தேவை

பல்சுவை அம்சங்களை சுவைபட அறிவுபட வழங்குகிறது. முரசை இன்னும் மெருகூட்டவேண்டும். அண்மைய நாட்களாக முரசின் விறுவிறுப்பு குறைந்து காணப்படுகிறது. 24 ஆம் பக்கத்தில் விளம்பரத்தைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. அப்பக்கத்தில் வரும் தகவல்களை உள் பக்கங்களில் ஒன்றில் பிரசுரிக்கலாமே. அதை முரசு கவனத்தில் எடுக்காது யார்விட்ட பிழை.

க.சந்தியா, கொக்குவில்



ஜனாதிபதியினால் அண்மையில் வழங்கப்பட்ட தேநீர் விருந்து உபசாரத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோர் ஜனாதிபதியுடன் அந்நியோந்நியமாகக் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம்.

# வடக்கு மாகாணசபை சாதித்தது என்ன?

## அம்பலப்படுத்துகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

வடமாகாண சபை கடந்த வருட பதவிக்காலப் பகுதியினுள் வடபகுதி மக்களுக்கு உருப்படியாக எதனையும் சாதிக்கவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியிலும் கடந்த 10 மாதகாலத்தினுள் 25.71 வீதம் மட்டுமே செலவிடப்பட்டிருப்பதாக ஈ.பி.டி.பியின் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்தவராஜா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வருடத்தில் வட மாகாண சபைக்கு மீண்டுவரும் செலவீனமாக 13.650 மில்லியனும் மூலதனச் செலவாக 1876 மில்லியனும் ஒதுக்கப்பட்டது. இவற்றில் 25 வீதமே செலவிடப்பட்டிருக்கிறது.

மக்கள் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் வட மாகாண சபைக்கே கூடுதல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர மத்திய அரசாங்கமும் வடமாகாண சபைக்கு பெருமளவு நிதியை செலவிடுகிறது.

வட மாகாண சபைக்கு இம்முறை வரவு - செலவுத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து ஆராய திறைசேரி செயலாளர் வடக்கிற்கு சென்றபோது முதலமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் அந்த கூட்டத்தை பகிஷ்கரித்தனர். ஆனால், அரசாங்கம் வடக்கிற்கு எதுவும் வழங்குவதில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த ஒரு வருட பதவிக்காலத்தில் கூட்டமைப்பினர் என்ன செய்தது என்பது குறித்து விவாதிக்க வருமாறு பகிரங்கமாக அழைப்புவிடுக்கிறேன். இதற்கு முன்னரும் இவ்வாறு முதலமைச்சருக்கும் மாகாண அமைச்சர்களுக்கு அழைப்புவிடுத்தாலும் யாரும் அதற்கு தயாராக இல்லை.

ஜனாதிபதி மற்றும் முக்கிய அமைச்சர்கள் தலைமையில் நடைபெறும் முக்கிய கூட்டங்களை ஏதாவது காரணம்கூறி பங்குபற்றாமல் தவிர்க்கும் இவர்கள் மக்களை உணர்ச்சிபூர்வமாக பேசி ஏமாற்றி வருகின்றனர்.

13ஆவது திருத்தத்தின்கீழ் மாகாண சபை தொடர்பான 37 விடயங்களில் சாலை பொலிஸ் அதிகாரங்கள் தவிர 35 விடயங்கள் இருக்கின்றன. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதை நாமும் வலியுறுத்தி வருகின்றோம். ஆனால் வடமாகாண சபைக்கு கிடைத்துள்ள அதிகாரத்தைக்கூட பயன்படுத்தாமல் அரசை குறைகூறுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வடக்கிற்கு வருகின்ற மத்திய அரசின் பிரதிநிதிகளை சந்திப்பதை தவிர்த்து தமது எதிர்ப்பைக் காண்பிப்பதாக காட்டிக் கொள்கின்ற கூட்டமைப்பினர், கொழும்பில் அரச தலைவரகளுடன் அந்நியோந்நியமாக விருந்துகளில் கலந்துகொண்டு உறவு பாராட்டிவருவது மக்களுக்கு எரிச்சல் ஊட்டும் செயல் என புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அண்மையில், ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை தந்தபோது சந்திக்க மறுத்த கூட்டமைப்பினர் சில நாட்களில் நாடாளுமன்றத்தில் அவரினால் வழங்கப்பட்ட தேனீர் விருந்தில் கலந்துகொண்டமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே புத்திஜீவிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

## கித்துள் வருண 2014

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சினால் கித்துள் உற்பத்திப் பொருட்களை பிரபல்யப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

'கித்துள் வருண -2014' கண்காட்சியையும் விற்பனைச் சந்தையையும் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை மாத்தறை பழைய ஒல்லாந்தர் கட்டடத் தொகுதியில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் நடைபெறவுள்ள இக்கண்காட்சி நிகழ்வில் அமைச்சர்களான - டலஸ் அழகப்பெரும, மஹிந்த யாப்ப அபயவர்த்தன, உட்பட பல அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் கலந்துகொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தைப்பொங்கல் வெளியீடு... தி.மு.க-வுக்கு கண்டம்?

ரிஷி



தமிழக அரசியலில் வெளி மாநில நீதிபதிகளின் பெயர்கள் பலமாக அடிபடும் காலம் வந்துள்ளது போலிருக்கிறது. பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அளித்த தீர்ப்பின்மூலம் ஜெயலலிதாவின் முதல்வர் பதவியும் போய், அவரும் சிறையில் அடைபட, தமிழகத்தில் சுவரெங்கும் அந்த நீதிபதியின் பெயர் 'எல்லா விதமாகவும்' அடிபட்டது.

அடுத்த சில மாதங்களுக்குள், டில்லி சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி ஓ.பி.ஷைனியின் பெயர் தமிழகத்தில் பட்டிதொட்டியெல்லாம் அடிபடப் போகிறது! இவருக்கு முன்னால்தான் 2ஜி வழக்கு, விசாரணையில் இருக்கிறது. அந்த வழக்கும் தீர்ப்பு வழங்கப்படும் நிலைக்கு வந்துள்ளது.

விரைவில் தீர்ப்பு வரப்போகிறது என்றால், எவ்வளவு விரைவில்? தீபாவளி நேரத்தில் அ.தி.மு.க.-வுக்கு வந்த கண்டம்போல, தைப் பொங்கல் வெளியீடாக தி.மு.க.-வுக்கு கண்டம் வரலாம் என கிறார்கள். அந்தளவுக்கு முடிவு நெருங்கி வந்துவிட்டது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கின் சூத்திரதாரி சுப்ரமணியன் சுவாமியாக இருந்தாலும், அந்த வழக்கை அவ்வப் போது உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது என்னவோ, தி.மு.க.-தான். ஜெயலலிதாவுக்கு தண்டனை கிடைத்தவுடன் துள்ளிக் குதித்திருக்கவேண்டிய கட்சியும் அவர்கள்தான்.

ஆனால், தீர்ப்பு வெளியானதில் இருந்து தி.மு.க.-வின் தலைவர் கருணாநிதி பட்டும்படாமலும் கருத்து சொல்லிக்கொண்டு இருந்தார்.

என்ன காரணம்? ஜெயலலிதாவுக்கு தண்டனை கிடைத்தது தொடர்பாக இன்று விடும் கிண்டல் அஸ்திரங்கள் அடுத்த சில மாதங்களுக்குள் தம்மீது பாயலாம் என்பதை அவர் அறிந்து வைத்திருக்கிறார் என எடுத்துக் கொள்ளலாம்.

2ஜி வழக்கு முடியும்போது, யாருக்கு தண்டனை கிடைக்கத்தான் போகிறது. அந்த 'யார்' எத்தனை பேர் என்பதிலும், அவர்கள் யார் என்பதிலும் உள்ளது தி.மு.க. தலைவரின் கவலை. கருணாநிதியின் கவலை யாரைப் பற்றியது என நமது டில்லி தொடர்புகளிடம் விசாரித்தோம். அவர்களது பதில், 'தயாளு அம்மாள்'

அம்மாவின் சொத்துக்குவிப்பு வழக்குப்போலவே இந்த 2ஜி வழக்கிலும் ஏகப்பட்ட ஆதாரங்கள் உள்ளன. சில ஆதாரங்கள், மத்தியில் காங்கிரஸ் - மாநிலத்தில் தி.மு.க. நல்லாட்சி புரிந்தபோது அழிக்கப்பட்டாலும், அழிக்கமுடியாத பல ஆதாரங்கள் இன்னமும் மிரட்டுகின்றன. அவற்றில் சில, தயாளு அம்மாளுக்கு எதிராக உள்ளன.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது சி.பி.ஐ, தயாளு அம்மாள் தொடர்பாக ஒருவித நெகிழ்வு போக்கை கொண்டிருந்தது. காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியால் கிடைத்த சாதகம் அதுதான். இப்போது அங்கும் ஆட்சி மாறிவிட்டது, சி.பி.ஐ.-யின் போக்கும் மாறிவிட்டது.

டில்லியில் உள்ள நமது தொடர்பாளர்களிடம் ஒரு கேள்வி கேட்டோம். "இந்த விவகாரம் தி.மு.க.-வுக்கு எதிராக எந்தளவில் உள்ளது?"

"கழுத்துவரை வந்துவிட்டது" என்கிறார்கள் அவர்கள்.

எமது சி.பி.ஐ. தொடர்பாளர் இப்படி சொல்கிறார்: "இந்த விவகாரம் பெரிதாக அடிபட தொடங்கிய நாட்களில், சி.பி.ஐ. ஒரு குற்றப்பத்திரிகை தயாரித்தது. அதில் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்களின் வரிசையில், கனிமொழியில் பெயருக்கு இரண்டு பெயர்களுக்கு முன்பே தயாளு அம்மாளின பெயர் இருந்தது. இந்த குற்றப் பத்திரிகை பணிப்பாளரின் கைகளுக்கு போனபோது, ஆட்சியாளர்களிடம் போனார் அவர், 'என்ன செய்வது?' என்ற கேள்வியுடன்.

அப்போது இந்த விவகாரம் தி.மு.க.-வின் டில்லி பிரபலம் ஒருவர் மூலமாக கோபாலபுரத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

கருணாநிதி ஏகத்துக்கும் எகிறி, மத்திய அரசுக்கு கொடுத்த ஆதரவை விலக்கி, ஆட்சியை கவிழ்ப்பது என்ற கட்டம்வரை போனார. டில்லிக்கும் சென்னைக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் தொடங்கின.

கோபாலபுரத்தின் நிபந்தனை, "தயாளு அம்மாள், கனிமொழி இருவருடைய பெயர்களும் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும்" என்பதாக இருந்தது. இதனைக் கேட்ட சி.பி.ஐ. உயரதிகாரிகள் சிரித்தார்கள்.

இந்த விவகாரத்தில் இவர்கள் (சென்னை) விட்டுவிட்ட ஆதாரங்களை காட்டினார்கள். சில பண கொடுப்பனவுகள் முறையான ஆதாரங்களுடன், வெளிப்படையாக இருந்தன.

"நாங்கள் இந்தப் பட்டியலில் இருந்து அந்த இரு பெயர்களையும் நீக்கினாலும், வழக்கு நீதிமன்றம் போனால், நீதிபதியே அந்த இரு பெயர்களையும் சேர்க்கும்படி உத்தரவிடுவார். அந்தளவுக்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன" என விளக்கினார், ஒரு உயரதிகாரி.

தாம் எவ்வளவு சிக்கலில் உள்ளோம் என்பது கோபாலபுரத்தாருக்கு முதல் தடவையாக புரிந்தது. அதன்பின் கடகடவென நடந்த சில பேச்சுவார்த்தைகளில், "கனிமொழியின் பெயர் இருக்கட்டும். தயாளு அம்மாளின் பெயரை தூக்கிவிடுங்கள்" என இறங்கிவந்தார்கள்.

இதை எமக்கு சொன்ன நமது சி.பி.ஐ. தொடர்பாளர், "தயாளு அம்மாளை காப்பாற்ற, கனிமொழியை காவு கொடுக்க தயாராகிறார்கள் என டில்லி அலுவலகத்தில் எமக்குள் பேசிக்கொண்டோம்" என்றார்.

இந்நிலையிலேயே தீர்ப்பு விரைவில் என்கின்ற தகவல்கள் பரபரப்பாக இந்திய அரசியல் மட்டத்தில் பேசப்படுகிறது. இந்த தீர்ப்பையும் விரைவுபடுத்தி தி.மு.க உடைய மிச்சியுள்ள செல்வாக்கையும் தகர்த்துவிட்டு தமிழக ஆட்சியை கைப்பகப் படுத்த பா.ஜ.க தீவிரமாக முயற்சிப்பதாகவே தெரிகிறது.

வாரமலர்
தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### முதன்மையான இரு கோரிக்கைகள்

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு யுத்தம் முடிந்து ஐந்து வருடமாகியும் அந்தக் காணிகள் உரியவர்களிடம் மீளக் கையளிக்கப்படாமல் உள்ளன. அவற்றில் பாதுகாப்புத் தேவைக்கு அதிகமாகவுள்ள காணிகளை உரியவர்களிடம் கையளிக்கவேண்டும். பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இருக்க முடியாது என்று ஜனாதிபதி கூறியதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதேபோல் சிறைகளிலுள்ள தமிழ் முன்னாள் புலி உறுப்பினர்கள் உட்பட அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை தற்போது தமிழ் மக்களிடம் வலுப்பெற்று வருகின்றது.

இந்தக்கோரிக்கைகளை தமிழ் மக்கள் சார்பில் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த ஜனாதிபதியிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக முன்வைத்தார். அது தொடர்பில் தொடர்ந்தும் ஈ.பி.டி.பி வலியுறுத்திவருகின்றது. அண்மையில் அலரிமாளிகையில் ஜனாதிபதியை சந்தித்த போதும் அதே கோரிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியிருந்தார்.

யுத்தத்துக்குப் பின்னர் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தமிழ் மக்களின் இந்த முக்கிய கோரிக்கைகளுக்கும் நல்லதொரு தீர்வை வழங்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்ப்புக்காட்டுமாறும், புறக்கணிக்குமாறும் கூறியபோதும், ஜனாதிபதியை வரவேற்பதற்கு யாழ்ப்பாணத்தில் மக்கள் அலை அலையாக திரண்டு வந்து வெளிக்காட்டிய மகிழ்ச்சி ஜனாதிபதியிடமும் தொற்றிக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

மக்களிடையே சரியான திசை நோக்கிய மாற்றம் ஏற்பட்டுள்ளதை பறைசாற்றுவதாகவே ஜனாதிபதிக்கு யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் காட்டிய வரவேற்புக்கள் அமைந்துள்ளன. அந்த மகிழ்ச்சியின் எதிரொலிப்புக்களை அலரி மாளிகையிலும் கேட்கக் கூடியதாக இருந்தது.

மேலே குறிப்பிட்ட தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கும் ஜனாதிபதி நல்லதொரு தீர்வைக்காணுவாராக இருந்தால் மகிழ்ச்சி நிரந்தரமாக இருக்கும். ஜனாதிபதியிடம் தாம் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு வலிமைசேர்க்கும் வகையிலேயே தமிழ் மக்களிடையே தற்போது ஏற்பட்டுவரும் சரியான திசைவழி நோக்கிய மாற்றம் உள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. சிறுபான்மை மக்களின் வாக்குகளே தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கும் என்றும் ஆருடங்கள் கூறப்படுகின்றது. உணர்ச்சியூட்டல்களுக்கும், வெற்றுக் கோசங்களுக்கும் கடந்த காலங்களில் எடுபட்டு வாக்களித்து தோற்றுப் போனதை ஒரு பாடமாக எடுத்து இம்முறை வெற்றிபெறுகின்றவருக்கு வாக்களிப்பது. கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியவருக்கு வாக்களிப்பது எனும் தேர்தல் தந்திரோபாயத்தை தமிழ் மக்கள் பிரயோகிக்கவேண்டும். செய்வார்களா?.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# வரவு - செலவுத் திட்டம் - 2015

# எதிர்க்கட்சிகளுக்கு ஏமாற்றம்



**எதிர்க்கட்சிகளுக்கு ஏமாற்றமளித்தது வரவு - செலவுத் திட்டம் மட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்தான். எதிர்க்கட்சிகள் என்ன தான் கூறினாலும், "யார் குற்றியேனும் அரிசியானால் சரிதான்" என்பதுபோல் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமானது நாட்டு மக்களுக்கு நன்மையானதாகவே அமைந்துள்ளது.**

மூன்றாவது முறையாகவும் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக போட்டியிட முடியுமா? என்ற விவாதங்கள் சூடுபிடித்துள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் பொதுவேட்பாளரைத் தேடி அலைகின்றன.

பிரதான எதிர்க்கட்சியோ மீண்டும் தமது தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்குவார் என்று அறிவித்து உள்ளனர். ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே மீண்டும் பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்பதே அரசியல் விமர்சகர் களின் கருத்தாக உள்ளது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக எதிர்க்கட்சிகள் பொதுவேட்பாளர் ஒருவரை கண்டுபிடிப்பதில் தோல்வி. அடைந்துவருகின்றன. பதவி ஆசையை ஓரம் கட்டிவிட்டு கொள்கை கோட்பாடுகளை தூக்கி எறிந்துவிட்டு சந்திரிக்கா அம்மையாரை பொதுவேட்பாளராக களத்துக்குக் கொண்டு வந்தால் அரசியலில் சில சுவாரஷ்யங்களை பார்க்கமுடியும்.

அவரில்லாமல் யார்? களத்தில் இறக்கப்பட்டாலும் அது எதிர்க்கட்சிகளின் பலவீனத்தையே காட்டும். முன்னாள் நீதியரசர் சரத் என்.சில்வாவோ, மூன்றாவது முறையாகவும் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட சட்டரீதியாக முடியாது என்று சவால் விடுத்துவருகின்றார். ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு முன்னாள் நீதியரசரின் கருத்துக்கள்மீது நம்பிக்கையில்லை.

அதற்குக் காரணம் அடுத்த தேர்தலில் தானே பொதுவேட்பாளர் என்று அறிவித்த ஜனாதிபதி தற்போது தேர்தலுக்கும் தயாராகிவிட்டார் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

கடந்த 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் 2015ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி வாசித்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உறைந்துபோய் இருந்தார்கள். ஜனாதிபதி ஆரம்பத்தில் இருந்து வாசிப்பு முடியும்வரை நாட்டு மக்களுக்கு சலுகைகளையே அறிவித்துக் கொண்டிருந்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பிள்ளைகள் தொடக்கம் அரச, தனியார் உத்தியோகத்தர்கள், நாட்டின் சிரேஷ்ட பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் சலுகைகள்.

விவசாயிகள், மாடு வளர்ப்போர், கோழி வளர்ப்போர்வரை சலுகை. பல்வேறு கடன் உதவித்திட்டங்கள், ஒதுக்கீடுகள், வரிக்கழிவுகள் என அந்த வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்திருக்கின்றார். ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தடை செய்யப்பட்ட அல்லது முடக்கப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் வரவு - செலவுத் திட்டத்தில் வழி ஏற்படுத்தியிருந்தார். விஷேடமாக வெளிநாடுகளில் வாழ்கின்றவர்கள் மீண்டும் தாய்நாட்டுக்குத் திரும்பி முதலீடுகளை செய்வதை ஊக்குவிக்கும் திட்டங்களும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்தது.

முக்கியமாக பாதுகாப்பு செலவீனத்துக்கான ஒதுக்கீட்டில் கணிசமான குறைப்பைச் செய்திருப்பதையும் கவனிக்க முடிகின்றது. எதிர்க்கட்சிகள் வரவு - செலவுத் திட்டத்தை எதிலிருந்து விமர்சிப்பது என்பது தெரியாமல் திக்குமுக்காடிப் போயுள்ளனர். பொதுவாகவே வரவு - செலவுத் திட்டங்கள் வரி கழிவு, அல்லது வரி அதிகரிப்பு என்பவற்றில் தொடங்கி துண்டுவிழும் தொகையில் முடிவடைவது வழமையானதுதான்.

துண்டுவிழும் தொகை பூஜ்ஜியமாக இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஒப்பீட்டளவில் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் சிறப்பானதாகவே இருக்கின்றது. அதற்குக்காரணம், அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால் மக்களை வசப்படுத்துவதற்காக ஜனாதிபதி மாயாஜாலமான வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்திருக்கின்றார் என்று எதிர்க்கட்சிகள் கூறியிருக்கின்றன.

இந்தக் கூற்றின்படி பார்த்தாலும் இந்த வரவு - செலவுத் திட்டம் எத்தகைய நோக்கத்தைக் கொண்டிருந்தாலும் மக்களுக்கு நன்மையானது என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. தேர்தல் வாக்குறுதியைப் போல் பல்வேறு நலத்திட்டங்களை ஜனாதிபதி வரவு - செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ளார் என்பதே எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டாக உள்ளது.

எது எப்படியாக இருந்தாலும் வரவு - செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாட்களில் விமர்சனங்களை முன்வைத்துவிட்டு வாக்கெடுப்பின்போது எதிர்ப்பதே எதிர்க்கட்சிகளின் அரசியல் நிலைப்பாடாக இருக்கும். ஆனால் அரசு தாராளமாக தடையின்றி வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும்.

ஆளும் கட்சிக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உண்டு. அது தவிரவும் எதிர்க்கட்சிகளுக்குள் கூட்டு ஒற்றுமை இல்லை. பொது வேலைத்திட்டமொன்றும் எதிர்க்கட்சிகளிடம் இல்லை. எதிர்க்கட்சிகளிடையே தற்காலிகமாக ஏற்படுகின்ற ஒற்றுமையும், செயற்பாடுகளும் அரச எதிர்ப்பு செய்திகளுக்காக நடத்தப்படும் ஊடகங்களின் செய்திகளாக வருவதற்காகத்தான்.

ஆகவேதான் எதிர்க்கட்சிகளின் எந்தவொரு வேலைத்திட்டமும், முன்னெடுப்பும் நிலையானதாக இருந்ததில்லை. ஆளும் கட்சிக்கு சவாலாகவும் இருந்ததில்லை. எதிர்க்கட்சிகளின் சில செயற்பாடுகள் ஆளும் கட்சிக்கு அரசியல் இலாபங்களையே விளைவிக்கின்றன.

வரவு - செலவுத் திட்ட வாசிப்பை முடித்துக்கொண்ட ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அனைவருக்கும் விஷேட தேநீர் விருந்தொன்றை வழங்கினார். அது சம்பிரதாயமாக நடைபெறும் ஒரு நிகழ்வுதான் என்றாலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி போன்ற எதிர்க்கட்சிகள் அந்த தேநீர் விருந்தில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு யாழ்.தேவி புகையிரதத்தில் வருகைதந்த ஜனாதிபதி வருகை தந்தபோது, தமிழ் மக்கள் அந்த நிகழ்வுகளை புறக்கணிக்க வேண்டுமென்றும், ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்றும் கூறிய கூட்டமைப்பினர் கொழும்பில் தேநீர் விருந்தில் ஜனாதிபதியோடு அந்நியோந்நியமாக இருந்ததை கேள்வியுற்ற எதிர்க்கட்சிகளுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கும்.

ஏற்கெனவே ஜனாதிபதியின் யாழ்ப்பாண பயணமும் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு மக்கள்காட்டிய வரவேற்பும் எதிர்க்கட்சிகளுக்கு குழப்பத்தை கொடுத்திருந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒரு பிடிவாதமாக ஜனாதிபதியை எதிர்த்துள்ளனர். ஆகவே தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளருக்கு கூட்டமைப்பினரின் ஆதரவை பெற்றுக்கொள்ள முடியும் என்று திட்டமிட்டிருந்த எதிர்க்கட்சிகளுக்கு கூட்டமைப்பும் ஜனாதிபதியுடன் உள்ளூர நெருக்கமாகவே இருக்கின்றனர் என்ற செய்தி ஆச்சரியமாக இருப்பதில் நமக்கு ஆச்சரியம் இல்லை.

தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழ் மக்களிடம் கூறுவதையே தென் இலங்கையிலும் கொள்கையாக முன்னிலைப்படுத்துவார்கள் என்றில்லை. தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியம் என்றும் நம்ப முடியாத சிங்கள ஆட்சியாளர்கள் என்றும் வீராவேசம் பேசும் இவர்கள் கொழும்பில் கூனிக் குறுகி, மழுப்பல் சிரிப்புச் சிரித்து நடத்தும் தன்மான அரசியல் சற்று வித்தியாசமானது.

அது தன்மானத்தோடு கூட்டமைப்புக்கு வாக்களிக்கும் தமிழர்களுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். அது தென் இலங்கை எதிர்க்கட்சிகளுக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை. வடக்கில் அழைப்பிதழ் அனுப்பினாலும் போகாதவர்கள், கொழும்பில் அழையா விருந்தாளிகளாகவே வந்து நிற்பது தந்திரோபாயமாகும்.

எதிர்க்கட்சிகளுக்கு ஏமாற்றமளித்தது வரவு - செலவுத் திட்டம் மட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்தான். எதிர்க்கட்சிகள் என்னதான் கூறினாலும், "யார் குற்றியேனும் அரிசியானால் சரிதான்" என்பது போல் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமானது நாட்டு மக்களுக்கு நன்மையானதாகவே அமைந்துள்ளது.

மதியூகி





# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



**ஆனால்** காவலாளி அப்படிச் செய்ய வில்லை. ரெயில்வே அலுவலகத்தின் முன்புறச் சுவரில் பாதிக்குப் பாதி கண்ணாடி பதித்திருந்தது. அலுவலகத்தில் இருந்து வேலை செய்பவர்கள் ரெயில்வே ஸ்டேஷனின் பிளாட்பாரத்தை பார்ப்பதற்காக அப்படி அமைக்கப்பட்டு இருந்தது.

மேஜையில் இருந்து கீழே இறங்கிய வில்லி தரையோடு தரையாக நகர்ந்தபடி அலுவலகத்தின் மறுமுனையை அடைந்தார். அங்கேதான் சுவரில் அலுமாரி இருந்தது. அதற்குள்தான் ரயிலில் தங்கம் எடுத்துச் செல்லப்படும் இரும்புப் பெட்டிக்கான இரண்டு சாவிகள் இருந்தன.

இப்போது வில்லி செய்யவேண்டியது இரண்டு காரியங்கள். முதலாவது அலுமாரியின் கதவைத் திறந்து தயாராக வைத்திருக்கவேண்டும். "ரொபேர்ட் வந்து சாவிகளை மெழுகில் பிரதியெடுப்பதற்கு. இரண்டாவது, அலுவலகத்தின் பிரதான கதவைத் திறந்து விடவேண்டும்" ரொபேர்ட் உள்ளே வருவதற்கு.

அந்தப் பிரதான கதவுக்கு வெளிப் புறமாகத்தான் காவலாளி முதுகைக் காட்டிக்கொண்டு அமர்ந்திருந்தார். எவ்வளவுதான் கவனமாக கதவில் சாவியைப் போட்டுத் திறந்தாலும் "கிளிக்" என்ற சத்தம் காவலாளிக்குக் கேட்டுவிடும்.

காவலாளி அசைவதாகத் தெரியவில்லை.

கிளீன் வில்லியை அனுப்பியபோது அலுவலக அறைக்குள் புகுந்தபின் ஒன்பது மணிவரை எதுவும் செய்யாமல் காத்திருக்கும்படி எட்வேர்ட் கூறியிருந்தார். ஒன்பது மணிக்குத்தான் கதவையும் அலுமாரியையும் திறக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

வில்லி நேரத்தைப் பார்த்தார். எட்டு இருபது.

ஒன்பது மணிக்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும்போது வெளியே யாரோ ஒருவர் உரத்த குரலில் பேசுவது உள்ளே வில்லிக்குக் கேட்டது.

"ஒன்பது மணிக்கு அலுவலகத்துக்கு வெளியே ஒரு சம்பவம் நடக்கும். கதவுக்கு வெளியே அமர்ந்திருக்கும் காவலாளியின் கவனம் திரும்பும். கிட்டத்தட்ட மூன்று நிமிடங்கள் அவகாசம் கிடைக்கும்" என்று கிளீன் வில்லிக்கு சொல்லப்பட்டு இருந்தது. ஆனால், நடக்கப்போவது என்ன சம்பவம் என்பது சொல்லப்படவில்லை.

அந்த மூன்று நிமிடங்களில் இரு கதவுகளையும் திறந்துவிடவேண்டும். கவனம் திரும்பிய காவலாளி இரு கிளிக் சத்தங்களையும் கேட்கமுடியாது என்பதுதான் திட்டம்.

வெளியே பேச்சுக்குரல் கேட்டவுடன் தனது பொக்கட்டில் இருந்த கதவின் சாவியையும் அலுமாரியின் சாவியை யும் எடுத்துத் தயாராகக் கையில் வைத்துக் கொண்டார் கிளீன் வில்லி.

இப்போது வெளியே ஒரு ஆளின் குரல் தெளிவாகக் கேட்டது.

"யார் மேலே கதவருகே நிற்பது? பார்த்தால் திருடன்போல இருக்கிறதே. பொலிஸ், பொலிஸ்" என்று ஒரு குரல் சத்தம் போட்டது.

அது எட்வேர்ட்டின் குரல்.

**ஒன்று - இரண்டு - மூன்று**

லண்டனின் பனிமூடிய இரவில் லண்டன் பிரிட்ஜ் ரெயில்வே ஸ்டேஷனில் அந்தக் குரல் மிகப் பெரிதாகக் கேட்டது. "திருடன்... திருடன் – யாரோ திருடன் போலிருக்கிறது. ரெயில்வே அலுவலகத்தை உடைத்துத் திருடப் போகிறான். பொலிஸ், பொலிஸ்"

இதைக் கேட்டவுடன் ரெயில்வே அலுவலகத்தின் பூட்டிய கதவுக்கு வெளியே காவலுக்கு அமர்ந்திருந்த செக்கியூரிட்டி திகைத்துப் போனார். கூச்சல் போடும் நபர் தன்னைப் பார்த்துத்தான் கூச்சல் போடுகிறார் என்று அவருக்குப் புரிந்துவிட்டது.

கூச்சல் போடும் நபர் ரெயில்வே அலுவலகத்துக்குச் செல்லும் படிகளின் கீழே, பிளாட்பாரத்தில் நின்று கத்திக் கொண்டிருந்தார். கிளீன் வில்லி பொலிஸில் பிடிபட்டாரா?, இல்லையா? அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

வதை 137

## மணியம்

**பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் என்ற சிறுவனுக்காக நியாயமாகக் கண்ணீர் வடிக்கும் 'நாகரீக' உலகு, பிரபாகரனால் யுத்தமுனைக்குப் பிடித்துச் செல்லப்பட்டு அநியாயமாகக் கொல்லப்பட்ட அந்த முகம் தெரியாத ஆயிரக்கணக்கான ஏழைச் சிறுவர்களுக்காகவும், கண்ணீர்வடிக்காதா?**

**முள்ளிவாய்க்காலின் இன்னொரு முகம்!**

**அன்று சென்றபோது அங்கு கண்ட எனது இதயத்தை வெடித்துச் சிதறவைத்தது. காரணம். அவரது இரு சின்னஞ்சிறு மகள்களும் சோகமே உருவாக வாடி வதங்கிப் போயிருந்தனர்.**

நான் அங்கு போனபோது. சிறீதரன். சித்திரலேகா மௌன குரு உட்படப் பலர் சோகமே உருவாக நின்றிருந்தனர். என்னைக் கண்டதும் ஒருவர். "இந்த ஈ.பி.ஆர்.எல்.எப் ராஸ்கல்ஸ் இப்படிச் செய்து போட்டாங்கள்" எனச் சத்த மிட்டார். அதாவது அந்த நேரத்தில் இந்திய அமைதிப் படையுடன் சேர்ந்து செயற்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் தான் அந்தக் கொலையைச் செய்து போட்டார் கள் என்பதுதான் அவரது கூச்சலுக்குக் காரணம்.

புலிகளும் பொதுமக்கள் அவ்வாறு கருதவேண்டும் என நன்கு திட்டமிட்டே அந்தக் கொலை யைச் செய்திருந்தனர். அந்த குறிப்பிட்ட நபர் என்னைக் கண்டதும் அவ்வாறு கூச்சலிட்ட தற்கான காரணத்தைப் பின்னர் அறிந்தேன். ஒரு காரணம். எமது கட்சியில் முக்கியஸ்தராக இருந்த தோழர் வீ.ஏ.கந்தசாமி ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்துடன் இணைந்து வேலை செய்ததால். நானும் அவ்வாறான ஒருவன் என்ற அனுமானம். மற்றது. குறிப்பிட்ட சில விடயங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் முற்போக்குத் தன்மை காரணமாக. அதனுடன் எமக்கு இருந்த நட்புறவு நிலை.

ஆனால் பின்னர் புலிகள் தான் அந்தக் கொலையை நிகழ்த்தினர் என்பது சந்தேகமற நிருபணமாகிவிட்டது.

அந்தச் சம்பவத்தில் மறக்க முடியாத. நெஞ்சை விட்டகலாத. இன்றும் என் மனதை வாட்டுகிற விடயம் ராஜினியின் அந்த இரு சின்னஞ்சிறு குழந்தைகளின் கண்களில் நிறைந்திருந்த தாய்மையின் ஏக்கம். மரண ஊர்வலத்தின் இறுதியில் அவரது உடல் நல்லூர் முத்திரைச் சந்தை செம்மணி வீதியிலிருந்த அவர்களது குடும்ப மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட பின்னர். அவரது இரு குழந்தைகளும் அவர் புதைக்கப்பட்டிருந்த மண்மேட்டைச் சுற்றிச் சுற்றி வந்து. "அம்மா மீண்டும் எழுந்து வரமாட்டாவா?" என்ற ஏக்கத் துடன் நின்ற காட்சி மனதை ஒருகணம் உலுக்கியது.

ராஜினியின் கணவர் தயாபால அரச படைகளின் தேடுதலுக்கு அஞ்சி தலைமறை வாக இருந்த காலத்தில். தனது இரு குழந்தைகளையும் ஒரு குறையும் வைக்காது வளர்த்த அந்தக் குழந்தைகளின் அம்மாவை. என்றென்றைக்கும் திரும்பி வரமுடியாதபடி புலி பாசிஸ்ட்டுகள் அழித்துவிட்டார் கள். நான் அங்கிருந்து விடை பெறும் போது ராஜினியின் கணவர் தயாபாலவின் கைகளைப் பிடித்த போது. அவரது இதயத்துடிப்பை என்னால் உணரமுடிந்தது.

தாயை இழந்தாலும் உயிர் தப்பி வாழ்ந்துகொண்டிருக்கும் ராஜினியின் குழந்தைகளை இன்று நினைக்கையில். அவ்வாறு உயிர்வாழச் சந்தர்ப்பம் கொடுக்காமல் பூவும் பிஞ்சுமாக புலிகளால் யுத்த முனைக்கு பலவந்தப்படுத்திப் பறித்துச் செல்லப்பட்டு. தமது அதிகார வெறிபிடித்த யுத்தத்துக்காக புலி களால் பலியாக்கப்பட்ட ஆயிரக் கணக்கான சிறுவர்களினதும் சிறுமிகளினதும் சோகக் கதறல்கள் நெஞ்சைப் பிளக்க வைக்கின்றன.

அநியாயமாக கொல்லப்பட்ட

இலங்கைக்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் உள்நோக்கத்துடன் செயற்பட்டு வரும் சக்திகள், இறுதியுத்த 'உரிமை மீறல்கள்' குறித்தும், 'முள்ளிவாய்க்கால் படுகொலைகள்' குறித்தும் திட்டமிட்ட முறையில் உலகளாவிய பிரசாரங்களைத் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றன.

அவர்கள் புலிகள்மூலம் தென்னாசியப் பிராந்தியத்தில் உருவாக்குவதற்குப் போட்டிருந்த திட்டங்களை, இலங்கை அரசு 2009 மே மாதத்துடன் தவிடு பொடியாக்கிவிட்டதால் ஏற்பட்டுள்ள சினமும், வஞ்சம் தீர்ப்பும் இந்தப் பிரசாரங்களில் தெரிகிறது.

உண்மையில் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில், அதில் சம்பந்தப்பட்ட இருதரப்புகளான அரசும் புலிகளும் கணிசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதை எவரும் மறுக்க முடியாது. அரச படைகளின் உரிமை மீறல்கள் சில. அரசாங்கம் நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழு மூலம் வெளிவந்திருக்கிறது. ஆனால் அதற்குத் தகுந்த பரிகாரம் இன்னமும் காணப்படவில்லை என்பது இன்னொரு விடயம்.

அதேநேரத்தில் புலிகள் இந்த யுத்தத்தில் செய்த மனித உரிமை மீறல்கள், அதுவும் தனது சொந்த மக்கள் மீதே நிகழ்த்திய கொடுமை கள், உரிய முறையில் வெளிக் கொணரப்படவில்லை. அதுமாத்திர மல்லாமல், அவை திட்டமிட்ட முறையில் பல்வேறு தரப்பு களாலும் மூடிமறைக்கப்பட்டும் வருகின்றன.

இறுதியுத்த நேரத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற் காக, ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தருஸ்மன் என்பவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். அக்குழு வழங்கிய இறுதி அறிக்கையில் அரச படைகள் மீது 6 குற்றச் சாட்டுகளையும், புலிகள் மீது 7 குற்றச்சாட்டுகளையும் சுமத்தியது. புலிகள்மீது சுமத்திய குற்றச்சாட்டு களில் ஒன்று சிறுவர்களைப் பலவந்தமாகத் தமது படையணி களில் இணைத்துக் கொண்டார் கள் என்பதாகும்.

ஆனால் இப்பொழுது மேற்கு நாடுகளும் சரி, அவர்களுக்குக் காலம்காலமாக துதிபாடி வரும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் சரி, இறுதி யுத்தத்தில் இலங்கை அரசுக்கு சகல வழிகளிலும் உதவிய இந்தியாவும் (பிரதானமாக தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள்) சரி, தருஸ்மன் அறிக்கையில் கூறப்பட்டவற்றைக் கூட மறந்து, ஒரு தலைப்பட்சமாக இலங்கை அரசை மட்டும் குற்றம் சாட்டிவருவது, எந்த வகையில் நியாயம் என்பது தெரியவில்லை.

ஒரு யுத்தத்தில் ஈடுபடும் எவரும் நாசகாரமான அழிவு வேலைகளில் ஈடுபடுவது எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும் நடந்து வந்திருக்கிறது என்பதற்காக, அது சகஜம்தான் எனக்கூறி, அதைத் தட்டிக்கழித்துவிட முடியாது. அந்தவகையில் இலங்கை அரச படைகள் இழைத்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் உரிய முறையில் விசாரிக்கப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் தண் டிக்கப்படுவது அவசியமானது என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

ஆனால், அதேநேரத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட மறுதரப் பான புலிகளின் மனித உரிமை மீறல்களும் விசாரிக் கப்பட்டு, அதற்குப் பொறுப் பானவர்களும் தண்டிக்கப் படுவது அவசியமானது.

ஆனால், இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் பற்றி உரத்துக் கதைப்பவர்கள், புலிகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து வாய்திறக்க மறுக்கிறார்கள். ஏன் இந்த ஓரவஞ்சகமான நிலை? அதற்கான பின்னணிக் காரணம் என்ன? புலிகள் செய்த மனித உரிமை மீறல்கள் உரியமுறையில் ஆவணப்படுத்தப் படாமல் இருப்பது ஒருபக்கம் இருக்க, புலிகளது அட்டூழியங் களை நேரில் கண்டவர்கள் கூட, அவற்றைப் பகிரங்கப்படுத்தி னால் தம்மை 'துரோகிகள்' எனப் புலிசார்பு ஊடகங்கள் முத்திரை குத்திவிடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருப்பதையும்கூட காண முடிகிறது.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம்

126

பா.ராகவன்


எகிப்து இராணுவம் தன்னால் இயன்ற அளவுக்குத் தற்காப்புத் தாக்குதலில் ஈடுபட்டபோது, இங்கிலாந்து பிரான்ஸ் மற்றும் இஸ்ரேலின் கூட்டணிப் படையின் அளவுக்கு முன்னால் எகிப்து இராணுவம் அளவிலும் தரத்திலும் மிகவும் பின் தங்கியிருந்ததால் அவர்களால் பெரிய அளவில் சாதிக்க இயலவில்லை.

இராணுவரீதியில் எகிப்துக்கு இந்த சுயஸ் யுத்தம் ஒரு பெரிய தோல்விதான். இதில் சந்தேகமே இல்லை. ஆனால் அரசியல்ரீதியில் மிகப்பெரிய வெற்றியை அது அவர்களுக்குத் தேடித்தந்தது.

விவரம் முழுவதும் அறியாத பாமர மக்களுக்கு, எகிப்தினுள் புகுந்து இந்த தேசங்கள் தாக்குதல் நிகழ்த்தியது அயோக்கியத்தனம் என்றே தோன்றியது.

தவிரவும் இஸ்ரேலுக்கு ஆதரவாக அல்லவா இவ்ர்கள் இறங்கியிருக்கிறார்கள்?, இஸ்ரேல் யார்?, அது ஒரு அமெரிக்க அடிவருடி அல்லவா? மேலும் அரேபிய முஸ்லிம்களுக்கு துரோகம் இழைத்தவர்கள். பலஸ்தீனியர்களை அநியாயமாக அகதிகளாக்கியவர்கள். அவர்களுக்குப் போய் இங்கிலாந்தும் பிரான்சும் ஒத்துழைப்புக் கொடுத்தன என்றால், அந்த இருதேசங்களின் யோக்கியதை என்ன என்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

உண்மையிலேயே பிரிட்டன் இதனை எதிர்பார்க்கவில்லை. சுயஸ் கால்வாய் ஒரு பொதுச்சொத்து என்று எத்தனை எடுத்துச் சொன்னாலும் யாரும் கேட்கத் தயாராக இல்லை. வீண் வம்பாகத்தான் எகிப்தின்மீது தாக்குதல் நிகழ்த்தினார்கள் என்று ஒட்டுமொத்த மூன்றாம் உலக தேசங்களும் எதிர்ப்புத் தெரிவித்துவிட்டன.



சற்று நுணுக்கமாக கவனிக்க வேண்டிய விஷயம் இது.

சற்றேரக் குறைய இதே 1956 காலகட்டத்தில் ஹங்கேரியில் ஒரு புரட்சி வெடித்தது. இதைச் சிறிய புரட்சி என்றோ பெரிய கலவரம் என்றோ சொல்லலாம். இந்தப் புரட்சிக்குக் காரணமாக, பின்னணியில் இருந்து செயற்பட்டது, அமெரிக்கா. வழக்கம்போல அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. ஹங்கேரியில் ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த புரட்சியாளர்களை ஒருங்கிணைத்து, பயிற்சியளித்து, அரசுக்கு எதிரானதொரு யுத்தத்தை ஆரம்பித்துவைத்தது.

ஆனால், இந்தப் புரட்சியின் பின்னணியில் தான் இருப்பதாகவே சி.ஐ.ஏ அந்த முறை காட்டிக் கொள்ளவில்லை. அமெரிக்கத் தொடர்பு இருப்பது வெளியே தெரியவேண்டாம் என்றே அப்போதைய அமெரிக்க அதிபர் ஐசனோவர் கருதினார்.

ஆனாலும் இதெல்லாம் மூடிவைக்கக் கூடிய விஷயம் இல்லை என்பதால் விஷயம் வெளியே பரவிவிட்டது. உடனே அமெரிக்காவின் பரம எதிரியான சோவியத் யூனியன், உலகெங்கும் அமெரிக்காவின் இந்தச் சிறுமைத்தனத்தைப் பறைசாற்ற ஆரம்பிக்க, பல தேசங்களில் – குறிப்பாக மூன்றாம் உலக நாடுக்ளில் அமெரிக்காவைப் பற்றிப் பேசினாலே மக்கள் காறித்துப்ப ஆரம்பித்தார்கள்.

எப்படி ஹங்கேரி விஷயத்தில் அமெரிக்கா அவமானப்பட்டதோ, அதேபோல சுயஸ் கால்வாய் விஷயத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவாக இங்கிலாந்தும் பிரான்சும் போரில் குதித்ததற்குப் பல்வேறு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

எகிப்து ஒரு கொசு. பொருளாதார ரீதியில் அதுவரை என்ற ஒரு வளர்ச்சியையும் காணாத ஏழை தேசம். அங்கே போய் இப்படியா செத்த எலியை அடித்துக் கொண்டிருப்பது என்று உலகமே இந்த இருதேசங்களைப் பார்த்து ஏளனம் செய்தது. மேலும் சுயஸ் கால்வாய்ப் பிரச்சினையின் வேர் எது என்கிற

யுத்தம் தொடங்கிய ஓரிரு தினங்களிலேயே இன்னொரு கூத்தும் அரங்கேறியது. பிரிட்டனும் பிரான்சும் இஸ்ரேலை ஆதரிக்கின்றன என்று தெரிந்ததுமே சோவியத் யூனியன், எகிப்துக்குத் தன்னுடைய முழு ஆதரவைத் தெரிவித்ததுடன் அல்லாமல், தேவைப்பட்டால், தானும் யுத்தத்தில் எகிப்தின் சார்பில் பங்கேற்க வருவேன் என்று பயமுறுத்தியது.

சோவியத் யூனியன் யுத்தத்தில் பங்கெடுத்தால் பிரிட்டன் அவசியம் அமெரிக்காவைத் துணைக்குக்கூப்பிடும். அமெரிக்காவும் களத்தில் இறங்கினால், அது சுயஸ் கால்வாய், எகிப்து, இஸ்ரேல் என்கிற எல்லைகளைக் கடந்து ஒற்றைப் பரிமாணம் பெற்று அமெரிக்க – சோவியத் யுத்தமாகிவிடும். அவர்களின் தனிப் பகைக்கு எகிப்து பலிகடாவாகும். என்னென்னவெல்லாமோ நடந்துவிடும். இது பெரும் அபாயம். பிரிட்டனேகூடக் கூப்பிடவேண்டாம். சோவியத் களமிறங்கியது தெரிந்தாலே அமெரிக்காவுக்குப் போதும். தானாகவேகூட அந்தத் தேசம் யுத்தக்களத்துக்கு வந்து இறங்கிவிடும்.

இவ்வாறு அத்தனை தேசங்களுமே எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்க, எதிர்பாராததொரு திருப்பமாக, அமெரிக்காவே முன்வந்து போர் நிறுத்தத்துக்கு அழைப்புவிடுத்தது. ஒரு பக்கம் பிரிட்டனிடமும் பிரான்சிடமும் கலந்துபேசி யுத்தத்தைக் கைவிடச் சொல்லிவிட்டு, மறுபக்கம் எகிப்து அதிபர் நர்சருடன் அமெரிக்க அதிபர் ஐசனோவரே பேசினார்.

முதலில் பிரிட்டன் இதற்கு மறுத்தது. சுயஸ் கால்வாயை நாசர் திறந்து விட்டாலொழிய யுத்தத்தை நிறுத்துவது சாத்தியமில்லை என்று சொன்னது. அமெரிக்கா விடவில்லை.

''காரணங்களைக் கேட்காதீர்கள். போரை நிறுத்தாவிட்டால் பிரிட்டனின் நாணயமான 'பவுண்ட்'டின் மதிப்பை அமெரிக்கா வீழ்த்திவிடும்'' என்று பகிரங்கமாக மிரட்டத் தொடங்கியது.

(தொடரும்...)

# காதல் ஊஞ்சல்

14



சில மாதங்களில் மட்டக்களப்பு தாதிகள் பயிற்சி பாசறைக்கு செல்லும்படி விபரக்கடிதம் கையில் கிடைத்தது. கடிதத்தை கையில் எடுத்த புஸ்பாவின் கண்ணில் கடல் பெருக்கெடுத்தது அதை அவதானித்த சித்தி அபிராமி அருகில் நெருங்கினாள்.

அவளும் கண்ணீர் வடித்தாள். எது எப்படியானாலும் ஒருவர் அழுவதைக் கண்டால் மற்றவர்களும் அழுகை வருவது இயல்பு. அப்படியோ அல்லது ஆத்தமபூர்வ நட்பில்தான் அபிராமியின் கண்களும் சிந்தியதோ என்னமோ எனக்கு தெரியாது. ஆனாலும் அவளும்கூடவே அழுதாள் என்பது மட்டும் உண்மை!

நாளும் வேகமாக விரைந்தது. நாளை விடிந்தால் பயணம். பயணத்திற்குரிய தயார்ப்படுத்தலில் புஸ்பா ஈடுபட்டாள். மாலை நேரத்தை நெருங்கியபொழுதும் புஸ்பாவின் பகல் இரவாவதற்கு தாமதமாகவே இருந்தது. இரவானபோதும் விடிவதற்கு பல மணி நேரத்தை புஸ்பா செலவிட்டாள்.

அது எல்லோருக்கும் ஏற்படும் சங்கடமான நிலைதான் புஸ்பாவையும் விடவில்லை!

அன்றுதான் புஸ்பாவிற்கு இரவுகளில் மிகவும் நீளமான இரவு.

அந்த இரவில் அவளின் நினைவுகள் மூழ்கி மூழ்கி நீந்தின. அவளுடைய விடியற்காலை விலகிவிலகி கொஞ்சம் தொலைவில் தெரிந்தது!

அவளும் மாறி மாறி புரண்டுபார்த்தாள் தூக்கம் தொலைந்தே கிடந்தது. நேரத்தை பார்ப்பதற்காக எழுந்து உட்கார்ந்தாள். சேவல் கடிகாரம் கூவிக்கூறியது. விடியற்காலையை தொட்டுவிட்டதாக!

எழுந்து கதவை திறந்து கிணற்றடி நோக்கி நடந்தாள். காலைக் கடமைகளை முடித்துவிட்டு எதிர்காலக் கடமைகளில் குதிப்பதற்காக.

காகங்களின் கரைதலிலும் குயில்களின் கீதங்களிலும் குருவிகளின் கீச்சலிலும் மத்தியில் கிழக்கு வானில் சிவப்பு நிறத்தில் சூரியன் கடலில் முகம் கழுவிக்கொண்டு சேவைக்கு வந்திருந்தான்.

புஸ்பாவும் புயல் வேகத்தில் புறப்பட்டாள். பேரூந்து தரிப்பிடம் நோக்கி அதற்குமுன் சித்தி அபிராமியை எழுப்பிப் பயணம் கூறினாள்.

பிரிவதை நினைத்து வளர்த்த பாசம் அபிராமியை அழவைத்தது.

அன்றைய அழுகைய்யைவிட இன்றைய அழுகை இதயம் தொட்டதால் விழிகள் மழையாய் கொட்டின! எவ்வளவு கோபம் இருந்தாலும் ஒருவருடன் சில காலம் பழகி பிரிவெதன்றாலே மனிதமுள்ள மனிதர்களிடம் மனச்சாட்சி உரையாடும்.

அந்த உள்ளக் குமுறலின் உத்தரவாதம்தான் இன்றைய அபிராமியின் கண்ணீரும்.

அபிராமி அழுத கண்களை துடைப்பதற்கு தன் கைகளை கைக்குட்டையாக்கினாள். துடைத்துக்கொண்டாள்! புஸ்பாவின் விழியையும் துடைத்துவிட்டாள். அழைத்தாள் தன் சின்ன மகளை, கையில் எடுத்தாள் புஸ்பாவின் பயணப் பொதிகளை. இப்பொழுது மூவரும் எதையெதையோ முணுமுணுத்த வண்ணம் முச்சந்தி பஸ் தரிப்பு நிலையம் நோக்கிச் சென்றனர்.



அங்கு மட்டக்களப்பு பஸ் தரித்து நின்றது. புஸ்பா ஏறி அமர்ந்துகொண்டாள். பயணத்திற்காக இரண்டாயிரம் ரூபாய் கையில் இருந்தது. அவளுடைய மிச்ச நம்பிக்கை காதில் தொங்கிய தோடுகளில் தங்கியிருந்தது.

அதற்கிடையில் அபிராமியும் மூவாயிரம் ரூபாவை கொடுத்தாள். மொத்தமாக ஐயாயிரம் ரூபாவுடன் புஸ்பாவின் தாதிப்பயணம் ஆரம்பிக்க அடியெடுத்து வைத்தாள்.

குறிப்பிட்ட தாதியர் பயிற்சி நிலையத்தை சென்றடைந்தபொழுது பிற்பகல் இரண்டு மணி தாண்டிக்கொண்டிருந்தது.

அங்கு சென்றிருந்த அனைவருக்கும் அங்கிருந்த அதிகாரியால் அனைத்து உபதேசங்களும் வழங்கப்பட்டது. அதற்கிடையில் புஸ்பாவுக்கு பிரசன்னா எனும் தோழியும் அறிமுகமானாள். அவளுடைய சொந்த இடமும் வசிப்பிடமும் மட்டக்களப்புதான்.

பிரசன்னா அறிமுகமானதில் புஸ்பாவிற்கு பேரானந்தம். அதைவிட ஆனந்தம் பிரசன்னாவிற்கு. ஏனெனில் புஸ்பாவின் நற்குணம் எளிமை, ஏழ்மை அவைகளெல்லாம் பிடித்தது.

அதற்கெல்லாம் அப்பால் புஸ்பாவின் அனாதை வாழ்க்கை பிரசன்னாவை பாதித்தது.

(ஊஞ்சல் தொடரும்....)



மிஹிந்தலை A.பாரிஸ்




# வெளியீடுகளைப் பாதித்து வரும் பாடசாலை நிர்வாக முரண்பாடுகள்



பொதுவாக இன்றைய சமூக நிறுவனங்கள் பலவற்றில் முரண்பாடுகள் முற்றிய நிலையில் பல பிரச்சினைகள் உருவாகிவருகின்றன. இருப் பினும் இதன் வெளியீடுகள் பொருள் அளவில் இருப்பதனால் மதிப்பீட்டின்மூலம் முரண்பாடுகள் வெளியீட்டைப் பாதிக்காத வகையில் பார்த்துக்கொள்ளலாம்.

ஆனால் சில சமூக நிறுவனங்களில் இம்முரண்பாடுகள் வெளியீட்டைப் பாதிக்கின்றன. அதில் ஒன்றுதான் பாடசாலை. தட்டிவிட்டால் உடைந்துவிடும் முட்டைக்கருக்களைத் தத்தெடுக்கும் களமிது. வெளியீட்டை வெறும் பரீட்சை யில் மாத்திரம் அளக்கமுடியாத ஆளணி விருத்தியிது. பண்பு சார் விருத்திகளை படிப்படியாக உருவாக்கவேண்டிய பக்குவமான இடமிது. இப்பாடசாலை நிர்வாகங்களில் முரண்பாடுகள் ஏற்படும்போது எதிர்கால சந்ததிகளைப் பெருமளவு அது பாதிக்கும். வெளியீடுகள் வெற்றிகரமாக இல்லை என்பதுகூடத் தெரியாமல் தோல்வி நிலை உருவாகும்.

ஆகவே இப்பாடசாலைகளில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்க அனைவரும் ஒன்றிணையவேண்டும்.

அதிகாரப் போர்வைகளைக் கையில் எடுத்து "யார் பெரிது...?" எனும் நிலைப் பாடுகள்தான் பாடசாலை முரண்பாடுகளிற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இது பெண் பெரும்பான்மை நிர்வாகங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. தாம் அப்பாடசாலை சமூக மட்டத்தில் தாமாக நிர்ணயித்த ஓர் நிலைக்களத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக தாமே தமக்குள் போடும் ஓர் அர்த்தமற்ற அந்தஸ்துதான் அது.

இது தமது தராதரம் தமக்கே போதாது எனும் அடிப்படையில் உருவாகும் அர்த்தமற்ற ஆதங்கமாகும். "தம்மை இந்த சமூகம் புறக்கணித்துவிடுவார்களோ..."? என்கின்ற உள்ளுணர்வால் உருவாகும் வெளிப்பாட்டு மேலோங்கலாகும். ஒருவர் "தனது தராதரம் தனக்குப்போதும் எனவும், எனது தராதரங்களை எனது ஆற்றலினால் என்னால் நிரூபிக்க முடியும்" என எண்ணுவாராயின் அனாவசியமான அர்த்தமற்ற விடயங்களில் தனது கௌரவத்தைத் தேட முற்பட மாட்டார்கள்.

பாடசாலைகளைத் தமது உருத்துடைய களமாக்கி தமக்கு அப்பால் பாடசாலை வெளியீடுகளின் வெற்றிக்காக உழைக்கும் மனோபாவம் இன்று பலர் மத்தியில் குறைந்துவிட்டன. பலர் வெற்றிக்காக உழைக்கின்றனர், அதை மறுப்பதற்கு இடமில்லை. ஆனால் அந்த நல்ல மனங்கள் ஏன் முரண்பாடுகளைக் கண்டு முகம் கோணுகின்றனர் என்பதுதான் இங்கு வாதம். அதிபரோடு அல்லது வேற்று ஆளணியினரோடு முரண்பட்டுவிட்டு அந்த அர்ப்பணிப்பு சேவையில் இருந்து ஒதுங்குவது எந்தவகையில் ஏற்புடையது...? அதிபருக்காகவோ அல்லது வேற்று ஆளணியினரிற்காகவோ நாம் சேவை செய்யவில்லையே...! எமக்காக எம்சார்ந்த பிள்ளைகளிற்காகத்தானே நாம் வேலை செய்கின்றோம். சுவாமி விவேகானந்தர் ஓர் இடத்தில் சொல்கின்றார். "சுயநலம் உள்ளவனாய் இரு" என்று. ஏன் தெரியுமா...? எமக்காக நாம் சேவைசெய்யும் போது எந்தக் குழப்பங்களும் எம்மை அணுகாது என்பதற்காகவே. ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். நாலுபேர் சேரும் செயற்பாட்டில் நாலு முரண்பாடுகள் வந்தேதான் தீரும். இதனைத் தீர்ப்பதற்கு ஒரு துருவத்தில் முயலவேண்டும். மறுதுருவத்தில் இம்முரண்பாடுகள் வெளியீடுகளைப் பாதிக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்.

தொடர்பாடல்களில் ஏட்டிக்குப் போட்டி என்பதற்கப்பால் எது சரி. எது பிழை என்பதை எம்மவர்கள் பார்ப்பது குறைவு. அதை நாம் முதலில் புரிந்து தொடர்பாடல்களை மேற்கொள்ள வேண்டும். எமக்குள் ஒரு நியாயத்தைப் போட்டு அந்த நியாயத்தோடு எமது நிலையில் இருந்து மாத்திரம் சிந்திக்கின்றோம் அது தவறு. அடுத்தவரின் நிலையிலும் நின்று நாம் சிந்திக்கவேண்டும்.

எம்மால் ஒன்றைவிட்டுக் கொடுக்க முடியவில்லையென்றால் அதை எப்படி நாம் மற்றவர்களிடத்தில் எதிர்பார்க்க முடியும்...? விட்டுக்கொடுப்பு என்பது தோலவியல்ல. ஒரு விதை முளைப்பதற்கு நாம் போடும் உரமது. சரியான நியாயத்தை சிலருக்குப் புரியவைக்க முடியவில்லையென்றால் இவர் இப்படித்தான் என்று விட்டு விட்டு விலகுவதே சிறந்தது. இதற்காக முரண்படுவோமேயானால் அவருக்கும் எமக்கும் என்ன வேறுபாடு.

சேவை என்பது எதுதெரியுமா? சேருமிடம் மற்றவர்க்குத் தெரியாது செய்வதுதான் சேவை. ஆனால் இன்று மாலைகளிற்காகவே மாறுகின்றது சேவைகள்.

"கனவுகாணும் வாழ்க்கை யாவும் கலைந்துபோகும் கோலங்கள்

துடுப்புக் கூடப்பாரமென்று கரையைத்தேடும் ஓடங்கள்..."

எனக்கூறிய கண்ணதாசன் இறுதியில் கடமையை இன்றே செய்வதில் தானே ஆனந்தமென்கின்றார். இந்த வாழ்க்கையில் அது ஒன்றுதான் நிரந்தரமானதும் நிலையானதுமான சந்தோஷம். அதற்கு முரண்பாடுகளினால் முற்றுப்புள்ளி வைக்காதீர்கள்.

---

# யாம் பெற்ற இன்பம்

**பூ.நகுலன், B.A.ஆசிரியர்**

பழந்தமிழ் இலக்கியங்களை கற்றல் அவ்விலக்கியங்களின் பொருளை அறிதல் அவ்விலக்கியங்களின் பொருளில் காணும் சுவையை ஏனையோருக்கு எடுத்துரைத்து இன்பம் காணுதல் முதலான செயற்பாடுகள் இன்றைய காலத்தில் அருகி வருகின்றதை காணமுடிகின்றது.

இத்தகைய ஒரு நிலைக்கு காரணமான விடயங்கள் பல கூறப்படலாம், இனங் காணலாம். இந்த நிலையில் இலக்கிய அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்துகொள்வதற்குரிய வாய்ப்பான நிலை வாய்க்கப் பெறாமையை முக்கிய காரணமாக கொள்ளலாமோ எனக் கருத இடமளிக்கவும் செய்கின்றது. இலக்கியங்களை கற்று அவற்றின் நுண்பொருள்களை இனங்காண்பவர் அருகிவருகின்றார்கள். அதனை ஏனையோருடன் பகிர்வதில் செலுத்தும் கவனமும் குறைந்துவருவதையே காணமுடிகின்றது.

நாம் வாழும் காலத்தில் இத்தகைய செயற்பாடுகள் அருகிவருகின்றது. எனினும் இலக்கிய உணர்வை ஏனையோருடன் பகிர்ந்துகொள்வதிலும், தமிழ்ச்செல்வத்தை தகுதி வாய்ந்தவர்களுக்கு வழங்குவதிலும் சிறப்புமிக்க ஒருவர் எமது காலத்திலும் வாழ்ந்து அமரராகிய உண்மையை மறந்துவிட முடியாதுள்ளது. அத்தகைய அறிஞர் ஒருவரோடு உடன் இருந்து இலக்கிய அனுபவத்தைப் பெற்றுக்கொண்டவன் என்ற அடிப்படையில் அனுபவம் ஒன்றை வெளிப்படுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

'புலவர் ம.பார்வதி நாதசிவம்' ஐயா அவர்களோடு ஏற்பட்ட தொடர்பால் மாலைநேரங்களில் அவரது இல்லத்தில் இலக்கிய உரையாடல்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் சங்கப் பாடல்கள், திருக்குறள், முத்தொள்ளாயிரம் முதலான இலக்கியங்கள் தொடர்பான உரையாடல்களும், அதன்மூலம் பழந்தமிழ் இலக்கியங்களை புதிய பார்வையில் நோக்கும் சிந்தனைகளை பெற்றுக்கொண்ட அனுபவங்களும் ஏற்பட்டதுண்டு.

அன்றைய மாலைப்பொழுதில் பழந்தமிழ் இலக்கியங்களில் தலைவியைப் புகழ்ந்து தலைவன் உரைக்கின்ற பாடல்கள் தொடர்பில் உரையாடல் ஆரம்பமானது. மான்விழி, தேன்மொழி, பூவிழி, கனிமொழி, வேல்விழி, பூங்குழல் என்றெல்லாம் தலைவியை தலைவன் வர்ணிக்கின்ற அழகு தொடர்பான கருத்துக்கள் இடம்பெற்றன. உரையாடல் இன்னும் சற்று ஆழமாகச்சென்றது. தலைவியின் கண்களை மான்விழி, கயல்விழி, மலர்விழி, வேல்விழி என்று உவமை கூறுகின்ற தமிழ்ப் பாடல்களின் சிறப்பு தொடர்பாக உரையாடல் திசை மாறியது.

தலைவியின் கண்ணினைக் கண்ட தலைவன் அக்கண்ணினைக் குவளை மலர்கள் காணுமாக இருந்தால் அகக் கண்களைவிட நாம் அழகாகமாட்டோம் என்று வெட்கப்படும். அவ்வாறு வெட்கப் பட்டு நிலத்தினை நோக்கும் என்று தலைவன் கூறுவதாக அமையும். திருக்குறள் ஒன்றின் கருத்து எடுத்துரைக்கப்பட்டது.

**"காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்**
**மாணிழை கண் ஒவ்வேம் என்று"**



என்ற குறட்பாவின் ஆதாரமாக உரையாடல் தொடர்ந்து, குவளை மலரினை ஏனைய கவிஞர்கள் தலைவியின் கண்களுக்கு உவமை கூறினால் குவளை மலர்களைக் காட்டிலும் தலைவியின் கண்கள் அழகு வாய்ந்தவை என்பதை தலைவன் முடிவாகக்கொள்கின்ற சிறப்பினை தரிசிக்க முடிந்தது. இக்குறட்பாவின் கருத்து தொடர்பாக இவ் உவமையை விளக்குவது தொடர்பில் அறிஞர் நின்றுவிடவில்லை. இக்குறட்பாவின் பொருளும் அதன் சிறப்பும் தொடர்பாக திருக்குறள் இலக்கியத்தை வாசித்து அனைவரும் அறிந்து கொள்ளமுடியும்.

ஏனையவர்களால் கண்டு உணரமுடியாத ஒரு பொருளை, தான் கண்டு அனுபவித்த இன்பத்தை எங்களோடு பகிர்ந்துகொண்ட சிறப்பே அறிஞரின் சிறப்பாக அமைந்திருப்பது இக்கட்டுரையின் அடிநாதமாகவும் அமைகின்றது.

குறட்பா ஒன்றின் ஏழு சீர்கள் (சொற்கள்) அமைந்திருக்கின்றன. ஏழு சீர்களும் பயன் பட்டிருக்கும் சிறப்பை வெளிப்படுத்துவதும், திருவள்ளுவர் சொற்களை கையாளுவதில் கொண்ட சிறப்பும் இக்குறள் மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

காணின் குவளை என்ற முதலிரு சொற்களின் கருத்தானது குவளை மலர் (தலைவியைக்) கண்டால் என்பதாகும்.

கவிழ்ந்து என்பதன் கருத்து தலைவியை கண்ட குவளை வெட்கத்தால் கவிழும் என்பதாகும்.

நிலன்நோக்கும் என்ற தொடர் குவளை நிலத்தை பார்க்கும் என்பதாகும்.

குவளை மலர்கள் நீரில் வாழ்கின்ற இயல்பினை உடையவை. அவை வெட்கத்தால் தலைகவிழ்ந்தால் நீரை அல்லவா நோக்கவேண்டும். திருவள்ளுவர் நீரைநோக்கும் என்று கூறாமல் நிலன் நோக்கும் என்று ஏன் கூறினார். சிந்தனை இவ்விடத்தில் ஆரம்பமானது.

எடுத்தோம், கவிழ்த்தோம் என்று முடிவு எடுப்பவர்கள் நாம். திருவள்ளுவர் பிழை-யாகக் கூறிவிட்டார், திருக்குறளில் பிழை உள்ளது என்கிறோம்.

திருவள்ளுவர், மனநிலையை நன்கு உணர்ந்த அறிஞர் சிறிய புன்முறுவல் செய்தார். அப்புன்னகைக்குள் பூத்திருக்கும் அழகிய தமிழ் மலரின் வாசனையை அன்று நாம் நுகர்ந்து அனுபவித்து இன்பம் அடைந்தோம்.

குவளை கவிழ்ந்து என்ற தொடர், நிலன்நோக்கும் என்ற தொடர் இரண்டு தொடர்களிலும் ஒரே பொருள் அமைந்து இருக்கவில்லை. இரண்டு தொடரினையும் ஒரு பொருளில் திருவள்ளுவர் கையாளவில்லை என்ற கருத்தை அறிஞர் எடுத்துரைத்தார்.

திருக்குறள் இரண்டு அடிகளை உடைய ஏழு சீர்களைகொண்ட குறள் வெண்பா யாப்பில் அமைந்தது. சுருங்கிய வடிவில் விரிந்த பொருளை விளக்குவதற்கு இந்த யாப்பு பெரிதும் உதவும். இப்படியிருக்க ஒரே குறளில் இரண்டு தொடர்களை ஒரு பொருள்தர அமைத்தால் அது கவிஞருக்கு அழகல்ல. திருவள்ளுவர் அவ்வாறு செய்திருந்தால் அவரது இலக்கியம் வாழும் இலக்கியமாகக் அமைந்திருக்க முடியாது.

குவளை மலர் தலைவியின் கண்களை காண்கின்றது. அக்கண்களின் அழகைக் கண்டு ஆச்சரியப்படுகின்றது. தலைவியின் கண்களுக்கு ஒப்பாக மாட்டோம் என்று வெட்கப்படுகின்றது. வெட்கத்தால் தலைகவிழ்கின்றது. இதுவரை இடம்பெற்ற நிகழ்வுகள் ஒரு சம்பவமாக கொள்ளுதல்வேண்டும்.

நிலன்நோக்கும் என்ற தொடர் குறிக்கும் பொருளை கருதினால் அந்தக் கண்களை உடைய தலைவி பிறந்து வளர்ந்து உலாவிய நிலத்தினை குவளை மலர்கள் பார்க்கும் என்ற பொருள் கிடைக்கின்றது.

இங்கு நீரில் பிறந்ததைவிட நிலத்தில் பிறந்து அழகாக தலைவி இருந்தமையால் தலைவி பிறந்த இடத்தை, நிலத்தை, குவளை பொறாமையோடு அல்லது ஆசையோடு பார்த்தது என்ற பொருள் கிடைக்கின்றது.

தலை கவிழ்ந்தமை ஒரு நிகழ்வாகவும், நிலம் நோக்கல் இன்னொரு நிகழ்வாகவும் இரண்டு நிகழ்வுகளை திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார். என்பதாக அறிஞர் பொருள் உரைத்தார்.

அன்றைய மாலைப் பொழுது இவ்வாறானதொரு இலக்கியப் பகிர்வோடு நிறைவுபெற்றது. இத்தகைய அறிஞர்களின் தொடர்பு வாய்க்கப் பெற்று நாம் அடைந்த இன்பம் இன்றைய கால எதிர்கால சந்ததியினர் பெற்றுக்கொள்வார்களா? என்பது தொடர்பில் கேள்விகளே நிறைய எழுகின்றன. விடைகாண்பதற்கு அறிஞர்கள் என்றுகூறிக் கொள்பவர்கள் முன்வரவேண்டும்.

தமிழக விவகாரம்

# ஜெயலலிதாவும் பாரதிய ஜனதாவும்

■ தொகுப்பு: வேணு கிருஸ்ணா



ஜெயா, பரப்பன அக்ரஹாராவில் இருந்து திரும்பிய இந்த சிறிய இடைவெளி தமிழக அரசியல் வட்டாரங்களில் பல கலவையான விளைவுகளை உண்டாக்கியிருக்கிறது. அடிமட்ட அ.தி.மு.க தொண்டர்கள் திடீர் அதிர்ஷ்டத்தை சந்தித்ததில் திகைத்துப் போயிருக்கிறார்கள். மனிதசங்கிலி, பால்குடம், உண்ணாவிரதம், மொட்டை போடுவது, தீக்குளிப்பு என ரகவாரியான வேலைகள் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் அவர்களுக்கு கிடைத்தது.

அ.தி.மு.க நிர்வாகிகள் நிலை சற்று மோசம்தான். மம்மி ஜெயா டி.வி மட்டுமே பார்ப்பவர் என்பதால் தினமும் ஒரே மாதிரி போராட்டத்தை அவர் டி.வியில் பார்த்துக்கொண்டிருந்தால் போரடிக்கும். ஆகவே புதிய போராட்ட யோசனைகளை அவர்கள் செயற்படுத்தினார்கள். அதற்கு ஆள்பிடிப்பது, செலவுசெய்வது என கடுமையான கழகப் பணிகள் அவர்களுக்கு இருந்தன. ஜெயா டி.வியின் வீடியோ பதிவுகள் மட்டுமே அ.தி.மு.க.-வில் சாட்சி என்பதால் அதற்கும் அவர்கள் ஏற்பாடு செய்தாகவேண்டிய வேலை வேறு.

உள்ளிட்ட பெரும்பாலான போயஸ் கார்டன் வாயிற்காவலர்கள் போதுமான அளவுக்கு தங்கள் இருப்பை பதிவு செய்துவிட்டார்கள். சிலநாட்களாக தற்செயல் விடுப்பில் இருந்த சீமான் நெடுமாறன் ஆகிய தமிழ்தேஷ் தலைவர்களும் ஜெயாவின் மனம் கோணாதவாறு அறிக்கைவிட்டாயிற்று. ஜெயா கும்பலின் சாராயக் கம்பெனிகளை நிர்வகித்த சோ ராமசாமிகூட சுப்ரீம் கோர்ட்டில் தங்கள் தரப்பு எப்படி ஜெயிக்கும் என்பதை மேலோட்டமாக துக்ளக்கில் எழுதிவிட்டார். இப்படி அ.தி.மு.க.-வின் அடிமைகளும் நட்பு சக்திகளும் தங்களது கடமையை ஆற்றியபிறகும் முக்கியமான சில குழுக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் நிற்கிறன, அதில் ஒன்றுதான் பா.ஜ.க.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் ஏவப்பட்ட மங்கல்யான் விண்கலத்தையே மோடியின் சாதனை எனத் தம்பட்டம் அடிக்கும் பா.ஜ.க இந்த தீர்ப்பைப் பற்றி மட்டும் பேசமறுக்கிறது. டைம்ஸ் நவ் ஊடகத்தின் அர்ணாப் கோஸ்வாமி பிராமண தலைவர்களுக்கு எதிராக கேள்வி கேட்பதென்பது வாழ்நாள் அதிசயம். அப்படிப்பட்ட அர்ணாபே இந்த தீர்ப்பு குறித்த பா.ஜ.க.-வின் கருத்து என்ன என்று அதன் செய்தித் தொடர்பாளரிடம் பத்து நிமிடம் விடாமல் கேள்வி கேட்கிறார். ஆனாலும் கடைசி-வரை அவரால் பா.ஜ.க.-வின் கருத்தைப் பெற முடியவில்லை.

தீர்ப்பு வெளியான முதல் வாரத்தில் தமிழக பா.ஜ.க தலைவர்கள் இது பா.ஜ.க தமிழகத்தில் வலுவாக காலூன்றுவதற்கான நேரம் எனச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களும் மௌனம் காக்கிறார்கள். கல்யாண வீட்டில் வெற்றிலைக்கு சுண்ணாம்பு வாங்கிக்கொடுத்தாலே இது நான் நடத்தி வைக்கும் கல்யாணம் என பெருமையடிக்கும் இயல்புகொண்ட பா.ஜ.க தலைவர்களுக்கு என்னாயிற்று என யோசிக்கையில்தான் ஒரு உண்மை உரைக்கிறது. அதாவது மேக்கப் புருஷ் மற்றும் பேன்சி டிரஸ் பீ எம் மோடி அவர்கள் இன்னமும் இது குறித்து ஒரு கருத்தும் சொல்லவில்லை.

பா.ஜ.க ஒரு வைரசைப் போன்றது, அதனால் இன்னொரு உயிரைப் பற்றிக்கொண்டு மட்டுமே வளர இயலும். சிறையில் இருந்து விடுதலையாவதற்காக வெள்ளையனின் காலைப்பிடித்த வீரசாவர்கர் காலம்தொட்டே அது இசுலாமியர்கள் மீதான துவேஷம் எனும் ஒற்றைக் கருத்தாக்கத்தை கொண்டு வளர்ந்தது. ஆனால் தமிழகத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற இசுலாமிய வெறுப்பு மட்டும் போதாது. தமிழக மக்களில் பெரும்பான்மையானவர்கள் மாட்டு மூத்திரத்தை, மாட்டு மூத்திரமாக மட்டுமே கருதும் இயல்புகொண்டவர்கள் என்பதால் இங்கே சில கூடுதல் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

அதற்காகத்தான் நடிகர் ரஜினியை இழுக்க முயற்சி செய்கிறார்கள். பா.ஜ.க சகவாசத்தால் விஜயகாந்துக்கான கதியை நினைத்தோ, என்னவோ கன்னட பாபா இழுத்தடிக்கிறார். பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்வதைத் தவிர வேறு பெரிய கஷ்டங்கள் இருக்காது எனும் உத்தரவாதம் இருந்திருந்தால் அவர் அரசியலுக்கு வர என்றைக்கோ ஆண்டவனின் கட்டளை கிட்டியிருக்கும். (இப்படி மனதுக்குள் கேட்கும் குரலுக்கு காத்திருப்பது சூப்பர் ஸ்டாருக்கு மட்டுமே சரி. சாதாரண மக்கள் இந்த பிரச்சினையை உடனே கவனிக்க வேண்டும். மனத்துக்குள் ஒலிக்கும் ஒரு குரல் உங்களை வழிநடத்துவதென்பது ஸ்கீசோ.:.ப்ரேனியா எனும் கடுமையான மனச்சிதைவு நோய்க்கான மிக முக்கியமான அறிகுறி.)

ஊழல் எதிர்ப்பு இயக்கங்களின் ஒட்டுமொத்த பலனையும் பா.ஜ.க பக்கம் கொண்டுபோக கடும் முயற்சி செய்த ஊடகங்கள் துணையோடு ஜெயாவுக்கான தண்டனையையும் பா.ஜ.க.-வின் சாதனையாக காட்டிவிடும் வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. (ஊழலை ஒரு சதவிகிதம்கூட சகித்துக்கொள்ள முடியாது என்பது கார்பரேட் காதலரின் வீரமுழக்கங்களில் ஒன்று). மேலும் இந்த வழக்கின் காரணகர்த்தாக்களில் ஒருவரான சுப்ரமணியசாமி எனும் ஹைகிளாஸ் தரகன் இப்போது பா.ஜ.க.-வில் இருக்கிறார். ஜெயா கைதின் பலனை அறுவடை செய்ய வாய்ப்பிருக்கும் தி.மு.க பெரும் மௌனத்தில் இருக்கிறது. ஆகவே இந்த சூழலை பயன்படுத்திக்கொள்ள எல்லா வாய்ப்பும் இருப்பதாக பா.ஜ.க உள்ளூர் தவளைகள் ஆரம்பத்தில் கருதின.

இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் எந்த நகர்வும் மத்திய பா.ஜ.க.-வில் இல்லை. இந்த தருணத்தை விட்டுவிட்டால் இனி இன்னொரு வாய்ப்புக்கு வழியில்லை, சுச்சா பாரத் உச்சா பாரத் மாதிரி ஏதாவது அறிவித்தாலும் அது தமிழகத்தில் எடுபடாது. இருக்கிற சுள்ளான் ரவுடிகளை வைத்து பிள்ளையார் ஊர்வலம் நடத்தவே நாக்கு தள்ளுகிறது.

இந்த அழகில் கம்யூனிசமும் பெரியார் கருத்துக்களும் இன்னமும் செல்வாக்கோடு இருக்கும் தமிழகத்தில் எங்கிருந்து கலவரம் நடத்தி என்றைக்கு ஆட்சியைப் பிடிப்பது? இந்த வயிற்றெரிச்சல்தான் பா.ஜ.க தமிழ்நாட்டு தலைவர்களின் முக பாவங்களில் வெளிப்படுகிறது. வழக்கின் அனுகூலத்தையும்விடவும் மனமில்லாமல், ஒரு பிராமண தலைவரை விமர்சிக்கவும் முடியாமல் அல்லல்படும் அவர்களது முகம் பரிதாபகரமானதாக இருக்கிறது.

திக்குதெரியாமல் தடுமாறும் இன்னொரு குரூப், சாட்சாத் பிராமண அறிவுஜீவிகள்தான். காங்கிரஸ் ஆட்சியில் கிருஸ்தவர்களும் அப்பிராமணர்களும் செய்த ஊழல்கள் வெளிச்சத்துக்கு வந்தபடியால் இவர்கள் கொஞ்சம் ஓவராகவே தர்மநியாயம் பேசிவிட்டார்கள்.

ஊழலுக்கு கடும் தண்டனை கொடுக்கவேண்டும். ஊழலை ஒழித்தால் இந்திய பொருளாதாரம் நட்டுக்கொள்ளும் என பல சின்னஞ்சிறு கதைகள் பேசி அண்ணா ஹசாரே போராட்டங்களில் வேலைமெனக்கெட்டு விளக்குப்பிடித்து (மெழுகுவர்த்திங்க) ஊழல் எதிர்ப்பு போராளிகளாக .:.போர்ம் ஆகிவிட்ட சங்பரிவாரத்தின் வெள்ளைக் கலர் பிரிவு இந்த தீர்ப்பை எப்படி எதிர்கொள்வது என தெரியாமல் தவிக்கிறது. பார்ப்பனன் வீட்டு தக்காளிச் சட்னி சூத்திரனின் இரத்தத்தைவிட மதிப்பு வாய்ந்தது எனும் மனுதர்மாவின்படி கொஞ்சம் மனதைத் தேற்றிக்கொண்டுதான் அவர்களால் பேசமுடிகிறது. ஆனாலும் தாங்கள் பேசும் வார்த்தைகள் இனி தண்டனை பெறப்போகும் சூத்திரர்களுக்கு சாதகமாகி விடக்கூடாது எனும் ஜாக்கிரதை உணர்வும் அவர்கள் வசம் இருப்பதால் பெரும் சிரமத்துடனேயே அவர்கள் பேசுகிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சட்டப்படி சலுகை வழங்குவதுகூட கல்வியின் தரத்தை பாதிக்கும் என நியாயம்பேசும் பானு கோம்ஸ் எனும் போராளி ஜெயாவின் குற்றத்தை மட்டும் பார்க்காதே அவர் செய்த நல்லவைகளையும் பார் என்கிறார். லாலுவுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டது என்பதால் ஜெயாவுக்கும் மறுக்கவேண்டும் என கட்டாயமில்லை என்கிறார் பத்ரி சேஷாத்ரி. எந்த ஆதாரங்களின் அடிப்படையில் ஜெயா தண்டிக்கப்பட்டாரோ அதே அடிப்படையில் அவரை இன்னொரு கோர்ட் விடுவிக்கவும் முடியும் என்கிறார் சோ ராமசாமி.

ஆகப்பெரும்பாலான இந்த வகையறா ஆட்கள் இந்த தீர்ப்பு சரி என்றோ, தவறென்றோ சொல்லாமல் இன்னும் அப்பீல் இருக்கிறது. அங்கே நிரபராதி என நிருபிக்க வாய்ப்பிருக்கிறது என்றுதான் சொல்கிறார்கள். பேஸ்புக் மொழியில் சொன்னால் இது ஒரு குறியீடு. சுப்ரீம் கோர்ட் எங்கள் ஏரியா என்று அதற்கு பொருள். பார்ப்பனரை மணந்து பார்ப்பனரகவே மாறிவிட்ட எம்.எஸ். சுப்புலட்சுமியைப் போல பார்ப்பன ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு பார்ப்பனராகவே மாறிவிட்ட கம்யூனிஸ்ட் ஆட்களும் இதையே சொல்கிறார்கள்.

ஆனால் அவர்கள் கவனத்துக்காக ஒன்றைக் குறிப்பிடவேண்டிய அவசியம் வருகிறது. "சுப்புலட்சுமி மடிசார் கட்டுவதை காலமான காஞ்சி சங்கராச்சாரி ஏற்றுக் கொள்ளவில்லை" அவாஅவா. அவாஅவா ஆச்சாரப்படிதான் நடந்துகனும் என்பதே அவரது அருள்மொழி.

இந்த ரணகளத்திலும் பா.ஜ.க ஆதரவு குழுவின் ஒரு குறிப்பிடத்தக்க உறுப்பினர் தனித்துத்தெரிகிறார். இதழ் ஆசிரியர் திருமாவேலன் ஜூவியில் (19.10.14) எழுதியுள்ள சதிவலை எனும் கட்டுரையில் பல விடயங்களை பூடகமாக தெரிவிக்கிறார். அவர் சொன்ன வார்த்தைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. அர்த்தம் பொதிந்த, சொல்லாமல் சொன்ன சொற்கள் சிவந்த எழுத்துக்களில் உள்ளன.

1996 செப்டம்பரில் சசிகலாவை கட்சியை விட்டு விலக்கிய ஜெயா பத்தே மாதங்களில் அவரை மீண்டும் சேர்த்துக்கொண்டார். 2011 டிசம்பரில் சசியை கட்சியைவிட்டு நீக்கினார். நான்கே மாதங்களில் மீண்டும் கட்சியில் சேர்த்தார். ஒரு முடிவை எடுத்தால் அதில் உறுதியாக இருக்கத் தெரியாதவர் ஜெயா.

இப்படி ஒரு தீர்ப்பு வரும் என்று ஜெயலலிதா எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், அவருக்கு அப்படி ஒரு சூழ்நிலையும் ஏற்படலாம் என்பதை அவரது வக்கீல் டீம் சொல்லவில்லை.

ஜெயாவுக்கு அவரது வழக்கின் தன்மையைக்கூட அவரது வக்கீல்களே சொல்லியாகவேண்டும். அப்படியானால் அவ்வழக்கு பற்றிய ஊடகங்களின் தகவல்களைக்கூட அவர் படிப்பதில்லை. ஆகவே அவர் செய்திகளையே படிக்காதவர். அதற்காக அடுத்தவர்களையே சார்ந்திருப்பவர்.

தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் சசிகலாவைப் பார்த்து ஜெயா முறைத்துள்ளார். எல்லா வக்கீல்களும் உங்கள் ஆலோசனைப்படி நியமிக்கப்பட்டவர்கள்தானே என்று ஜெயலலிதா சொன்னதாகவும் தகவல் - போயஸ் கார்டனின் முடிவுகள் யாவும் சசி[illegible]யின் ஆலோசனைப்படியே நடக்கின்ற[illegible] ஆக கடந்த 24 வருடங்களா[illegible]கவே ஜெயா சுயமாக முடிவெடுப்பதில்லை. சசிகலா எ[illegible]ம் அதிகார மையத்தால் அவர் எத்தனை முறை பாதிக்கப்பட்டாலும் அதிலிருந்து பாடம் கற்பதுமில்லை.

இப்போது ராம் ஜெத்மாலானியையும், ஹரீஷ் சால்வேயையும் கொண்டுவருபவர்கள் அப்போதே ஏன் பெரிய வழக்கறிஞர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துவரவில்லை? - தனக்காக வாதாடும் வக்கீலைக்கூட தெரிவு செய்யும் திறனற்றவர் ஜெயலலிதா.

தேவையில்லாமல் 24க்கும் மேற்பட்ட மனுக்களை தாக்கல்செய்து ஜாமீன் மனுவை சிக்கல் ஆக்கினார்கள். நீதிபதி குன்ஹாவை விமர்சித்து ஓர் மனுவை தாக்கல் செய்தார்கள். இத்தகைய அபத்தங்கள் ஜெயாவின் ஜாமீன் மனுவுக்கு சிக்கல்மேல் சிக்கலை உருவாக்கிவிட்டது - இந்தியாவுக்கே வழிகாட்ட வல்லவர் எனப் புகழப்படும் ஜெயா தன் வக்கீல்களைக்கூட வழிநடத்தத் தெரியாதவர். எந்த ஒரு செயலில் ஈடுபடும்போதும் அதனால் உருவாகும் எதிர்மறை விளைவுகளை கணிக்கத்தெரியாதவர். ஆகவே அவர் சமயோசிதமாக செயல்படத் தெரியாதவர். சுருக்கமாக சொல்வதானால் நிர்வாகத்திறனற்றவர்.

மேலோட்டமாக பார்க்கையில் சசிகலா குடும்பம் ஜெயாவை சிக்கவைக்க முயன்றதாக தோற்றமளிக்கும் இக்கட்டுரை ஜெயா மீதான தீவிரமான விமர்சனத்தை முன்வைக்கிறது!! மோடி, அமித்ஷா போன்ற தளபதிகளே ஜெயாவை விமர்சிக்க பயந்து பம்முகையில் அவர்களுக்கு சேவைசெய்த அணிலுக்கு இவ்வளவு துணிச்சல் வந்திருக்கிறது. கடந்த இருபதாண்டுகளில் இத்தனை உள்ளர்த்தங்களோடு எழுதப்பட்ட வீரம் செறிந்த கட்டுரை திருமா அவர்களுடையதாகத்தான் இருக்கும். ஆகவே பா.ஜ.க.வினர் அடக்கிவாசிப்பதைப் பார்த்து அவர்களை கோழை என்றோ அல்லது பா.ஜ.க. ஆதரவு அறிவுஜீவிகளின் ஊழல் எதிர்ப்பு பல்டியைப் பார்த்து அவர்களை பச்சோந்தி என்றோ கருதி காவி ஆதரவாளர்கள் கவலைப்படவேண்டாம். இருக்கிற இடத்தில் இருந்தபடியே எதிர்க்கட்சியை விமர்சிக்கும் ஆட்களும் பாஜக கூடாரத்தில் உண்டு.

வழித்தேங்காயை பிள்ளையாருக்கு உடைக்கலாமா? கூடாது என்றால் நேர்த்திக் கடனுக்கு வழியில்லை. உடைத்தால் பக்தி சந்தேகத்திற்குரியது. இதெல்லாம் தெருவோர பைரவர்களுக்கு கவலையில்லை. தேரில் உலாவரும் தேறிய வைரவர்களுக்குத்தான் பிரச்சினை! ஜெயா மீதான தண்டனையும் கூட ஆளும்வர்க்க அணிவரிசையில் இப்படி பல்வேறு தத்துவஞான குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்தவகையில் அம்மா இந்த தண்டனைமூலமாக நவரசங்களையும் கொண்ட மாபெரும் வேடிக்கையை மலிவான மற்றும் மகத்தான அடிமைகள் மூலம் நிகழ்த்தச் செய்திருக்கிறார். கண்ணிருப்போர் ரசிக்கலாம், சிவக்கலாம். ■

அளவெட்டி, ப.உதயகுமார்

# குடி குடியைக் கெடுக்கும்



**யாழ்.** குடாநாடு உள்ளிட்ட வடபகுதி குடிவகை மற்றும் புகையிலை சார் உற்பத்திகளை அதிகளவில் பாவிப்பதில் முன்னணி நிலையில் உள்ளதாக புள்ளிவிபரங்கள் வெளியாகி உள்ளது. இவற்றிலே பாடசாலை மாணவர்கள், தனியார் கல்லூரி மாணவர்களும் மதுப்பாவனையில் தாராளமான போக்கினைக் கடைப்பிடித்து வருவதாகவும் அதிர்ச்சியூட்டக்கூடிய செய்திகள் வெளிவந்தவண்ணமுள்ளன.

இந்தச் செய்திகளை நகைப்புக்கு இடமாகவோ அல்லது ஏனோதானோ என்று விட்டுவிட முடியாது! ஏனென்றால் இது சமூகத்தில பாரிய பிரச்சினைகளை உண்டாக்கக் கூடியது! நாகத்தின் வாயிலிருக்கக்கூடிய கொடிய விஷத்தை விட இவ்விடயம் சமூக, குடும்ப மட்டங்களில் பெரு விஷவாயுவாக வெளிவரக்கூடியது.

யாழ்.குடாநாடு உள்ளிட்ட வடபகுதி அண்மைக் காலமாக யுத்தங்களினால் வார்த்தைகளினால் வர்ணிக்கமுடியாத அளவுக்குப் பாதிப்புக்களையும், யுத்த அழிவுகளையும், உயிர்ச்சேதம், சொத்து அழிவு, அங்கவீனம் என்றெல்லாம் பெரும் சுனாமி அடித்து ஓய்ந்தநிலையில் இருக்கின்றோம்.

வீடு வாசல்களை விட்டு வெளியேறிய ஒரு பகுதி மக்கள் இன்னமும் வீடு வாசல்களுக்குப் போய்ச்சேரவில்லை. யுத்த அழிவுகளிலிருந்து இன்னமும் நாம் முழுமையாக வழமைக்கு திரும்பவில்லை. பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வாழ வழியின்றி தவித்துக்கொண்டிருக்க, காணாமல் போனவர்களின் விபரம் தெரியாமல் உறவுகள் தவித்துக் கொண்டிருக்க, எமது தாயகத்தின் விடுதலையை தமக்கும், தமது குடும்பங்களின் சுகபோக வாழ்க்கைக்கும் சாதகமாக்கி, தமிழ் மக்களின் வாக்கினை வேட்டையாடி ஒரு சில கட்சிகள் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்க, மறுபுறத்திலே எமது மண்ணின் கலாசாரம் சீரழிந்து கொண்டிருக்கும் நிலையிலே வடபகுதி மதுபாவனையில் முன்னணி நிலையில் உள்ளது என்ற மதுவரித் திணைக்களத்தின் புள்ளிவிபரம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய ஒன்றாகும்.

மது என்பது நாட்டுக்கும், வீட்டுக்கும் கேடு விளைவிக்கக்கூடிய ஒரு விடயமாகும். இவ்வாறு கேடு விளைவிக்கக்கூடிய விடயங்களில் எங்களின் கவனம் திரும்பியிருக்கின்றதென்றால் எங்களுடைய மக்களின் வாழ்வில் பேரழிவுகளை உண்டாக்கக்கூடிய சுனாமிபோன்ற, பெரும் ஆபத்திலே சிக்கிக் கொள்ளப்போகின்றோம் என்பது உண்மையாகும்.

யுத்தம் முடிவடைந்துள்ள 2009ஆம் ஆண்டில் 05 இலட்சத்து 67 ஆயிரத்து 756 லீற்றர் மதுவை இப்பகுதி மக்கள் குடித்துள்ளனர். 2010ஆம் ஆண்டிலே 16 இலட்சத்து 20 ஆயிரத்து 398 லீற்றராக உயர்ந்துள்ளது. 2013ஆம் வருடத்தில் மட்டும் 60 இலட்சம் மதுவினைக் குடித்து, நாமே பெரும் குடிமக்கள் என்பதனை நிரூபித்துக்காட்டியுள்ளனர். இவற்றிலே 40 இலட்சத்து 56 ஆயிரத்து 999 லீற்றர் பியர் மட்டும் கடந்த ஆண்டு அருந்தப்பட்டுள்ளன.

அத்துடன் 20 இலட்சத்து 18 ஆயிரத்து 434 லீற்றர் சாராயத்தையும் குடித்துத் தள்ளியுள்ளனர். இந்தப் புள்ளிவிபரங்கள் யாவும் 2013ஆம் ஆண்டுக்குள் மட்டுமானது. 2014ஆம் ஆண்டுக்கான புள்ளிவிபரங்கள் தலையே சுற்றக்கூடிய அளவுக்கு இருக்கும் என்று தாராளமாக நம்பலாம்.

இந்தப் புள்ளிவிபரங்கள் யாவும் அரச அனுமதியுடன் உற்பத்திசெய்யப்பட்ட சாராயம், பியர் என்பனவற்றுடன் தொடர்புபட்டது! சட்டவிரோதமான முறையிலே தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் "கசிப்பு" எனும் சாராயம் கணக்கிலே சேர்க்கப்படவில்லை. நாள்தோறும் கடினமான வேலைசெய்வோர், பொதி சுமப்போர், கூலி வேலைசெய்வோர்கள் மற்றும் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் உழைப்புக்கு ஏற்றதான மதுவாக, விலை குறைந்தவையாக கசிப்பே உள்ளன.

ஏழை மக்களுக்கு எட்டாத பழமாக விலை உயர்ந்த சாராயங்கள் உள்ளதால் கசிப்பின் பாவனை நாள்தோறும் அதிகரித்தே செல்கின்றது! இதன் புள்ளிவிபரங்களையும் ஓரளவுக்கு அண்ணளவாக கணக்கிட்டால் இதுவும் வருடமொன்றுக்கு 20 இலட்சம் லீற்றரை தாண்டும் என்பதே உண்மையாகும்.

எல்லாவற்றினையும் கூட்டிக்கழித்துப் பார்ப்பபோமானால், மதுப்பாவனையில் வடபகுதி முதல்நிலை வகித்து, கின்னஸ் புத்தகத்திலே பதிவுசெய்யப்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தளவுக்கு பியர், சாராயம், கசிப்பு, கள்ளு என்பன அருந்தப்படுவதனால் உண்டாகக்கூடிய பின்விளைவுகளைப் பற்றிப் பார்ப்போமானால், ஏராளமான குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வரப் போவதனை யாரும் தடுக்கமுடியாது.

போதையில் வீட்டுக்குவரும் ஒரு குடிகாரனால் அந்தக் குடும்பத்துப் பிள்ளைகள் படிக்கமுடியாத சூழ்நிலை உண்டாகின்றது. மனைவியை அடித்துத் துன்புறுத்துகின்ற அவலம் தொடரும், வீட்டில் இருப்பதை அடித்து நொருக்கும் துயரம் நிகழும், போதை முறியும்வரை இரவு இரவாக அலட்டிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கும். அயல்வீட்டாருடன் பகைவரும். மொத்தத்தில் எல்லோருடைய நிம்மதியும் தொலைந்து, தூக்கமும் இல்லாமல் போகும்.

குடும்பமொன்றினை உழைத்துப் பார்க்கவேண்டிய குடும்பத்தலைவனின் உழைப்பு மதுவுக்கும், புகையிலைசார் உற்பத்திக்கும் செலவாகும்போது வீட்டிலே வறுமை தாண்டவமாடும். பசியும் பட்டினியும் தலைவிரித்தாடும், படிக்க வேண்டியவர்களின் கல்வி பாழாகி, அவர்களின் எதிர்காலமும் குட்டிச்சுவராகிவிடும். ஒருவர் செய்யும் தவறினால் பலருடைய வாழ்வும் எதிர்காலமும் கேள்விக்குறியாகலாமா??

கணவனின் உழைப்பின் பெரும் பகுதி குடிக்காக செலவாவதனால் எத்தனையோ குடும்பப் பெண்கள் தமது உடலை விற்று விபச்சாரிப் பட்டம் சுமந்து வாழ்கின்றனர். பெண் விரும்பியோ, விரும்பாமலோ இந்தப் பாவச்செயலை செய்வது வறுமைக்காக என்பதை உணரும்போது, ஒருவனின் குடியினால் உண்டாகும் பாதிப்பு எத்தகையது என்பதை உணரமுடிகின்றது.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது, நாளைய தலைவர்களாகவும் நாட்டின் விடியலைச் சுமக்கப்போகும் தூண்களாகவும் மிளிரக்கூடிய மாணவச்செல்வங்கள் மதுவின் பின்னால் பயணிப்பது அவர்களின் கல்வியை, எதிர்காலக்கனவை, இலட்சியத்தை எல்லாம் வீணாக்கிவிடும். அற்பநேர போதை ஒன்றுக்காக மதுவை, பியரை, அருந்துவது அவர்களுக்கு சந்தோசமாக இருக்கும். ஆனால் அதனால் உண்டாகக் கூடிய பின்விளைவுகளை மறந்து விடுகின்றனர்.

முன்னொரு காலத்தில் கோயில்களில் விடிய விடிய திருவிழாக்கள் நடைபெற்று வந்துள்ளன. நாடகங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் எந்தவித குறுக்கீடோ, குளறுபடிகளோ, தடைகளோ இன்றி நடைபெற்றுவந்துள்ளதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் இப்போதைய சூழ்நிலையில் இப்படியானதொரு திருவிழாவையோ அல்லது இசைக்கச்சேரி நிகழ்வுகளையோ நடாத்தமுடியாதுள்ளது. காரணம், மதுவுக்கு அடிமையானவர்கள் அதுவும் இளைஞர்களின் அட்டகாசம் இறுதியில் அடிபிடி, சண்டை, வாள்வெட்டு என்று கோஷ்டி மோதல்களில் முடிகின்றது.

ஆலயம் என்பது அடங்கி, ஒடுங்கி, பணிந்துபோக வேண்டிய இடமாகும். இத்தகைய இடங்களில் இரவுநேரத் திருவிழாக்களையே நடாத்தமுடியாத அளவுக்கு இளம் சந்ததி குடிபோதையில் வந்து குழப்பம் விளைவிக்கின்றனர். இதன் மூலம் எமது கலாசார விழுமியங்களை நாமே குழிதோண்டிப் புதைத்து வருகின்றோம்.

மதுவுக்கு அடிமையாகி போதையை ஏற்றிக்கொள்பவர்கள் தலை, கால் புரியாமல் மங்கையைக் கடத்துதல், கற்பழித்தல், கொலை, கொள்ளைகள் என்று பலதும் பத்தும் செய்கின்றனர்.

ஊரிலே ஒரு மரணம் நிகழ்ந்தால், அந்த துக்க நிகழ்வுகளில் கலந்துகொள்ளச் செல்பவர்களில் பலர் மூக்குமுட்டக் குடித்துவிட்டு, அந்த மரண வீட்டினையே குழப்பி, ரகளை பண்ணிவிடுகின்றனர்.

இறந்தவர்கள் வயோதிபர்களாயிருக்கும், குழந்தையாயிருக்கும், வாழவேண்டிய இளசுகளாயிருக்கும், பறிகொடுத்தவர்களின் இழப்புக்கு ஆறுதல்கூறச் செல்பவர்கள் குடித்துவிட்டா செல்லவேண்டும். பலர் செய்யும் தவறினால் ஆண்வர்க்கமே வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது.

இதேவேளை குடித்துவிட்டு சிற்றூர்திகளில், இ.போ.ச. வண்டிகளில், புகையிரதங்களில் பயணிப்பதால்கூடப் பயணிக்கும் பயணிகள் சகிக்கமுடியாத அளவுக்கு துர்நாற்றத்தையும், தொல்லைகளையும் சுமந்துகொண்டு பயணிக்க வேண்டிய நிலைமைகளும் தொடர்கின்றன.

கடந்த வாரம் ஒரு மாலைவேளை. கூட்டம் ஒன்று முடிந்து எனது ஊரினை நோக்கிப் பயணிக்கும் சிற்றூர்தி ஒன்றிலே ஏறினேன். அந்த சிற்றூர்தியில் ஒரு வயோதிபரும், ஒரு இளைஞனும் அதிகரித்த போதையில் ஏறிக்கொண்டார்கள். சனக்கூட்டம் அதிகம் என்பதனால் நின்றுகொண்டே பயணம் தொடர்ந்தது. எனக்கு அருகிலே அந்தக் குடிகாரர்கள் இருவரும் நின்றுகொண்டனர். சனநெரிசலுக்குள் இவர்களிலிருந்து மதுவாசனை துர்நாற்றம் வீசியது. சகிக்கமுடியாமல் நான் துடித்தேன். அருகிலே நின்ற பெண்கள் மூக்கினைப் பொத்திக் கொண்டு நின்றனர். நடத்துனரிடம் இப்படியானவர்களை சிற்றூர்திகளில் ஏற்ற வேண்டாம் என்று பலர் ஆலோசனை கூறினார்கள். குடியினால் உண்டான விபரீதத்தை புரிந்துகொள்ளுங்கள்.

பண்டிகைகள் மற்றும் கொண்டாட்டங்கள் வரும்போது சிறுவர்கள் பட்டாசுகொழுத்தி மகிழ்வார்கள். பலர் புத்தாடை அணிந்து மகிழ்வார்கள். இனிப்பு பலகாரங்கள் செய்து இல்லாதவர்க்கும் கொடுத்து உண்டு மகிழவேண்டிய பண்டிகைகளை குடித்துவிட்டு கும்மாளம் அடிக்கவென்றே ஒரு கூட்டம் அலை மோதுகின்றது. மதுபான விற்பனை நிலையங்கள் ஹவுஸ்புல் காட்சிகளாக உருவெடுக்கும்.

தீபாவளிக்கு உடுப்பு வாங்க கடைகளில் சனக்கூட்டம் அலை மோதுவதுபோல சாராயக் கடைகளில் ஆண்வர்க்கம் அலைமோதுவதையும் காணக்கூடியதாகவுள்ளதென்றால் மதுவுக்கு கொடுக்கும் மரியாதையை விளங்கி கொள்ளவண்டும். இவ்வருடம் நடைபெற்ற தீபாவளி பண்டிகை நாளன்று சாராய, மதுபானக் கடைகளினை இழுத்துப் பூட்டுமாறு இலங்கை அரசின் பொதுநிர்வாக அமைச்சு அறிவித்துள்ளமையால் பெருங்குடி மக்களினால் உண்டாக இருந்த பேரனர்த்தங்கள் ஓரளவு குறைந்துள்ளது. இருப்பினும் முதல் நாளே போத்தல்களை வாங்கிவைத்து இரட்டிப்பு விலைகளில் விற்பனை நடைபெற்ற சம்பவத்தினையும் அறியமுடிந்துள்ளது.

வருடா வருடம் நடைபெறும் வரவு செலவுத்திட்ட நிகழ்வுகளின்போது அரசு மதுபானங்களின் விலையினை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது! என்ன விலை கொடுத்தாவது சாராயத்தினை அருந்தத் துடிப்பவர்கள் இருக்கும்வரை விலை அதிகரிப்பு என்பது ஒரு பொருட்டான விடயமல்ல.

நிலைமை இவ்வாறிருக்க, குடித்துவிட்டு வாகனமோட்டும் சாரதிகள் தினம் தோறும் அப்பாவிகளை, அடித்துக் கொன்று குவித்துவருகின்றனர். சாரதிகள் மது அருந்தினால் வாகனமோட்டக்கூடாது என்று சட்டவிதி சொல்கின்றது. ஆனாலும் குடித்துவிட்டு வாகனமோட்டும் சாரதிகள் இருக்கும்வரை அப்பாவிகள் இரையாகிக் கொண்டே இருப்பார்கள்.

"குடியினைக் கெடுக்கும் குடியை - குடிப்பவர்கள் நிறுத்தும்வரை, அவர்களே உணர்ந்து திருந்தும்வரை இதற்கு முடிவு காண்பது என்து இயலாத காரியமாகும்.




# தபால்கள்!



முதன்முதலில், இங்கிலாந்து நாட்டில், தபால்களைக் குதிரையில் எடுத்துச் சென்றார்கள். அவ்வாறு எடுத்துச் செல்பவர்கள், இடையில் ஓய்வு எடுத்துக்கொண்டு வேறு குதிரையில் அந்தத் தபால்களை வைத்து எடுத்துச் சென்றார்கள்.

அவ்வாறு ஓய்வெடுக்கும் இடங்களில் எல்லாம் கம்பங்கள் நடப்பட்டு இருக்கும். கம்பங்களை ஆங்கிலத்தில் 'போஸ்ட்' என்பார்கள். அந்தச் சொல்லின் பெயரே பிற்காலத்தில் தபால்களுக்கும் 'போஸ்ட்' என்ற பெயராக நிலைத்துவிட்டது.

# இம்பாலா மான்கள்

மான்களில் 'இம்பாலா' ஒரு வகை. அவை வேகமாக ஓடும். திடீரென்று திசைமாறி ஓடவேண்டுமென்றால் தயங்காமல் அதே வேகத்தில் மாற்றுத் திசையில் ஓடும். ஏனென்றால் அவற்றிற்கு ஒரு எச்சரிக்கை உணர்வு உண்டு. தாம் புழங்கும் இடம் மிகவும் பாதுகாப்பானது. என்று அவை எப்போதும் நினைப்பதில்லை.

எதிரே ஆபத்து என்றால் ஆபத்து கண்ணில் புலப்படாதபோதும் 'இம்பாலா' மான்கள் மாற்றுத் திசையில் ஓடுகின்றன.

## வாரம் ஒரு திருக்குறள்



### அடக்கம் உடைமை

**127**

**யாகாவா ராயினும் நாகாக்க**
**காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

ஒருவன் தன் நாக்கை அடக்காவிட்டால் அதுவே அவனுக்குத் தீராதப் பழியை உண்டாக்கி விடும்.

# பாப்பா முரசு சிறுகதை

# திருடியது யார்?

வைர வியாபாரி ஒருவர், பீர்பாலைத் தேடி வந்தார். விலை உயர்ந்த வைரக்கல் ஒன்று கடையிலிருந்து காணாமல் போய் விட்டதாகவும் அதைக் கண்டு பிடிப்பதற்கு தக்க வழி கூறுமாறும் வைர வியாபாரி பீர்பாலைக் கேட்டுக்கொண்டார்.

பீர்பால் வைர வியாபாரியின் கடைக்குச் சென்று பார்த்தார். கடையில் நாலைந்து பேர் வேலை செய்துகொண்டிருந்தார்கள்.

உங்கள் கடையிலிருந்து வைரத்தை எடுத்திருப்பார்கள் என்று யார் மீதாவது சந்தேகம் ஏற்பட்டு உள்ளதா? என்றார் பீர்பால்.

வைர வியாபாரியும் கடையில் வேலைசெய்யும் மூன்று நபர்கள்மீது சந்தேகம் ஏற்படுவதாக கூறினார். மூவரையும் அழைத்துவரச் சொன்னார். கடையில் இருந்து மூவரும் வந்தார்கள். அவர்களிடம் பத்து அங்குலம் நீளமுள்ள மூன்று குச்சிகளை ஒவ்வொருவரிடமும் கொடுத்து அதை வீட்டிற்கு எடுத்துச் செல்லுமாறும், ஒருநாள் வைத்திருந்துவிட்டு அடுத்த



நாள் குச்சியைத் திருப்பிக் கொண்டுவருமாறு கூறினார். அந்தக் குச்சிகள் மந்திரசக்தி வாய்ந்ததும் எனவும் திருடர்களிடம் அக்பர், பீர்பால் கதை இருந்தால் குச்சி ஒரு நாளைக்கு ஒரு அங்குலம் வளர்ந்துவிடும் என்றும் குச்சியை திருப்பி தரும் பொழுது அளந்து பார்ப்பதாகவும் கூறினார். மூன்று பேரும் குழப்பத்துடன் போய்விட்டார்கள்.

வைரத்தை திருடிய வேலைக்காரனுக்கு அன்று முழுவதும் உறக்கம் வராமல் அவதிப்பட்டான். தான் திருடியது தெரிந்துவிடுமோ என்று பயந்தான். தான் திருடியது தெரியாமல் இருக்க என்ன செய்வது? என்று யோசித்தான். நாளைக்கு குச்சியை அளந்து பார்க்கும்போது ஒரு அங்குலம் வளர்ந்துவிடுமே. அதனால் இப்போது ஒரு அங்குலம் வெட்டிவிட்டால் என்ன என்று யோசனை உதித்தது. குச்சியில் ஒரு அங்குலத்தை வெட்டி எடுத்தான்.

அடுத்த நாள் மூன்று வேலைக்காரர்களும் தாம் எடுத்துச் சென்ற குச்சிகளை திருப்பிக் கொடுத்தார்கள். பீர்பால் குச்சியை வாங்கிக் கொண்டார். ஒவ்வொரு குச்சியையும் பார்த்தார். வைரத்தை திருடிய வேலைக்காரன் கொடுத்த குச்சியைப் பார்த்தார். நீளம் குறைந்திருந்தது. வைரத்தை திருடிய வேலைக்காரன் காலையில் குச்சியின் அளவை பார்க்க தவறி இருந்தபடியால் தமது செயல் காட்டி கொடுத்துவிட்டது.

பீர்பால் அந்த வேலைக்காரனை முறைத்தார். வைரத்தை திருடியது நீதான் என்பதை ஒத்துக் கொள்கிறாயா? அல்லது சிறைக்கு செல்கிறாயா? என்றார் பீர்பால்.

# கூபர் பெடி

மாணிக்கக் கல்லின் தலைநகரம் என அழைக்கப்படும் 'கூபர் பெடி' (COOPER PEDY). வடதெற்கு ஆஸ்திரேலியாவில் அடிலெய்டிலிருந்து 846 கிலோமீற்றரில் அமைந்துள்ளது. உலகின் மிகச்சிறந்த மாணிக்கக் கற்களை இங்குதான் தோண்டி எடுக்கின்றனர்.

கூபர்பெடி பூமிக்கு கீழே அமைந்துள்ள ஒரு நகரம். ஆமாம், இந்தப் பகுதியே ஒரு பாலைவனம் தான். பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தப் பகுதி கடலால் சூழப்பட்டிருந்ததாம். பல நீண்ட குகைகள்... மேடுகள்... பள்ளங்களைக்கொண்ட பகுதி இது. இந்த பாலைவனப் பகுதியில் தோண்டத் தோண்ட மாணிக்கக் கற்கள்தான்.

1915இல்தான் இந்த நகரம் உருவாக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டின் கணக்குப்படி இதன் சனத்தொகை 1695தான். இதிலும் அபார்ஜியன்ஸ் என அழைக்கப்படும்

ஆஸ்திரேலியாவின் பழங்குடியினர் 275 பேர். இவர்கள் இந்த நகரத்திற்கு வைத்துள்ள பெயர் வெள்ளை மனிதர்களின் துவாரம் என்பதாகும். இதன் வடிவம்தான் கூபர்பெடி.

குகை போன்ற பகுதியில், ஒரு நகரமே அமைந்துள்ளதால், எப்போதும் இந்த இடத்தை சுற்றிப் பார்க்க உல்லாச பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர். மாணிக்கக்கல் காட்சியகம், சேர்ச்சுகள், வீடுகள், கடைகள், மாணிக்க வயல்கள் என எல்லாம் இங்கு உண்டு.

பாலைவனத்தில் இந்தப்பகுதி அமைந்துள்ளதால் பாலைவன நாய்கள் இங்கு அதிகம். அவை ஆக்ரோசமானவை. எனவே, நாய் தடுப்புவேலி ஒன்றை அமைத்திருக்கிறார்கள். க்வீன்ஸ்லாந்தில் இருந்து கிரேட் ஆஸ்திரேலியாவின் இன்னொரு பகுதிக்கு இந்த வேலி செல்கிறது. இதன் நீளம் 5,300 கி.மீ. எதற்காக இந்த வேலி?

இந்தப் பகுதியில் பலநூறு கி.மீ.தூரத்திற்கு செம்மறி ஆட்டுப் பண்ணைகள் உள்ளன. அவற்றைப் பாதுகாக்கவே இந்த வேலி!

இந்த பூமியில் எண்ணெய் கண்டுபிடித்துள்ளனர். ஆக இங்கு வருங்காலத்தில் நிலைமை மாறலாம். இந்த இடம் ஹைவேயில், உள்ளதால் இருபுறமும் செல்பவர்கள். இங்கு சில மணிநேரம் செலவழித்துவிட்டுதான் பயணம் மேற்கொள்கின்றனர்.




## அது எப்படி?


முதலாவதாக உள்ள முக்கோணத்தில் காணப்படும் நிற வடிவங்களை இடம் மாற்றி அதே அளவிலான முக்கோணத்தை அமைக்கும்போது இடைவெளி ஏற்படுமா?

முதலாவது முக்கோண வடிவத்தில் பதியப்பெற்ற நிற வடிவங்கள் அதே அளவுள்ள முக்கோண வடிவத்திற்கு இடமாற்றப்பெற்றுள்ளன.

இங்கே இடைவெளி உருவாகிறதே. அது எப்படி?




## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 10.11.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1068 த.பெ.இல:167,**
**தினமுரசு வாரமலர் யாழ்ப்பாணம்.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 1066

அ.பகீசுஜன், கோணாவளை லேன், கொக்குவில். — பரிசுக்குரியவர்: 1066

01. கா.மிதுனன், பாலாவி, கச்சாய்.
02. சி.சைந்தவி, வெள்ளவத்தை, கொழும்பு -06.
03. தா.பகீரதன், பேராதெனிய வீதி, கண்டி.
04. சௌ. சிந்துஜன், மட்டக்களப்பு.
05. ம.தயாளினி, குருநகர், யாழ்ப்பாணம்.
07. சு.பாவனன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
08. கு.நந்திதா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## உண்மைத் தொடர்

அதிர் இடி 62

சட்டென்று எழுந்தவன் அவளை அலாக்காகத் தூக்கி தான் படுத்திருந்த இடத்தில் மல்லாந்து படுக்க வைத்தான். அவளால் மறுக்க முடிய வில்லை. அமீனின் கைகள் அவளது உடலை பிடித்துவிட ஆரம்பித்தன.



### அற்புதன் எழுதிய

# இடி அமீன்

இனி...

அமைச்சர் பதவியை தூக்கி வீசிவிட்டு எங்காவது ஓடிப்போய்விடலாம் என்று கூறினார்.

"இப்போது அமைச்சர் மைக்கேல் திடமாக கூறினார். போகலாம். அதற்குமுன் நான் யாரென்று காட்டப்போகிறேன்"

"அதற்குமுன் உங்கள் உயிரையே உருவிவிடுவார்கள்" என்று பயந்தாள்.

இல்லை. "என் செல்வாக்கு என்னவென்று அமீனுக்கு தெரியும். உடனடியாக கை வைக்கமாட்டான். சதிதான் செய்வான். அதனால் எனக்குரிய பாதுகாப்பை நானே தேடிக்கொள்கிறேன்" என்றார் மைக்கேல்.

தனது நம்பகமான ஆட்களை மெய்க்காப்பாளர்களாக நியமித்தார். அமைச்சர் அவர்கள் எந்நேரமும் அவரைச் சுற்றியே காணப்பட்டனர்.

அமைச்சரவைக் கூட்டத்தை கூடினான் அமீன்.

அந்தச் கூட்டத்தில் அமைச்சர் மைக்கேலை பார்க்காது. வேறு எங்கோ பார்த்தபடி அமீன் கூறினான். "தங்களை முக்கியமானவர்கள் என்று கருதும் சில அமைச்சர்கள் பிரத்தியேக மெய்க்காப்பாளர்களை நியமித்துக் கொள்கிறார்கள். தங்கள் உயிர்களது அவர்களுக்குள்ள அக்கறையை பாராட்டுகிறேன்" என்று இடிச் சிரிப்பை உதிர்த்தான்.

அவன் மூளையில் அதற்கான பயங்கரத் திட்டமும் உதிர்த்தது.

*****

பிஷப் பாண்டவர் கொல்லப் பட்டதை மூடிமறைக்க அமீன் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

வெளிநாடுகளிலும், உள் நாட்டிலும் அதிருப்திகள் தலைதூக்கின. பிஷப்பாண்டவரின் உடலைப் பார்வையிட வேண்டும் என்று மக்கள் முண்டியடித்தனர். உடலைக் காண்பிக்க முடியவில்லை. காண்பித்தால் நடந்தது விபத்தல்ல என்பது தெரிந்து விடும்.

பிஷப்பாண்டவரும், இரு அமைச்சர்களும் கொல்லப் பட்ட தினத்தன்று மாலையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இடி அமீனின் உதவி ஜனாதிபதி முஸ்தபா அட்றிசி அக்கூட்டத்தில் உரையாற்றினார்.

பிஷப்பாண்டவரும், இரு அமைச்சர்களும் பலியான செய்தியை அறிந்து அதிபர் இடி அமீன் ஆழ்ந்த அதிர்ச்சியில் இருக்கிறார்.

இந்த விபத்து விதியின் திருவிளையாடல். இதனை கொலையாக சித்தரிக்கச் சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன.

ஜனநாயகத்தை மதித்து, சர்வதேச விடுதலை இயக்கங் களுடன் நட்பு பாராட்டிவரும் எமது நாட்டுக்கும், மக்களுக்கும் எதிரான சக்திகளையிட்டு விழிப்பாக இருக்குமாறு அதிபர் இடி அமீன் கேட்டுக் கொண்டுள்ளார். என்று உதவி ஜனாதிபதி உரையாற்றினார்.

பொய் என்ற தெரிந்தும் மக்கள் மௌனமாக அதனை செவிமடுத்தனர்.

உதவி ஜனாதிபதி அங்கு உரையாற்றிக் கொண்டிருந்த போது, அமீன் தன் உடம்புக்கு மசாஜ் பண்ணிக் கொண்டு இருந்தான்.

தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்தானவர்கள் என்று கருதுபவர்களை தீர்த்துக் கட்டினால் அன்று முழுவதும் அமீன் சந்தோசமாக இருப்பான்.

அன்று சாப்பாட்டில் மலைப் பாம்புக்கறி நிச்சயமாக இருக்கும்.

அதற்காகவே மிருகக் காட்சிச்சாலை ஒன்றில் விதம் விதமாக மலைப்பாம்புகள்



வளர்க்கப்பட்டு வந்தன.

மலைப்பாம்புக் கறியுடன் சாப்பிட முன்னர் மசாஜ் பண்ணிக் கொள்ளவேண்டும்.

பிஷப்பாண்டவர் கொல்லப் பட்டதைக்கூட மிக லேசாக விபத்தாக சித்தரித்த தன் புத்திசாலித்தனத்தை எண்ணி மனதுக்குள் பூரித்துப் போனான் அமீன்.

அந்தக் குஷியில் இருந்தவன், மசாஜ் செய்த அழகிகளில் ஒருத்தியை தன் கைகளால் வளைந்து வயிற்றில் முகத்தை புதைத்து கிளுகிளுப்பூட்டினான்.

சட்டென்று எழுந்தவன் அவளை அலாக்காகத் தூக்கி தான் படுத்திருந்த இடத்தில் மல்லாந்து படுக்க வைத்தான்.

இன்று நான்தான் உனக்கு மசாஜ் பண்ணப் போகிறேன் என்றான்.

அவளால் மறுக்க முடிய வில்லை. அமீனின் கைகள் அவளது உடலை பிடித்துவிட ஆரம்பித்தன.

முதலில் அவளுக்கும் இதமாக இருந்தது. முரட்டுக் கரங்கள் பிடித்துவிட்ட இடங்களில் புத்துணர்ச்சி ஏற்படுவது போலிருந்தது.

அவளது மிகக் குறைந்த ஆடைகளையும் அமீன் அனுமதிக்கவில்லை.

உடல் முழுக்க பிடித்து விட்டான். படிப்படியாக அவனது பிடி கடுமையானது. அவள் உடலை பிழிய ஆரம்பித்துவிட்டான்.

அவள் வலியால் துடித்துப் போனாள். அவள் துடிப்பதை வழக்கம்போல ரசித்தான்.

அவள் துடிப்பதைக் காண அவனுக்கு வெறி தலைக்கேறியது. அவள் முகமருகே குனிந்து, அவளது உதடுகளைசக் கடித்தான். அவள் கத்தினாள். அது அவளது தொண்டைக் குள்ளேயே அடங்கிப்போனது.

உதடுகளில் துளிர்த்த இரத்தத்தை தன் உதடுகளால் சப்புக்கொட்டி உறிஞ்சினான்.

இத்தனை கொடூரத்தையும் கண்களால் பார்த்துக் கொண்டிருந்த இன்னொரு அழகிக்கு பயத்தில் உடம்பெங்கும் உதறல் எடுத்தது.

அடுத்தது தனக்குத்தான் என்ற நினைத்தபோது அங்கிருந்து ஓடிவிடலாமா என்ற எண்ணம் உதிர்த்தது.

**(தொடரும்)**

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 597

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 595 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | 2 து | 3 ம் | 4 பு | 5 த | 6 ல் |
| 7 க் | 8 மா | 9 க | 10 ள் | | 12 தா |
| 13 கி | 14 ளை | | | 17 பொ | 18 ப் |
| 19 பீ | | 21 சி | 22 ச் | 23 து | 24 ய் |
| 25 டி | | 27 ர் | 28 ண | 29 வா | 30 பா |
| 31 யா | 32 ர் | 33 த | | 35 க | |

### இடமிருந்து வலம்

01. பிறருக்கு உபகாரம் செய்தல்; காருண்ணியம்.
07. சனங்களின் தொந்தரவு.
13. மந்தம்; செருக்கு (குழம்பியுள்ளது)
17. கற்பு; சுளுக்கு.
19. ஆடம்பரமற்றது.. (குழம்பியுள்ளது)
23. வியாழன்; மன்னன்.
25. குளிர்; மழைத்துளி.
28. கிளி (திரும்பியுள்ளது)
31. ஆற்றலுணர்த்தும் ஒருவித இடைநிலை. (திரும்பியுள்ளது)
34. கொஞ்சம். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. ஓயாமல் பேசல்; ஏமாற்றுதல்.
02. ஆபிரிக்கா கண்டத்தில் தான் சானியாவில் உள்ள மலைத்தொடர் (குழம்பியுள்ளது)
03. பச்சை நிறம். (குழம்பியுள்ளது)
04. ஊறுகாய்.
17. இந்த மலரும், சூரியகாந்தி மலரைப் போல சூரியனைப் பார்த்து நிற்குமாம்.
18. அடையாளம்; மாதிரி (குழம்பியுள்ளது)
28. வெள்ளை என்பதை சிங்களப் பாஷையில் உச்சரித்தால்.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **10.11.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 597
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 595 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.

எம்.மகேந்திரன், கண்டி வீதி, சாவகச்சேரி.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
02. து.பாமினி, வரணி இயற்றாலை, வரணி.
03. டி.ஜேசுதாசன், குருநகர், யாழ்ப்பாணம்
04. எஸ்.சுவர்ணமலர், கோப்பாய் மேற்கு, கோப்பாய்.
05. ச.பவித்ரா, தும்பளை, பருத்தித்துறை.
06. தா.இளங்கீரன், 3ஆம் குறுக்குத்தெரு, கிளிநொச்சி.
07. எம்.எம்.ஹமீட், வாகரை, மட்டக்களப்பு.
08. யோ.மாலினி, பிரதான வீதி, பதுளை.
09. ப.மலர்விழி, முள்ளியவளை, முல்லைத்தீவு.

# பிரியாணியில் மயங்கினார் கார்த்திகா

தமிழ் சினிமாவின் மன்மதன் லிஸ்டில் சிம்பு - ஆர்யாவுக்கும் இடைய கடும் போட்டி நிலவிவருகிறது. இந்நிலையில் ஆர்யா பலபேரை பிரியாணி கொடுத்தே கரெக்ட் செய்து உள்ளார் என்ற செய்தி அவர் காதுபடவே பேசியுள்ளனர். அதை பற்றியெல்லாம் கவலைப்படாமல் தனது பிரியாணி வித்தையை தற்போது புறம்போக்கு படத்தில் நடித்து வரும் கார்த்திகாவிடம் காட்டியுள்ளார். ஆர்யாவின் வீட்டில் இருந்துதான் தினமும் ஷூட்டிங்குக்கு பிரியாணிவரும். அந்த பிரியாணி வாசத்திலே மயங்கிவிட்டாராம் கார்த்திகா. படத்தில் ஆர்யாவுக்கு சமமான கேரக்டர் எனக்கு. நானும் அக்ஷன் காட்சிகள்ல நடிச்சிருக்கேன். தனக்கு சரிசமமாக ஹீரோயின் இருப்பதை எந்த ஹீரோவும் ஒத்துக்கமாட்டாங்க. ஆனா ஆர்யா ஒத்துக்கிட்டிருக்கார். அதுதான் ஆர்யா. என்கிறார் கார்த்திகா.




# அதிரடியில் நயன்

அப்படி என்ன மாயம் செய்தாரோ தெரியவில்லை, நயன்தாராவுக்கு தமிழ், தெலுங்கு இரண்டிலுமே இளம் நடிகர்களிடமிருந்து வாய்ப்புகள் வந்தவண்ணமுள்ளதாம். இதைப் பயன்படுத்திக்கொள்வதில் தீவிரம் காட்டும் நயன்தாரா காதல், சோகம் எல்லாம் போதும், இனி அக்ஷன் கதைகளுக்குத்தான் முன்னுரிமை எனக்கூற ஆரம்பித்துள்ளாராம். சக நடிகையான அனுஷ்கா வரலாற்று கதைகளில் நடித்து வருகிறார். ருத்ரம்மாதேவி, பாகுபலி ஆகிய திரைப்படங்களில் ராணி வேடத்தில் நடிக்கிறார். வாள் சண்டை, குதிரையேற்றம் பயிற்சிகள் எடுத்து அக்ஷனிலும் கலக்குகிறார்.

நயன்தாராவுக்கும் வழக்கமான காதல் படங்களில் நடித்து அலுத்துவிட்டதாம். நல்ல அக்ஷன் படங்கள், தன் பாத்திரத்துக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் நடிக்கவிரும்புகிறார். தமிழ், தெலுங்கில் சரித்திர கதையம்சம் உள்ள படங்களில் நடிக்கவும் ஆர்வம் காட்டுகிறாராம். தற்போதைய நிலவரப்படி இன்னும் மூன்று ஆண்டுகள்வரை நயன்தாரா இதே இடத்தில் நீடிக்க வாய்ப்புள்ளது. அத்தனை படங் களைக் கையில் வைத்து உள்ளாராம்.

# விரை... திருமண...

நடிகர் பிரேம்ஜி கல்யாணம் ...
கொள்ளாமல் காலத்தை தள்ளி...
கொண்டு இருக்கிறார் என்ற ஒரு...
அவர்மீது உள்ளது. இந்நிலைய...
ஒரு பேட்டியில் அவர் ஒரு பெ...
காதலிக்கிறார் என்றும் ஆனால்...
அவர்களுக்கு தெரியாது என ...
சொன்னார். அதன்பிறகு அந்த...
ஆனது என்று தெரியவில்லை...
அடுத்த தீபாவளிக்குள் பிரே...
போடவேண்டும் என்று முடி...
அவரது குடும்பத்தினர். அது...
மகளைத்தான் தேர்வுசெய்து...
அவருடைய நட்பு வட்டார...
படுகிறது. எ...
பிரேம்...
பே...



# ஆற்றில் மூழ்கினார் வில்லன்

கில்லி, ...தில், பகவதி, தமிழன் உட்பட பல படங்களில் வில்லன் வேடத்தில் நடித்து பிரபலமான ஆசிஷ் வித்யார்த்தி, தற்போது டயரி என்ற இந்திப் படத்தில் நடித்து வருகிறார். அதன் படப்பிடிப்பு உத்தரப் பிரதேச மாநிலம் ராய்பூரில் உள்ள சிவ்நாத் ஆற்று பகுதி யில் நடந்து வருகிறது. ஆற்றில் இறங்கி பூஜைசெய்து விட்டு குளிப்பது போன்ற காட்சியை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ஆசிஷ் தண்ணீரில் மூழ்கி தத்தளித்தார். ஆற்று வெள்ளம் அவரை சில அடி தூரம் இழுத்துச்சென்றது. படப்பிடிப்பை வேடிக்கை பார்த்தவர்கள் படத்தின் காட்சி என்று கருதிக் கொண்டு வேடிக்கை பார்த்தார்கள். இயக்குனர் கிருஷ்ணா ராவ் இது காட்சி இல்லை. நிஜமாகவே அவர் ஆற்றில் மூழ்குகிறார் என்று கத்தினார். உடனே அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸ்காரர் ஆற்றில் குதித்து ஆசிஷை காப்பாற்றினார்.



# புதிய நிலைப்பாடு

விஜய் திரைப் பயணத்தில் எவர்கிரீன் படம் என்றால் பூவே உனக்காக தான். இதை பல முறை மேடையிலேயே கூறியுள்ளார் இளைய தளபதி. தற்போது சிம்புதேவன் இயக்கத்தில் நடிக்கவிருக்கும் இவர், அடுத்து அட்லீ இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இப்படம் பூவே உனக்காக ஸ்டையில் காதல் கதையம்சம் கொண்ட கதையாம். ஆனால் "எனக்கு 40 வயசாகிடுச்சு, இனி இதெல்லாம் வேண்டாம், ஒரு அக்ஷன் கதை இருந்தால் சொல்லுங்க" என்று கூறிவிட்டாராம்.

# முகமூடியில் விஜய்!

இளையதளபதியின் கத்தி திரைப்படம் பார்த்த அனைவரும் ஏக திருப்தியில் இருக்க, முதல் மூன்று காட்சிகளை நடிகர் விஜய் ரசிகர்களுடன் மாஸ்க் போட்டு பார்த்தார். முதலில் காசி திரையரங்குக்கு சென்று முருகதாஸுடன் படத்தை பார்த்தார், பிறகு அல்பேர்ட் மற்றும் தேவி திரையரங்கு என்று ரசிகர்களுடன் இந்த தீபாவளியை கொண்டாடினார் நடிகர் விஜய்.

# அழுது புலம்பினார் குத்தாட்ட நடிகை!

முனியாண்டியுடன் நாயகியாக நடித்த பரிபூர்ண நடிகை தற்போது வாய்ப்பு எதுவும் இல்லாமல் வீட்டில் இருப்பதால் வேறு வழியின்றி சமீபத்தில் குத்தாட்ட பாடல் ஒன்றில் ஆட ஒப்புக்கொண்டு தற்போது ஆடிவருகிறார். குற்றாலம் பகுதியில் தற்போது நடந்துவரும் இந்த குத்தாட்ட படப்பிடிப்பில் பூர்ண நடிகை படுகவர்ச்சியான உடையில் குத்தாட்டம் ஆடிவருவதை வேடிக்கை பார்க்க அந்த பகுதியில் பொதுமக்கள் திரண்டுள்ளனர்.

இதில் படப்பிடிப்பை பார்க்க வந்த ஒரு சிலர். பூர்ண நடிகை யின் கவர்ச்சி உடையை பார்த்து மோசமாக கமெண்ட் அடித்துள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த நடிகை அழுதுகொண்டே படப்பிடிப்பில் இருந்து கிளம்பி ஓட்டலுக்கு சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. வாய்ப்பு இல்லை என்றாலும் பரவாயில்லை. இனிமேல் குத்தாட்டம் ஆடுவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டாராம் நடிகை.



...ரவில்
...ணம்?

...ல்யாணம் பண்ணி
...தை தள்ளிப்போட்டு
... என்ற ஒரு குற்றச்சாட்டு
... இந்நிலையில் சமீபத்தில்
...ர் ஒரு பெண்ணை
...ும் ஆனால் அது
...யாது என வெளிப்படையாக
...றது அந்த காதல் என்ன
...ரியவில்லை. இந்நிலையில்
...க்குள் பிரேம்ஜிக்கு கால்கட்டு
...ன்று முடிவுசெய்துள்ளனர்
...தினர். அதுவும் பிரபல நடிகரின்
...தேர்வுசெய்து உள்ளனர் என்ற
...பு வட்டாரத்தில் சொல்லப்
...டுகிறது. எது என்னவோ
பிரேம்ஜிக்கு கெட்டி
மேளம் ரெடி
ஆயிடுச்சு டோய்!!



வலியவன்

## முடிவை மாற்றியது கத்தி

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகை சமந்தா. ஆனால் இதெல்லாம் வெறும் தெலுங்கில் மட்டும்தான், இதுவரை இவர் நடித்த ஒரு தமிழ் படம் கூட ஹிட் ஆகவில்லை. ஆனால் இதை கத்தி படம் மாற்றியுள்ளது. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுவருகிறது. இந்நிலையில் இவர் ஒரு அதிரடி முடிவை எடுத்துள்ளார். அஞ்சான் படத்தில் வருவதுபோல் இனி ஒரு போதும் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்போவதில்லை, நல்ல கதையம்சம் உள்ள படத்தில் சின்ன ரோலில் நடித்தால் ஓ.கே தான் என்று நல்ல முடிவை எடுத்துள்ளார் சமந்தா.

## கௌரவ வேடத்தில் தல!

அஜித் சமீபத்தில் ஸ்ரீதேவி நடித்த இங்கிலஷ் - விங்கிலிஷ் படத்தில் கெஸ்ட் ரோலில் நடித்திருந்தார். இதை தொடர்ந்து மீண்டும் ஒரு படத்தில் நட்புக்காக நடிக்கவுள்ளார். விஷ்ணுவர்தன் தன் ஆஸ்தான ஹீரோ ஆர்யாவை வைத்து இயக்கிவரும் படம் யட்சன். இப்படத்தில் ஆர்யாவின் கதாபாத்திரம் ஒரு நடிகரின்மீது தீவிர ஆசையால் சினிமாவில் நடிக்க வருவதுபோல் இருக்குமாம். இதற்காக அவர் தேர்ந்தெடுத்த ஹீரோ நம்ம தல தான். அதற்காக ஒரு சின்ன கெஸ்ட் ரோலில் தலயை காட்ட விஷ்ணு கேட்க, அஜித்தும் சம்மதித்துவிட்டதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றது





## மீண்டும் டிஸ்கோ சாந்தி

கடந்த 1980, மற்றும் 90களில் சில்க் ஸ்மிதா, அனுராதா போன்ற கவர்ச்சி நடிகைகளுக்கு கடும் போட்டி கொடுத்து வந்த டிஸ்கோ சாந்தி, நீண்ட இடைவெளிக்கு பின்னர் திரையுலகில் வலம்வர இருக்கிறார்.

பிரபல தெலுங்கு நடிகர் ஸ்ரீஹரியை திருமணம் செய்த பின்னர் திரையுலகில் இருந்தே விலகினார் டிஸ்கோ சாந்தி. இவருடைய கணவர் ஹரி வேட்டைக்காரன், மார்க்கண்டேயன் போன்ற தமிழ் திரைப்படங்களிலும் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஆர்.ராஜ்குமார் என்ற இந்தி படத்தின் படப்பிடிப்பில் இருந்தபோது திடீரென மயங்கிவிழுந்த ஸ்ரீஹரி, எதிர்பாராதவிதமாக மரணம் அடைந்தார். கணவரின் மரணத்திற்கு பின்னர் திரையுலகினர்களுடன் தொடர்பில் இல்லாமல் இருந்த டிஸ்கோ சாந்தி தற்போது தனது இரண்டு மகன்களுடன் மீண்டும் வரவுள்ளார்.

மூத்த மகன் இயக்கத்தில் இளைய மகன் நாயகனாக நடிக்கும் திரைப்படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் டிஸ்கோ சாந்தி நடிக்கவுள்ளார். ஆனால் தற்போது அவர் நடிக்கவிருப்பது குணசித்திர வேடம். இனிமேல் தனது வயதுக்கேற்ற கதாபாத்திரத்தில் மட்டுமே நடிக்கவிருப்பதாகவும், கவர்ச்சி ஆட்டங்களில் ஆடும் எண்ணம் இல்லை என்றும் டிஸ்கோ சாந்தி கூறியுள்ளார்.



டார்லிங்

# தேன் கிண்ணே



எம்.யூ.அல்சாத், ஓட்டமாவடி.

## அவளது கதறல்

என் உறவுகளால்
தன்னின்னுயிரை எனக்கு
சமர்ப்பணம் செய்து

பாடையில் துயிலுறும் தன்
கணவனை அணைத்தபடி
கதறித் துடிக்கிறாள்
தாய்மையுற்ற அம்மாது!!

நானில்லாமல்
தானில்லை எனுமளவு
என்னுடலை ருசி பார்த்து
இன்புற்றான் இவன்!

நானோ தீயில்
வெந்து கருகி அழிந்து
மறு பிறவியெடுத்து அவன்
இல்லாள் கொடுத்திராத
சுகத்தை இறைத்ததால்

அவனது மெய்மனையில்
இருமல் குழந்தையையும்
புற்றுநோய் மாமனையும்
குடியேற்றியும் என்னை
அவன் விரட்டிடவுமில்லை!

உழைத்தவனை படுத்த
படுக்கையாக்கியும் என்னை
பிரிய மனமில்லாது
பிறரிடம் இரந்து
என்னை நாடல் கொண்டு
சுகித்து சுகித்து சூதாணமாய்
துயில்கிறான் இன்று
எனக்கோ விடுதலை தந்து!!

## காதல் காற்று

அதே பாய்...
அதே தலையணை
ஞாபகம் வந்த நாளிலிருந்து
நான் படுக்கும்
அதே அறை...
புரண்டு புரண்டு
படுக்கிறேன்
தூக்கம் மட்டும்
வரவேயில்லை!

இமை அறியாமல்
விழி வருடுகிற
நிலவு தீர்ந்த மையிருட்டு
என்னைச் சுற்றிலும்
விழுகிறது
ஏதோ ஒரு
வெளிச்ச வளையம்

சில்வண்டும்
கண்ணுறக்கம்
நிசப்த நேரம்
என்
நாடி நரம்பெல்லாம்
சப்திக்கிறது...

என் அறைக்குள்
அடைந்து கிடக்கிற
அழுக்குக் காற்றிலும் கூட
ஒரு தாவணித் தாழையின்
சுகந்தம் இருக்கிறது.

கதவு ஜன்னல் இருந்தும்
கல்லறையாய் வைத்திருந்தும்
இதயத்தில் மட்டும்
எப்படியோ...
காதல் காற்று
நுழைந்து விடுகிறது.

கே.வாலேந்திரன்
கொள்ளுப்பிட்டி



## யாரிடம் நீதி கேட்க...



அன்பு என்னும் பெயரில் போலி வேஷம்
கொண்டு புரட்சிகரம் செய்பவரே
உள்ளத்தில் ஒன்றையும் உதட்டில்
ஒன்றையும் உருட்டிப் பேசும்
ஜடங்களா நீங்கள்...?
உங்களுக்குத் தெரியும் அன்புக்கு அடிமை
அப்பாவிப் பெண்கள் என்று...
தூய அன்புதனை துயிலாய்
உரிந்துவிட்டு துன்பம் இன்றித்
தூங்குகிறீர் துயர் தாங்க முடியாமல்
துடிக்கிறது பெண்ணினம்
அன்பு என்னும் பெயரை
கருவிலே கற்பழித்த நீங்கள்
இன்று நீதிபதியாய்.
நாம்
யாரிடம் நீதி கேட்க...?

ந.பிரசன்னா
புதுக்குடியிருப்பு.

## கனவுகள்



கற்பனையில் வரும் இரவினை
நினைவினில் கொண்டு வரும் – போது
இனிமையான கனவுகள்!

இதமான விடியலை மனதில்
ஏற்றினால் சுகமான – இன்பங்களாக
விடியல் மலரும் கனவுகள்!

மாணவனின் கனவுகள் பரீட்சை
எழுதும் முன்னே – வரும்
நினைவாக உதிக்கும் கனவுகள்!

தொழிலாளியின் கனவுகள் கண்மலரும்
நிமிடங்களின் விடியலை தேடும்
கற்பனை பாதை கனவுகள்!

ஆறாத கண்களில் வேறாக
ஓடும் நினைவுகள் அனைத்தும்
நிஜத்தின்
நினைக்காத கனவுகள்!

காதலர்களின் பரிசுகள் நெஞ்சினில்
நீராக ஓடும்போதும் – ரணமான
நினைவுகள் சுகமான கனவுகள்!

நெஞ்சினிலே வற்றாத கடலாய்
வானோடு தொடுவதுபோல் உள்ள – நீர்
பிரிந்திருக்கும் நட்பு இத்தனையும்
இவ் உலகில் கனவுகள்!!!

A.தனா,
நாச்சிக்குடா.

## "சொல்வாயோ நீ இந்த நேரம்"



உலா போகும் நேரம்
உன்னைக் கண்டேன் – நான்
அந்தி நேரம் – கோயில்
விழாக் கோலம் கொள்ளும் நேரம்
விலகி நின்றேன் நான் – அந்த
வீதி ஓரம்
விழித்தாயே என்னைப் பார்த்து
நீயும் அந்த நேரம்
தவித்தேனே உன்னால் நானும்
நெடுநேரம் – அதனால்
விழித்திருந்தேன் நான்
பல மணிநேரம் – பெண்ணே
உன்னோடு பேச வேண்டும் – நான்
சில மணி நேரம்
எந்நேரம் நான்
பேசும் நேரம் என
சொல்வாயோ நீ இந்த நேரம்.

இளம்பிறை யோகன்
புத்தளம்.

## உங்களை நேசிக்கிறோம்

தென்கொரிய இன்சியோன் நகரில் 13ஆவது பரா விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் போட்டிகளில் நாம் மகிழ்ச்சியடையும் அளவிற்கு வீர வீராங்கனைகள் சோபித்துக்



கொண்டிருக்கிறார்கள். இலங்கை வீரர் அனில் பிரசன்னா ஜயலத் 200 மீற்றர் ஓட்டத்தில் (T42) தங்கம் வென்று அசத்தி இருக்கிறார். இதே நிகழ்வில் உப்புல் இந்திக வெண்கலம் வென்றுள்ளார். முன்னதாகவே பிரசன்னா நீளம் பாய்தலிலும், 100 மீற்றர் ஓட்டத்திலும் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

இதேபோன்று மகளிர் நீளம் பாய்தலில் (T46) இந்துமதி கருணாதிலகவும், ரேபிள் ரென்னிஸ் போட்டிகளில் தினேஷ் டி சில்வாவும் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்கள். டுமீர மதுரங்க 200 மீற்றர் (T44) நிகழ்வில் திறமையாக ஓடி இருந்தாலும் நூலிழையில் மூன்றாவது இடத்தைத் தவறவிட்டார்.

தொடர்ந்து நடைபெறும் போட்டிகளில் இலங்கை இன்னுமும் சில பதக்கங்களை வென்றெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதைய நிலையில் இலங்கை ஒரு தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலம் என்று பதினெட்டாவது இடத்தில் இருக்கிறது. சீனா 120 தங்கங்களுடன் முதல் இடத்திலும், தென்கொரியா 51 தங்கங்களுடன் இரண்டாம் இடத்திலும் இருக்கிறது.

## நேர்மைக்குப் பரிசு



றொஷான் மஹாநாம முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர். சிறந்த வீரர். 1996 இலங்கை உலகக் கிண்ணத்தை வென்றெடுத்தபோது அந்த அணியின் ஒரு வீரர். இவர் தற்போது ஒரு மைல் கல்லை தொட்டிருக்கிறார். அதாவது 200ஆவது ஒருநாள் ஆட்டத்தில் ஆட்ட மத்தியஸ்தராக (MATCH REFEREE) கடமையாற்றி சாதித்திருக்கிறார்.

மத்தியஸ்தத் துறையில் அதீத திறமைகாட்டியவர்களே இந்த உச்சத்தைத் தொடமுடியும். இவருக்கு முன்னதாக உள்ளவர்கள் ரஞ்சன் மடுகல்ல 283 போட்டிகள், கிறிஸ்புரோட் 248, ஜெப்குறோ 207. இவர் விளையாட்டு வீரரான காலத்தில் 52 டெஸ்ட் போட்டிகளில் 2576 ஓட்டங்களும், 213 ஒரு நாள் போட்டிகளில் 5162 ஓட்டங்களும் பெற்றவர்.

இவர் 1986 -1999 வரை இலங்கை அணியில் விளையாடியவர். தற்போது மத்தியஸ்தத் துறையில் எமிரேட்ஸ் எலைட் பெனல் ஒப் ஐ.சி.சி மெட்ச் ரெபரி ஆகியுள்ளார்.

2004 முதன்முதலாக மே.இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டியில் மத்தியஸ்தராகக் கடமையாற்றியவர். அதே தொடரில் டெஸ்ட் மத்தியஸ்தராகவும் அறிமுகமானவர். றொஷான் 54 டெஸ்ட் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் வகித்துள்ளார். அதன்பின் கிரிக்கெட்சார்ந்த அறிவு, தொழில்நுட்ப சட்டரீதியான அறிவுகள், அதீத திறமை, நேர்மை எல்லாம் சேர்த்து இவரை மிக உயர்ந்த அந்தஸ்துக்கு உயர்த்தியுள்ளது.

றொஷான் இது பற்றிக் கருத்துக் கூறும் போது, மூன்று வகைப் போட்டிகளிலும் உயர்தகைமை பேணுவதென்பது எளிதல்ல. இதற்கு உதவிய அத்தனை பேருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுகூறிச் செல்கிறார்.

## தொடர் பாய்ச்சல்



தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் இளம் வீரர் குயின்ரின் டீ கொக் படிப்படியாக ஒவ்வொரு சாதனை நிகழ்த்திக் கொண்டுவருகிறார். அந்த வரிசையில் விக்கெட் காப்பாளராக மிகவேகமாக ஐம்பது பேரை அவுட் ஆக்கிய முதன்மை நிலையை அவர் பெற்றுக்கொள்கிறார்.

முடிவடைந்த தென்னாபிரிக்க - நியூசிலாந்து அணிகளக்கு எதிரான ஒரு நாள் போட்டி இவருக்கு இருபத்தேழாவது போட்டியாக அமைந்தது. இதற்கு முன்னதாக முப்பது ஒரு நாள் போட்டிகளில் ஐம்பது விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் என்ற முதன்மையை மூன்று பேர் பெற்றிருந்தார்கள். மே.இந்தியத் தீவுகளின் ரெட்லி ஜேக்கப்ஸ், இங்கிலாந்தின் ஜெரெய்ன்ட் ஜோண்ஸ் மற்றும் ஜொஸ் பட்லர் ஆகியோரே இவர்கள்.

இப்பொழுது இவர்களின் சாதனையை மூன்று ஒரு நாள் ஆட்டங்கள் முன்னதாகவே முறியடித்துவிட்டார் இந்த 21வயது. இளைஞன் இன்னொருபுறம் ஒருநாள் போட்டிகளில் ஒரு ஆட்டத்தில் ஆறு இலக்குகள் வீழ்த்தக் காரணமாக இருந்த ஒரு விக்கெட் காப்பாளர் என்றவகையிலும் ஒரு பதிவை ஏற்படுத்தியுள்ளார். இவர் மேற்குறித்த ஆட்டத்தில் ஐந்து பிடிகளையும், ஒரு ஸ்ரம்பிக் அவுட்டையும் தனதாக்கி இருந்தார். சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இந்தவகையில் ஒன்பதாவது விக்கெட் காப்பாளராகவும், தென்னாபிரிக்க அணிபொறுத்து இரண்டாவது வீரராகவும் பதிவை ஏற்படுத்தியுள்ளார்.

## சமாதானம் வருமா?







கிரிக்கெட் உலகில் அண்மையில் நடைபெற்ற அருவருக்கத்தக்க நிகழ்வென்றால் அது, இந்தியாவில் விளையாடிக் கொண்டிருந்த மேற்கிந்திய கிரிக்கெட் அணி அரைகுறையாக சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு அல்லது முறித்துக்கொண்டு நாடு திரும்பியது தான். இதனால் அதிர்ந்துபோன இந்திய கிரிக்கெட் சபை பெரும் சங்கடத்தில் ஆழ்ந்தது.

ஏனெனில் தொடர்ந்திருக்கவேண்டிய இறுதி ஒரு நாள் போட்டி, ஒரு இருபதுக்கு இருபது போட்டி, மூன்று டெஸ்ட் போட்டிகள் என்று பதினேழு விளையாடும் நாட்கள் இழக்கப்பட்டதால் இந்திய கிரிக்கெட் சபை எதிர்கொண்ட நட்டம், இலங்கை ரூபா பெறுமதியில் 900 -1000 கோடிக்கு இடையில் வரும் என்று கணக்கிடப்படுகிறது. அதாவது ஒரு நாள் வருமானம் ஏறத்தாள 80 கோடி ரூபாய்கள். இந்த வருமானம் என்பது பல்வேறு, பல்தரப்பு அனுசரணைகள் சார்ந்தது. அதோடு இந்தப் போட்டிகளை நேரடி ஒளிபரப்புச் செய்யும் ஸ்ரார் ரீவிக்கும் சங்கடம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்தியா மே.இந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையிடம் நட்டஈடு கோரலாம். எதிர்வரும் 5 வருடங்களுக்கு மே.இந்தியத் தீவுகள் உடனான தொடர்கள் அனைத்தையும் நிறுத்திவிடலாம். ஐ.பி.எல் போட்டிகளில் மே.இந்தியத் தீவுகள் வீரர்கள் விளையாடுவதைத் தடைசெய்யலாம் என்றவாறாக பல கருத்துக்கள், ஊகங்கள் வெளிந்து கொண்டிருக்கின்றன. இந்த ஐந்தாண்டுத் தடை என்பது செயற்படுத்தப்பட்டால் மே. இந்திய அணி 10 டெஸ்ட், 15 ஒரு நாள் போட்டிகள், நான்கு இருபதுக்கு இருபது போட்டிகளை இழக்கும் நிலை ஏற்படும்.

இது இந்திய கிரிக்கெட் சபைக்கன்றி, மே.இந்தியக் கிரிக்கெட் சபைக்கே படு-பாதகமான நிலையை உருவாக்கும் இதற்கிடையில் இலங்கை கிரிக்கெட் சபை சில நன்மைகளையும் எதிர்பார்த்தாலும், சமயமறிந்து உடனடியாக இந்தியா சென்று ஐந்து ஒரு நாள் போட்டிகளில் விளையாட சம்மதம் தெரிவித்துள்ளது.

இது எமது மண்ணின் பெருமையை எடுத்துக் காட்டும் நிகழ்வாகும். மேலும் ஐ.சி.சி-யினது தன் கருத்தில் இரண்டுபேரும் தம்மை அணுகினால் இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டு பிரச்சினையைத் தீர்க்கத் தயாரென்று அறிக்கை வெளியிட்டுள்ளது. (உலகக் கிரிக்கெட் முதலாளி ஏன் காத்திரமான பங்கை உடனடியாக அளித்து தன் கடமையை நிறைவேற்றக்கூடாது) போதாதற்கு இந்தச் சுற்றுப்பயணம் சீர்கெட்டுப் போனமைக்கு குவைன் பிராவோதான் காரணம் என்று மே.இந்தியத் தரப்பில் இருந்து கருத்துக்கள் வருவதாக ஊடகங்களில் பார்க்கமுடிந்தது. எது எவ்வாறாயினும் இந்தத் தொடர் முறிவடையாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு மேற்கிந்தியக் கிரிக்கெட் சபைக்கேயானது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எதிர்வரும் காலம் என்ன மாதிரியான முடிவுகளை இந்தியக் கிரிக்கெட் சபை எடுக்கப்போகிறது என்பதைக் காட்டும். ஆனால் ஒன்று நிச்சயம். இந்திய கிரிக்கெட் சபை மிகமிகப் பலம் நிறைந்தது.

இது இவ்வாறிருக்க, அணி முகாமையாளர் ரிச்சி ரிச்சட்சன், பிரதம தெரிவாளர் கிளைவ் லொயிட் ஆகிய வீரர்களுக்கும், வீரர்கள் சம்மேளனத்துக்கும் மேற்கிந்திய கிரிக்கெட் சபைக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல் தொடர்பில் நீண்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கத் தயாராகிவருவதாகத் தெரிகிறது.

இன்னொருபுறம் டிசம்பர், ஜனவரியில் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக மூன்று டெஸ்ட் போட்டி, ஒரு இருபதுக்கு இருபது போட்டி, ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் தடைகள் ஏதுமின்றி நடைபெறும் என்று மே.இந்தியக் கிரிக்கெட் சபை, தென் ஆபிரிக்கக் கிரிக்கெட் சபைக்கு உறுதியும் வழங்கியுள்ளது.

## இவரையும் கவனியுங்கள்



சிறிது ஓரங்கட்டப்பட்டாலும், தொடர்ந்தும் அணியில் இடம் பிடிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் யூனுஸ்கான், தனது சாதனைப் பதிவு இரண்டை ஏற்படுத்தி உள்ளார். ஒன்று பாகிஸ்தானின் இன்சமாம் உல்ஹக் தன் கணக்கில் சேர்ந்திருந்த 25 டெஸ்ட் சதங்களை சமன் படுத்தியது. இரண்டாவது டெஸ்ட் விளையாடும் அனைத்து நாடுகளுக்கு எதிராகவும் சதம் பெற்றது. சில தினங்களுக்கு முன் அவுஸ்திரேலியாவுக்கு எதிராகப் பெற்ற சதத்துடன் இந்தச் சாதனையை யூனுஸ்கான் ஏற்படுத்தினார். இவ்வகையில் தென் ஆபிரிக்காவின் கெரி கேர்ஸ்ரன், ஜக்கஸ் கலிஸ், இலங்கையின் மார்வன் அத்தப்பத்து, மஹேல ஜயவர்த்தன, குமார் சங்கக்காரா, அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ்வோ, ரிக்கி பொன்ரிங், அடம் கில்கிறிஸ்ட் இந்தியாவின் சச்சின், ராகுல் டிராவிட், மே.இந்தியாவின் பிறைன் லாறா ஆகியோருடன் பாகிஸ்தானின் முதல் டெஸ்ட் வீரராக யூனுஸ்கானும் இணைந்துகொள்கிறார்.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இலங்கை அணிக்கு எதிராக 177 ரன்கள் குவித்தபோது தான் மொஹமட் யூசுப்பின் 24 சதங்களை சமன்படுத்தியுள்ளேன் என்பதும், அவுஸ்திரேலியாவிற்கு எதிராக மட்டுமே இதுவரையில் சதம் பெறவில்லை என்பதும் ஞாபகத்துக்கு வந்தது.

அதோடு இன்னொரு சதம் அடித்தால் ஜாம்பவான் இன்சமாம் உல் ஹக்கின் சதங்களை சமன் செய்யமுடியும் என்பதையும் உணர்ந்தேன். இப்பொழுது இரண்டும் ஒரே கல்லில் வீழ்த்தப்பட்டுள்ளது. மிகுந்த திருப்தியாகவும், சந்தோசமாகவும் இருக்கிறது என்று கூறியுள்ளார்.

விளையாட்டு
ஜோசப் கிருஷ்ணா




# வருமுன் காப்போம்!



முன்பெல்லாம், செல்போன்கள் இல்லாத காலங்களில், பெண்கள்மீது பலாத்காரம் இருந்ததில்லையா என்றுகூடக் கேட்கலாம். ஆனால் செல்போன்வந்த பிறகு பெண்கள்மீதான பாலியல் வன்முறைகள் குறைவதைக் காட்டிலும் அதிகமாகியுள்ளன. செய்திகளைப் பரிமாற்றம் செய்து கொள்ளும் சாதனமாக இருந்த செல்போன், கமெரா, எம்.எம்.எஸ் பயன்பாடுகள், வீடியோ பயன்பாடுகள் வந்தபின் ஆண்கள், பெண்களைக் கவர்வதற்கு இதனை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.

கணவன் - மனைவி இருவர் வேலைக்குச் செல்லும் குடும்பத்தில் முதியவர்களும் வீட்டில் இல்லாமல் இருப்பது, அந்நியர்களுடன் ஆண்- பெண் குழந்தைகள் நீண்டநேரம் பழகுவது, தனித்திருப்பது, இணையத்தின் மூலம் ஆபாசங்களைப் பரிமாறிக் கொள்வது போன்றவை, சென்ற தலைமுறைக்கு கிட்டாத விஷயங்கள், இந்தத் தலைமுறைக்கு எளிதாகக் கிடைக்கின்றன.

மது எவ்வாறு மனிதனுள் சென்றபிறகு தவறு செய்யத் தூண்டுகின்றதோ, செல்போனில் கிடைக்கும் அந்தரங்க விசயங்கள் ஆண் - பெண் இருபாலாரையும் தவறு செய்யத் தூண்டுகின்றன. வந்தபின் அவதிப்படுவதைவிட வருமுன் காப்பது மேல் அல்லவா? செல்போன் எதற்குத் தேவை என்பதை இளைய தலைமுறைதான் முடிவு செய்யவேண்டும்.

# மழைக்கால கூந்தல் பராமரிப்பு



கோடை காலத்தில் அதிகப்படியாக வறண்டு பாதிப்பிற்கு உள்ளாகும் கூந்தல் மழைக்காலத்தில் நன்கு குளிர்ந்து எப்போதும் ஈரப்பதத்துடன் இருப்பதால் வலுவிழந்து இருக்கும். அதுமட்டுமின்றி, ஈரப்பதத்துடன் எண்ணெய் பசை இருந்தால், கூந்தலிலிருந்து ஒருவித துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும். ஸ்கொல்ப்பானது சுத்தமாக இல்லாவிட்டால் மழை காலத்தில் அதிகபடியாக ஈரப்பசையினால் அரிப்புகளுடன், துர்நாற்றத்தை ஏற்படுத்தும். ஆகவே வாரத்திற்கு மூன்று முறை ஷம்பு போட்டு அலசினால், கூந்தலில் தூசுபடிவதை தவிர்க்கலாம். அப்படி பயன்படுத்தும் ஷம்பு, மழை காலத்தில் எண்ணெய் பசை அதிகமாக இருக்கும் ஷம்புவை பயன்படுத்தக்கூடாது.


ஏனெனில், இவை இன்னும் கூந்தலில் எண்ணெய் பசை அதிகரித்து துர்நாற்றத்தை அதிகரிக்கும். எனவே இயல்பாகவே எண்ணெய் பசை கொண்டவர்கள், மைல்டு ஷம்புவை பயன்படுத்தவேண்டும். அதிலும் ஷம்புவிற்கு பதிலாக நெல்லிக்காய், சீகைக்காயை போன்றவற்றை கொண்டு கூந்தலை பராமரிப்பது இன்னும் சிறந்தது.

மேலும் கூந்தலில் துர்நாற்றம் வீசாமல் இருக்கவேண்டுமானால், கூந்தலுக்கு ஹேர் கண்டிஷனர் பயன்படுத்தவேண்டும். அதிலும் கண்ட கண்ட ஹேர் கண்டிஷனர்களை பயன்படுத்தாமல் விலை அதிகமாக இருந்தாலும் நல்ல தரமான ஹேர் கண்டிஷனர்களை பயன்படுத்த வேண்டும்.

அல்லது இயற்கை ஹேர் கண்டிஷனர்களையே எப்போதும் தேர்வு செய்யுங்கள். அதிலும் எலுமிச்சை சாறு, பேக்கிங் சோடா அல்லது அப்பிள் சீட் வினாகிரி போன்றவற்றை பயன்படுத்தி கூந்தலை அலசுவது இன்னும் சிறந்தது.

மழைக்காலங்களில், ஹேர் ஸ்ட்ரைனின், ஹேர் கலரிங் போன்றவற்றை தவிர்க்கவேண்டும். ஏனெனில் அது கூந்தலின் பாதிப்பை அதிகப்படுத்துவதுடன், ஸ்கொல்ப்பையும் அதிக பாதிப்புக்குள்ளாகும். எனவே இந்த செயல்களை தவிர்ப்பது நல்லது.

# வீட்டில் கர்ப்பத்தை அறியவேண்டுமா?




பெண்கள் கருவுற்றிருப்பதை வீட்டிலேயே சோதித்துக் கொள்ள வந்துள்ள கருவிதான் (ஹோம் பிரக்னன்ஸி டெஸ்ட்) வீட்டில் கர்ப்ப பரிசோதனை என்பதாகும். இதனை பயன்படுத்தும் முறை பற்றி விளக்கமாகப் பார்க்கலாம். கடையில் ஹோம் பிரக்னன்ஸி டெஸ்ட் கருவியை வாங்கும்போது அதன் எக்ஸ்பைரி டேட் எனப்படும் காலாவதி திகதியை பார்த்து வாங்கவும்.

அதில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை சரியாக படித்துக் கொள்ளவும். கருவுற்றிருப்பதற்கான பரிசோதனை செய்ய வேண்டியவரின் சிறுநீரை ஒரு சிறிய கப்பில் பிடித்துக்கொண்டு, அதில், வீட்டில் ஹோம் பிரக்னன்ஸி டெஸ்டில் கொடுக்கப்பட்டுள்ள பரிசோதனை ஸ்டிக்கை வைக்கவும். சில நிமிடங்கள் காத்திருக்கவும்.

ஒரு சில ஸ்டிக்குகளில் துல்லியமாக முடிவுவர 10 நிமிடங்கள் கூட காத்திருக்க வேண்டியதிருக்கும். பிறகு, 10 நிமிடம் கழித்து, சிறுநீரில் வைக்கப்பட்ட ஸ்டிக்கில் உள்ள கோடோ அல்லது பிளஸ் என்ற குறியீடோ நிறம் மங்கும் அல்லது பளிச்சென்று மாறும். நிறம் மங்கினாலோ அல்லது பளிச்சென்று மாறினாலோ கருவுற்றிருப்பதாக அர்த்தமாகும். தற்போது டிஜிட்டல் டெஸ்ட் கருவிகளும் வந்துவிட்டன. அவற்றை சிறுநீரில் வைத்து 10 நிமிடங்களுக்குள், பிரக்னென்ட் அல்லது நொட் பிரக்னன்ட் என்று வார்த்தையாகவே பரிசோதனை முடிவு வந்துவிடுகிறது. பொதுவாகவே இந்த டெஸ்ட்டை மாதவிலக்கு தள்ளிப்போய் ஒரு வாரம் கழித்து செய்யலாம். எந்த நேரத்திலும் செய்யலாம். ஆனால், காலையில் எழுந்ததும் செய்யும் சோதனை முற்றிலும் சரியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

# பட்டுச்சேலை பராமரிப்பு அவசியமானதே!



எவ்வளவோ விலைகொடுத்து எடுத்த பட்டுச்சேலைகள் அடிக்கடி உபயோகப்படுத்தப் படாமல் பராமரிப்பும் இல்லாமல் கிழிந்துபோய் நம்மை வேதனை அடையச்செய்யும். ஜரிகை வேலைப்பாடு நிறைந்த சேலைகளை எப்படித்தான் பராமரிப்பது? இப்போது சில டிப்ஸ்.

* பட்டுச்சேலைகளை பிளாஸ்டிக் பைகளில் மடித்து வைக்காமல் துணிப்பைகளில் மடித்து வைப்பதோ அல்லது தூய்மையான கொட்டன் துணிகளில் சுற்றிவைப்பதோ நல்லது.

* 60 நாட்களுக்கு ஒரு முறை பட்டுச்சேலைகளை நிழலில் காயப்போட்டு மடித்து வைப்பதால் பூஞ்சானம் பிடிப்பதுபோன்ற பேச்சுக்கு இடமில்லை.

* நேராக வெயிலில் பட்டுச்சேலைகளை உலர்த்தினால் சேலைகளில் நிறமானது வெளுத்து போக வாய்ப்புள்ளது.

* பட்டுச்சேலைகளை எப்பொழுது பயன்படுத்தப் போகிறோமோ அப்பொழுது இஸ்திரி போடுவதே சிறந்தது.

* இஸ்திரி போட்டு பிரிக்கப்படாமலேயே பட்டுச் சேலைகளை வைத்திருக்கும்போது அதன் மடிப்புகளில் விரைவிலேயே துணி கிழிய ஆரம்பித்து விடும்.

* அதே பேரில் இஸ்திரிபோட்டு பட்டுச் சேலைகளை ஹேங்கரில் தொங்கவிடக் கூடாது. இதனால் புடவைகளில் கரை ஏற்பட வாய்ப்புள்ளது.

* புடைவைகளை பெட்டிகளில் (சூட்கேஸ்கள்) வைத்து பூட்டி வைக்கவும் கூடாது.

* அலமாரிகளில் கொட்டன் பை அல்லது துணிகளில் சுற்றிவைப்பதே சிறந்தது.

* மேலும் நப்தலீன் உருண்டைகளை நேரடியாக புடைவைகளில் படுவதுபோல் போடக் கூடாது. அவற்றில் இருக்கும் இரசாயனப் பொருட்கள் பட்டுச்சேலைகளில் கறைகளை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளது.

# அம்மாவின் தாலாட்டு



பெண்கள் பெரும்பாலும் தங்கள் குழந்தைகளை இடப்பக்கமாகவே அணைத்துத் தூக்கிச் செல்லுகின்றனர். அந்த நிலையில்தான் குழந்தைகள் அமைதியாக உள்ளன. வலப்புறம் மாற்றினால் அழ ஆரம்பிக்கின்றன. ஏனென்றால் இடப்புறம் உள்ள இதயத்தின் துடிப்பானது குழந்தைக்குத் தாலாட்டைப் போன்ற சுகத்தைத் தருகிறது. ஆனால் வலப்புறம் குழந்தை இருக்கும்போது இதயத்துடிப்பு கேட்காததால் அவை அழுகின்றன.

இவ்வாறு பாரிஸ் அறிவியல் வளர்ச்சிக் கழக ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

**250/= பரிசு** வாரம் ஒரு **அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-443

**கேள்வி: பெண்கள் கருத்தரித்திருப்பதை கண்டறியும் கருவி?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 10. 11. 2014

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 443
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 441 இற்கான விடை :-
மாகிறெட் தட்சர்
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
திருமதி ஶ்ரீ.சுகந்தி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

443
பெயர் : ..................
முகவரி : ..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
கையொப்பம் : ..................

கிழக்கான்



# ஜனாதிபதித் தேர்தல்

## கிழக்கின் நிலைப்பாடு என்ன?

இலங்கைக்கு பாப்பரசர் ஜனவரி மாத முற்பகுதியில் அதாவது 14ம் திகதி விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாப்பரசரின் இலங்கை வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்து நிற்கிறது இலங்கை அரசு. இவ்வாறான போராட்டங்கள் நடைபெறுமாக இருந்தால், பாப்பரசரின் இலங்கை விஜயம் பிற்போடப்பட, தடைப்பட அதீத வாய்ப்புக்களுள்ளன. அரசின் பல நாள் தவத்தின் விளைவாய்ப் பெற்ற பாப்பரசரின் விஜயத்தை அடைந்து கொள்ள இப்போராட்டம் தடையாக அமையப்போகிறது. மேலும், இச்செயல் பாப்பரசரின் இலங்கை விஜயத்தை பரிகசிக்கும் ஒன்றாகவும் அமைந்துவிடலாம் என்ற அச்சம் இப்போது எழாமல் இல்லை.

இலங்கையின் வரலாற்றில் தமிழ் மக்கள் முழுமன துடன் வாக்களித்ததென்றால் அது சந்திரிகா பண்டார நாயக்கா குமார துங்க ஜனாதிபதியாகப் பதவியேற் பதற்கான தேர்தலில்தான் இதனை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் இம்முறை நடைபெறவுள்ள அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பதே இப்போதைய கேள்வி.

தமிழ் மக்கள் வாக்களிக்கிறார்களோ, இல்லையோ பெரும்பான்மை இனத்தவர் ஒருவர்தான் ஜனாதிபதியாக வரப் போகிறார். அதனால் வெல்லக் கூடியவர் யாரோ அவருக்கே வாக்களியுங்கள் என்பது கிழக்கில் உள்ள அரச தரப்பு அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களது உறுதியாகும். ஆனாலும் மக்கள் என்ன நிலைப் பாட்டை எடுப்பார்கள் என்பது இறுதி முடிவாகும். ஆனால் அவர்கள் சொல்வதிலும் உண்மையிருக்கிறது. இதில் யார் வெல்லப்போகிறார்கள் என்பதனை யார் நாடிபிடித்துப்பார்ப்பது என்பதுதான் இப்போதைக்குப் பிரச்சினை.

இருந்தாலும், தமிழரசுக் கட்சியின் 15ஆவது மாநாட்டில் அரசாங்கம் தங்களது கோரிக்கைகளுக்கு திருப்தி கரமான பதிலை தரத் தவறுமிடத்து, வருகின்ற ஜனவரி மாதத்திலிருந்து சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக தமிழரசுக்கட்சி எச்சரித்தமையை சிலர் அச்சத்துடனான விடயமாக உருவாக்கப் பார்க்கின்றனர்.

இதற்கு அவர்கள் சொல்லும் காரணம், முஸ்லிம் கட்சிகள் சில தேர்தலைக்கண்டால் அறிக்கைகளை யும், வீரவசனங்களையும், உறுதி மொழிகளையும் அள்ளிக்கொட்டிவிட்டு, தேர்தல் முடிவுற்றபிறகு அனைத்தும் காற்றில் கரைந்த கதையென முஸ்லிம்களை நடுவீதியில் விட்டுச் செல்வதுபோன்று தமிழரசுக்கட்சியின் எச்சரிக்கை இருக்காது என்று அதற்கு உதாரணமும் சொல்லுகிறார்கள்.

இதில் என்ன சிக்கல் என்றால், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப் போகும் காலமும் தமிழரசுக்கட்சி அறிவித்திருக்கும் காலமும் ஒன்றாக இருப்பதேயாகும்.

தந்தை செல்வா அகிம்சைவழிப் போராட்டத்தை நடத்தி இயலாது போன பின்னர்தான் ஆண்டவன் தலையில் பாரத்தைப் போட்டார். ஆனால் அன்றிலிருந்து அது ஆயுதப் போராட்ட மாக மாறி முள்ளிவாய்க்காலுடன் அழிந்தும்போனது. இப்போது மீண்டும் தமிழரசுக்கட்சி சாத்வீகப் போராட்டத்தை எவ்வாறு முன்னெடுக்கப் போகிறது என்பது முக்கிய கேள்வியாக இருக்கிறது.

தமிழர்களின் அரசியல் தந்தை செல்வாவுடன் முடிந்து போய்விட்டது என்று யாரும் சொன்னதில்லை. ஆனால் ஆயுதவழி கைகூடாமல் போனதற்கு காரணம் தெரியாமல், மீண்டும் தந்தை செல்வா விட்ட இடத்திலிருந்து தமிழரசுக் கட்சி தொடங்க இருப்பதுதான் கவலைக்குரிய விடயம்.

போராட்டம் எவ்வாறு நடக்கும் என்று தெரியாவிட்டா்லும், போராட்ட காலத்தை பொறுத்தவரை மகிந்த ராஜபக்ச மீண்டும் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தல், கிறிஸ்தவர்களின் புனித பாப்பரசரின் இலங்கை விஜயம் இவை இரண்டும் உலகத்தில் முக்கியத்துவம்மிக்கதாகப் பார்க்கப்படும் விடயங்களாகும்.

அடுத்த வருடம் இலங்கை மக்களுக்கு தேர்தல் வருடமாக அமையப்போகிறது. ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி மாத ஆரம்பத்தில் நடைபெறும் என்றெல்லாம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. அதற்குக் காரணம், இப்போது அவசர அவசரமாக நடைபெற்றுவரும் வரவு செலவுத்திட்ட அறிவிப்புக்கள்தான்.

வரவு செலவுத்திட்டம் சாதாரண மக்களுக்கு ஏதாவது செய்ததோ இல்லையோ, உத்தியோகத்தர்களுக்கும், அதிகாரிகளுக்கும், ஓய்வூதியக்காரர் களுக்கும் என நன்கு யோசிக்கத் தெரிந்தவர்களுக்கு ஆயிரக்கணக்கில் நன்மைகளை அள்ளிக்கொடுத்து இருக்கிறது.

இந்த இடத்தில்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெரிய பங்காளிக் கட்சியாகவுள்ள தமிழரசுக்கட்சி தேர்தல் நடைபெறவுள்ள காலப்பகுதியில் இவ்வாறான போராட்டங்கள் செய்ய விளைவது, தமிழ் தேசியக் கூட்டமைப் பிற்கும் அரசாங்கத்திற்குமிடையில் நடக்கும் அரசியற் பனிப்போரை மேலும் வலுப்படுத்தும் என்றே சொல்லலாம்.

தமிழரசுக்கட்சி தமது அறிவிப்பைச் செய்துவைத்து ஒரு மாதங்கள் ஆகின்ற நிலையிலும் அது குறித்து எந்தவிதமான சட்டையும் செய்யாமல் அரசாங்கம் தங்களது நிகழ்ச்சி நிரலிலேயே சென்று கொண்டிருப்பதே மிகவும் குழப்பங்களை உருவாக்கும் என்று அஞ்சப்படுகிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பினூடாக தங்களின் இனப்பிரச்சினைக்குத் தீர:வு கிடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்பிக்கொண்டிருக்கையில் நடைபெறும் சம்பவங்கள் அதனை பற்றி ஒரு சிந்தனையையும் ஏற்படுத்தவில்லை.

இந்த இடத்தில்தான் தமிழ் மக்களின் சலிப்பை இனிப்பாக்கி தாகத்திற்கு பயன்படுத்த தமிழரசுக்கட்சி முயலலாம் என்றும் எண்ணப்படுகிறது.

யுத்த வடுக்கள் இன்னும் தமிழ் மக்கள் மனங்களைவிட்டு ஆறாமலுள்ள போது நடைபெறவுள்ள மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தல் எவ்வாறான முடிவைத் தரும் என்பது கனவானதாக இருந்தாலும், நாடிபிடிப்புகளின்படி அடுத்த ஜனாதிபதி தற்போதைய ஜனாதிபதியே என்பது தெற்கின் நிலைப்பாடாகும். ஆனாலும் நடந்து முடிந்த ஊவா தேர்தில் இது கொஞ்சம் குழம்பி யிருக்கிறது. இந்த குழப்பமே அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு முக்கிய காரணம் என்றும் நம்பப்படுகிறது.

பாப்பரசரின் வருகைக் காலத்தில் தேர்தலை நடத்தவேண்டாம் என கேட்கப்பட்டபோதும், அரசாங்கம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அவசர அவசரமாக நடத்துவதற்கு என்ன காரணம் என்பதற்கான பதிலைப் பெற்றுவிட்டே தேர்தல் நடைபெறுகிறது.

ஒரு சிலரது கருத்துக்களின்படி, பாப்பரசர் சிறுபான்மை இனங்களின் நிலைப்பாடு குறித்து முக்கியமாக ஆராய்வார் என்பதாக இருந்தாலும், அவர் வருகைக்குமுன் தான் மீண்டும் ஜனாதிபதியாகிவிட்டால் மக்கள் விரும்பும் தலைவர் என்ற கருத்தை நிலை நிறுத்திவிடலாம் என்பது தற்போதைய ஜனாதிபதியின் எண்ணமாக இருக்கிறது. என்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகும்.

இலங்கைக்கு பாப்பரசர் ஜனவரி மாத முற்பகுதியில் அதாவது 14ம் திகதி விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாப்பரசரின் இலங்கை வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துநிற்கிறது இலங்கை அரசு. இவ்வாறான போராட்டங்கள் நடை பெறுமாக இருந்தால், பாப்பரசரின் இலங்கை விஜயம் பிற்போடப்பட, தடைப்பட அதீத வாய்ப்புக்களுள்ளன. அரசின் பல நாள் தவத்தின் விளைவாய்ப் பெற்ற பாப்பரசரின் விஜயத்தை அடைந்து கொள்ள இப்போராட்டம் தடையாக அமையப்போகிறது. மேலும், இச்செயல் பாப்பரசரின் இலங்கை விஜயத்தை பரிகசிக்கும் ஒன்றாகவும் அமைந்து விடலாம் என்ற அச்சம் இப்போது எழாமல் இல்லை.

பாப்பரசரின் இலங்கை விஜயத்தின் பின்னணி. இலங்கையில் சிறுபான்மை யினருக்கெதிராக அரங்கேற்றப்படும் செயல்களை ஆராய்தல், கண்டித்தலாக அமையலாமென பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றபோது தமிழரசுக் கட்சி நடத்தப்போகும் தந்தை செல்வா முடியாது என்று விட்டுப்போன சாத்வீகப் போராட்டம் வெற்றியளிக்குமா என்பதே இப்போதைய கேள்வியாகும்.

ஆனால், கிழக்கு மக்களின் நிலைப் பாடு எவ்வாறு இருக்கும் என்ற கேள்விக்கு தற்போது தொடங்கியிருக்கும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வாக்குவேட்டைகளின் நிறைவிலேயே தெரியும்.

இருந்தாலும், தமிழ் மக்களின் இனப்பிரச்சினை உரிமைகள் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் தமது இனத்தின் உரிமையை பெறுவதற்காக ஏதோவொருவகையில் ஒவ்வொருவரும் பங்காற்றி உள்ளனர்.

குறிப்பாக இப்போராட்டத்திற்கு போராளிகள் தொடக்கம் பொருளாதாரம், வரையும் ஜனநாயகரீதியாக இப்போராட்டத்தை வளர்த்துச்செல்ல ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை வழங்கி உள்ளனர் என்பதை எவரும் மறுக்கமுடியாது அதனை மறுப்பதற்கும் எவருக்கும் உரிமையில்லை.

எமது நாட்டில் மூன்று தசாப்த மாக நீடித்த போரும், உட்பூசல்களும், முரண்பாடுகளும் விரும்பியோ, விரும்பாமலோ இலங்கை தீவின் அனைத்து இனமக்களையும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. இதனை எந்த இதயசுத்தியுள்ள மனிதர்களும் மறுதலிக்கமுடியாது.

இந்தவகையில் இன்று எமது நாட்டில் "ஒரே நாடு, ஒரே தேசம், எல்லோரும் ஒரே தாய் மக்கள்" என்ற கோட்பாட்டை முன்னிலைப்படுத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச தனது சிந்தனையை உணர்வு பூர்வமாகவும் இதயசுத்தியோடும் நடைமுறைப்படுத்துவதற்கு இதைவிட வரலாற்றில் பிறிதொரு சந்தர்ப்பம் கிடைக்கப்போவதில்லை. எனவே அவரை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும் என்பது கிழக்கிலுள்ள அரசியல்வாதிகளின் சிந்தனையாக இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மை யினராக வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சரியான முடிவை எடுத்து வெல்லக்கூடியவரை ஜனாதிபதியாக்கி தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பது அரசுடன் இருக்கும் அரசியல்வாதிகளின் நிலைப்பாடாக இருந்தாலும், தமிழர் நலன்சார்ந்தே தமிழர்கள் சிந்திப்பார்கள் என்பது வெளிப்படையானது.

ஒவ்வொரு முறையும் தோற் பவருக்கே வாக்களித்து வாக்கு பலத்தினை வீணடிக்கும் கிழக்குத் தமிழ் மக்கள் நடைபெறப்போகும் 2015 ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 28



# ஒரு இனம் இன்னொரு இனத்தை அடிமைப்படுத்த முடியாது

## அமைச்சர் ராஜித சேனாரத்ன

ஒரு இனம் இன்னொரு இனத்தை அடிமைப்படுத்த முடியாதென தெரிவித்துள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன எத்தகைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டாலும் மனிதத்துவ பண்பு கொண்டவர்களை கட்டியெழுப்பத் தவறினால் பயனில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சுதந்திரத்திற்காக அன்று சிங்கள தலைவர்களுடன் தமிழ், முஸ்லிம் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து போராடினர். இந்த ஒற்றுமையின் காரணமாகத்தான் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது.

ஆறு தசாப்தங்களுக்குமுன் எமது தாய்நாட்டிற்கு கிடைத்த சுதந்திரத்தை பேணி பாதுகாப்பதற்கு சகல சமூகத்தவரும் கைகோர்த்து செயற்படவேண்டும்.

சிங்களத் தலைவர்களுடன் சேர் பொன்னம்பலம் ராமநாதன், அருணாச்சலம், மஹாதேவா, ரி.பி. ஜாயா போன்ற தலைவர்கள் நாட்டிற்குசெய்த தியாகம் மறக்க முடியாதவை.

நாம் எத்தகைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டாலும் மனிதத்துவப் பண்புகொண்டவர்களை கட்டியெழுப்பத் தவறினால் அதில் பயனில்லை.

மனித உள்ளம் சீர்பெற வேண்டும். ஒரு இனம் இன்னொரு இனத்தை அடிமைப்படுத்த முடியாது. தனிச்சிங்கள மொழிச்சட்டம் காரணமாக எமக்கு என்ன பலன்கள் கிட்டியது.

40 வருடங்களின்பின் சிங்களத்துடன் தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டது எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

### நேரடி அரசியலில் இறங்கவுள்ளோம் – பொதுபலசேனா

எதிர்காலத்தில் நடைபெறும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நேரடி அரசியலுக்கு வரவுள்ளோம் என பொதுபலசேனா அறிவித்துள்ளது.

இதற்காக வேட்பாளர்களை தமது அமைப்பு நிறுத்தும் எனவும் பாராளுமன்ற தேர்தல் மாகாண சபை தேர்தல்கள் ஆகியவற்றில் தாங்கள் போட்டியிடப் போவதாகவும் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஒக்ரோபர் 21ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கு உள்நாட்டில் இடம்பெறும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டுமெனவும் பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு, கொரியா மற்றும் இத்தாலி அவுஸ்திரேலியா என வெளிநாடுகளில் பெருந்தொகை இலங்கையர்கள் தொழில்புரிகின்றனர்.

இவர்களுக்கு இங்கு அவ்வப்போது நடைபெறும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்களை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதற்கான சட்ட ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும் எனவும் கலகொடத்தே ஞானசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடும்போக்கு அமைப்பான பொதுபலசேனா நேரடி அரசியலில் தாங்கள் இறங்கப்போவதில்லை என இதுவரை கூறிவந்தமை கவனிக்கத்தக்கது.

### மஹிந்த ராஜபக்ஷவுக்கும் – ஜாதிக ஹெல உறுமய பேச்சுவார்த்தை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றி அளிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

## ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இதேவேளை, ஜனாதிபதி தமது கட்சியின் யோசனைகள் தொடர்பில் 5 நாள் காலக்கெடு விதித்திருப்பதாகவும், அதற்குள் பதிலளிப்பதாகவும் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் சென்ற 2014.10.22 அன்று வெறும் 15 நிமிட நேரமே நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லையென்றும், ஜனாதிபதி அச்சமயம் கடும் சினத்தோடு இருந்ததாகவும் பிரபல ஊடகம் ஒன்று தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறயிருப்பதால் ஜாதிக ஹெல உறுமயுடன் எதுவித உடன்படிக்கைக்கும் செல்வதற்கு தற்போது நேரமில்லை எனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, அரசாங்கத்துக்கு முதன் முதலில் சவால் விடுத்தவர் ரத்ன ஹிமியேயென்று கடும் சினத்தோடு இங்கு குற்றம் சாட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தமது யோசனைகளை ஏற்கிறீர்களா என்று ஹெல உறுமய தலைவர் ஓமல்பே சோபித தேரர் ஜனாதிபதியிடம் வினவியபோது, அவர் அதை நிராகரிப்பதாகக் கூறி எழுந்து சென்றதாகவும் அவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் சுசில் பிரேம்ஜெயந்த, டல்லஸ் அழகப்பெரும, பஷில் ராஜபக்ஷ ஆகியோரும் இச்சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

அதேவேளை குறித்த சந்திப்பின் போது, ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைப் பிரகடனம் தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாக முடிவெடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் அரசாங்கமும் ஜாதிக ஹெல உறுமயவும் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

### ஞானசாரருக்கு எதிராக வழக்குப் பதிவு

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைக்குமாறு கொழும்பு, கோட்டை நீதவான் திலின கமகே, கொம்பனி வீதி பொலிஸாருக்கு ஒக்ரோபர் 20ஆம் திகதி உத்தரவிட்டார்.

நவம்பர் மாதம், 1ஆம் திகதிக்கு முன்னதாக அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைக்குமாறு அந்த உத்தரவு உள்ளது.

ஜாதிக பல சேனாவின் முக்கியஸ்தரான வட்டரக்க விஜித்த தேரர் தாக்கல் செய்திருந்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணி மைத்திரி குணரத்னவை தூசித்தமை தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். இந்த விவகாரத்தில் ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நாடு பயங்கரத்தை நோக்கிப் பயணிக்கின்றது– ஆஸாத் சாலி

நாட்டின் போக்கு நினைத்துப் பார்க்க முடியாததாக மத்திய மாகாண சபை உறுப்பினரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான ஆஸாத் சாலி குறிப்பிட்டார்.

பொதுபலசேனா நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் எதிர்வரும் தேர்தலில் நிறுத்த சிங்கள பௌத்த தலைவர்கள் எம்மிடம் உள்ளனர். அவர்களை நேரம் வரும்போது வெளிப்படுத்துவோம். அத்துடன் எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடுவோம் என்கின்றனர். இதைத்தான் நாம் அன்று எடுத்துக்கூறினோம் என்றும் ஆஸாத் சாலி குறிப்பிட்டு உள்ளார்.

இவர்கள் சிங்கள பௌத்த நாடு, சிங்கள பௌத்த தலைவர் என்றுகூறி அரசியல் நடாத்த முற்படுகின்றனர். மேலும் பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள். அதற்குப் பதிலாகப் போட்டியிடக்கூடியவர்கள் எம்மிடம் உள்ளனர் என்கின்றனர்.

அப்படியாயின் இவர்கள் இனவாதத் தலைவர்களை உருவாக்கியுள்ளனர் என்றுதான் அர்த்தம். இதனை நோக்கும்போது நாட்டின் போக்கு நினைத்துப் பார்க்கமுடியாத பயங்கரமாக உள்ளது.

நாம் பொதுபலசேனா கொரியாவில் நிதி திரட்டியதாக எடுத்துக்கூறினோம். ஆனால், இன்றுவரை எவரும் நிதி கொடுத்ததை அல்லது நிதி பெறப்பட்டதை மறுக்கவில்லை. ஆனால், பாதுகாப்பு அமைச்சின் மூலம் பள்ளிவாசல்களுக்குச் சென்று பள்ளிவாசல்கள் நிர்மாணிக்கப்படுவது பற்றியும் நிதி எவ்வாறு கிடைக்கின்றது என்றும் விசாரணை செய்கின்றனர். இவர்களை யார் பள்ளிவாசலுக்கு அனுப்புகின்றனர்.

நாடு எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்கப் போகின்றது. அரசாங்கம் நாட்டை பரிபாலனம் செய்யமுடியாவிட்டால் இக்கட்டான நிலைக்குச் செல்லும் என்பதில் ஐயமில்லை. கடந்த முறை ரணில் விக்கிரமசிங்ஹவிடம் இரு வருடங்கள் ஆட்சியை ஒப்படைத்த போது அவர் நாட்டின் கடன்களை செலுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அதனால் அவரால் அரச நியமனங்கள் தொழில் வழங்க முடியவில்லை. அவரின் இரு வருடங்கள் நாட்டை கட்டியெழுப்பவே பயன்படுத்தப்பட்டது. இதேபோல் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரும் தலைவர்கள் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இன்று ஜே.வி.பியும் அரசாங்கத்தை கவிழ்க்கவேண்டும் என்கின்றது. நாட்டில் கப்பம், ஊழல் அதிகரித்துள்ளது.

(தொடரும்...)



# மூட்டுவலிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!



இன்று, பொது மருத்துவரிடம் சிகிச்சைக்கு வருபவர்களில் மூன்றில் ஒருவர் மூட்டுவலி காரணமாகவே வருகிறார். மூட்டுவலி என்பது முதியவர்களை மட்டுமின்றி, இன்று இளைஞர்களையும் டீன் ஏஜ் பெண்களையும் பாதிக்கின்ற நோயாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

### என்ன காரணம்?

உடல் உழைப்பு குறைந்து வருவதும் உடற்பயிற்சி இல்லாததும் முக்கிய காரணங்கள். நாட்டில் கணினித்துறை பெருவளர்ச்சி பெற்ற பிறகு 35 சதவிகித இளைஞர்கள் அதிக நேரம் உட்கார்ந்தே வேலை செய்கிறார்கள். இவர்களுக்கு மூட்டுத் தசை இறுகி மூட்டுவலி வந்துவிடுகிறது. மாறிவரும் உணவுமுறை அடுத்த காரணம். இன்றைய இளைய தலைமுறையினர் பாரம்பரிய உணவு முறையை ஓரங்கட்டிவிட்டு, மேற்கத்திய உணவுக் கலாசாரத்துக்கு மாறிவிட்டதால், சிறுவயதிலேயே உடல்பருமன், ஹோர்மோன் கோளாறுகள் வந்து அவதிப்படுகிறார்கள். இந்த அவதி நாளடைவில் மூட்டுவலிக்கும் வழி அமைத்துவிடுகிறது.

### முழங்கால் மூட்டு

மூட்டுவலி என்பது உடலில் எந்த மூட்டிலும் ஏற்படக்கூடியதுதான் என்றாலும், முழங்கால் மூட்டில் ஏற்படுகிற வலியைத்தான் மூட்டுவலி (Arthritis) என்று பொதுவாகச் சொல்கிறோம். தொடை எலும்பின் கீழ்ப்பகுதியும் முழங்கால் எலும்பின் மேல் பகுதியும் இணைகின்ற இடமே முழங்கால் மூட்டு (Knee Joint). இது உடல் எடையைத் தாங்குகின்ற முக்கிய [illegible] மூட்டு. முழங்கால் மூட்டைத் தொட்டுப் பார்த்தால், நம் கைக்குத் தட்டுப்படுவது முழங்கால் மூட்டுச் சில்லு (Knee cap). முழங்கால் மூட்டுக்கு நேரடியாக பாதிப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக இயற்கை நமக்குக் கொடுத்திருக்கிற பாதுகாப்பு மூடி இது. இதற்குப் பின்னால் உள்ளதுதான் உண்மையான முழங்கால் மூட்டு.

உடலில் உள்ள மூட்டுகளிலேயே முழங்கால் மூட்டின் உள்ளமைப்பு சற்று வித்தியாசமானது. மூட்டைப் பிணைக்கின்ற நாண்களும் (Cruciate ligaments), மெனிஸ்கஸ் (Meniscus) எனும் குஷன் களும் இந்த மூட்டில்தான் உள்ளன. அடுத்து, அசையும் மூட்டுகளில் மிகப் பெரியதும் இதுதான். இங்குள்ள எலும்புகளின் தலைப்பகுதியை சைனோவியல் படலம் (Synovial membrane) சூழ்ந்து உள்ளது. இது 'சைனோவியல் திரவம்' என்ற பசை போன்ற ஒரு திரவத்தைச் சுரக்கிறது. மூட்டில் இது ஒரு மசகுபோல் பணிசெய்கிறது. மூட்டு எலும்புகள் உரசிக் கொள்ளாமல் அசைவதற்கு உரிய இயக்கத் தன்மையை அளிக்கிறது. அடுத்து, மூட்டுகளைச் சுற்றி 'கார்ட்டிலேஜ்' (Cartilage) எனும் மிருதுவான குருத்தெலும்புகள் உள்ளன. இவைதான் மூட்டுகள் எளிதாக அசைய உதவுகின்றன.

### பொதுவான காரணங்கள்

உடல் பருமன், வயது அதிகரிப்பது, அடிபடுதல், காயம், மூட்டுச்சவ்வு கிழிதல், யூரிக் அமிலம் அதிகமாக உற்பத்தியாகி மூட்டுகளில் படிவது, பக்டீரியா கிருமித்தொற்று, ருமாட்டிக் நோய், காசநோய் போன்றவை முழங்கால் மூட்டுவலிக்குப் பொதுவான காரணங்கள்.

### மூட்டு எலும்பு வளைவு

சிலருக்குப் பிறவியில் கால் நேராக இருந்தாலும் 30 வயதுக்கு மேல் இது வளையத் தொடங்கும். இவ்வாறு கால் வளைவு உள்ளவர்களில் 100இல் 90 பேருக்கு முழங்கால் மூட்டு வெளிப்பக்கமாகவும் கால் உள்பக்கமாகவும் வளைய ஆரம்பிக்கும். இதற்கு ஜெனு வேரம் (Genu varum) என்று பெயர். 100இல் 10 பேருக்கு முழங்கால் மூட்டு உள்நோக்கியும் கால் வெளிப்பக்கமாகவும் வளைய ஆரம்பிக்கும். இதை முட்டிக்கால் என்று சொல்வார்கள். ஜெனு வல்கம் (Genu valgum) என்று இதற்குப் பெயர்.

இவற்றின் விளைவால், முழங்கால் மூட்டின் உள்பக்கமும், முழங்கால் மூட்டுச்சில்லும் அதிக தேய்மானம் அடைகின்றன. காரணம், நாம் நிற்கும்போது, நடக்கும்போது உடல் எடையைத் தாங்குகின்ற விசை நேர் கோட்டில் செல்லவேண்டும். இது முழங்கால் எலும்புகள் நேராக இருந்தால் மட்டுமே சாத்தியம் வளைவாக இருந்தால், உடல் எடையைத் தாங்கமுடியாமல் முழங்கால் எலும்புகள் சீக்கிரத்தில் தேய்ந்துவிடுகின்றன.

### அடிபடுதல் ஒரு காரணம்

மூட்டில் வலி ஏற்படுவதற்கு முழங்காலில் அடிபடுவதும் ஒரு முக்கிய காரணம்தான். அடிபடும்போது முழங்கால் மூட்டுச் சமன் இல்லாமல் போவதால், மூட்டின் ஒரு பகுதி தாழ்ந்து மூட்டின் தேய்மானத்துக்கு வழி அமைக்கும். மூட்டில் அடிபடுவதைக் காலத்தோடு கவனித்துச் சிகிச்சை பெற்றுக்கொண்டால், இந்த நிலைமையைத் தவிர்க்கலாம். இல்லை என்றால் மூட்டுவலி தொல்லை கொடுக்கும்.

### ஒஸ்டியோபொரோசிஸ்

பொதுவாக, ஒவ்வோர் எலும்பும் குறிப்பிட்ட கால இடைவெளியில் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும். பழைய செல்கள் நீக்கப்பட்டு, புதிய செல்கள் உருவாகும். இளமையில் இது வேகமாக நடக்கும். முதுமை நெருங்கும்போது இது தாமதமாகும். பழைய செல்லுக்கு பதில் புதிய செல்கள் உருவாகாமல் போகும்.

இதனால் அங்கு சிறு சிறு துவாரங்கள் ஏற்பட்டு எலும்பு வலு இழக்கும். இதற்கு ஒஸ்டியோபொரோசிஸ் (Osteoporosis) என்று பெயர். இந்த நோய் முழங்காலைப் பாதிக்குமானால், குருத்தெலும்புகள் நொடிந்து மூட்டுவலியை ஏற்படுத்தும். பொதுவாக, பெண்களுக்கு மாதவிலக்கு நின்று போனதும், ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் சுரப்பது குறைவதால், உடலில் கல்சியம் உற்பத்தி குறையும்.

இதனால், எலும்பிலுள்ள கல்சியத்தின் அளவு குறைந்து அதன் அடர்த்தியும் குறையும். இது மூட்டுவலிக்கு வரவேற்பு கொடுக்கும். அதிலும் உடல் பருமன் மற்றும் ஹோர்மோன் கோளாறுகள் உள்ள பெண்களுக்கு இளம் வயதிலேயே முழங்கால் மூட்டுவலி வந்துவிடுகிறது.

*(தொடரும்...)*


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

# வரம்

சோ.தர்மன்

இந்த உலகத்தில் யாருக்குத்தான் கவலையில்லை. கவலைகளின் தன்மை தான் வேறுபடுமே ஒழிய, கவலையே இல்லாத மனித உயிர் இல்லையென்று தான் சொல்லவேண்டும். இதில் தீர்க்கக் கூடிய கவலைகளின் அவஸ்தையைவிட தீர்க்கவே முடியாத கவலைகளின் வலி கரையானைப்போல் தினமும் அரித்துக் கொண்டேயிருக்கும். சமயத்தில் தன்னைப் படைத்த கடவுளையே சபிக்க வேண்டியிருக்கும்.

என்னுடைய அக்காவின் கவலை யாராலும் என்றென்றைக்கும் தீர்க்கவே முடியாத கவலை. என் அக்காளுக்கு என்ன குறை? சொந்த தாய்மாமனுக்கு மனைவியானவள், மாமா அரசில் பெரிய அதிகாரி. வாசலில் எந்நேரமும் காத்துக் கிடக்கும் அரசு வாகனம். கை நிறைய சம்பளம். தாய் மாமன்தான் என்றாலும் இதுவரை தவறிக்கூட, ஒரு சுடுசொல்கூட சொல்லாத அன்பான கணவர். இரண்டு பையன்கள். மூத்தவன் மனைவியுடன் வெளிநாட்டில், போகவர கிரீன் கார்டு விசா. இளையவன் பிரபல கம்பெனியில் பொறியாளர். திருமணத்திற்கு வரன்கள் வந்து கொண்டிருக்கின்றன.

தங்க விக்கிரமாய் வளர்ந்து நிற்கும் ஒரே மகள் மகாலட்சுமி. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை மாதிரி செய்யச் சொன்னதை மட்டுமே செய்யும் நடமாடும் பொம்மை. அவளால் சுயமாகச் சிந்தித்து எதுவும் செய்ய இயலாது. அரைகுறைப் பேச்சு. முகத்தில் எப்போதும் மத்தாப்பாய் சிதறும் சிரிப்பாணி.

"யே...யே. மகா, தண்ணி கொண்டுவா".

தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு சிலையாய் சாய்ந்து கொள்வாள்.

"அப்பா, சாப்பிட்டாச்சில்ல, சாப்பிட்ட தட்ட எடுத்திட்டுப் போ"

சொன்னால்தான் செய்வாள்.

"அப்பா ஒபீசுக்கு ரெடியாயிட்டாரு, கார் வந்திருச்சானு பாரு" ஓடிப்போய் ஜன்னல் வழியே எட்டிப் பார்ப்பாள். "வரவில்லை" என்ற சொல் தெளிவில்லாமல் சிரிப்புடன் வெளிவரும்.

"சரி, அப்பாவுக்கு வோட்டர் கேன்ல தண்ணி எடுத்துவை". வேகமாய் போய் வோட்டர் கேனை கையில் எடுப்பாள். அப்புறம் திகைத்தபடியே சிலையாய் நிற்பாள். அவள் நிற்பதற்கான காரணம் என் அக்காவுக்கு மட்டுமே தெரியும். அப்போது பெற்று வளர்த்த அந்த வயிறு பற்றி எரியும். கண்ணீர் பொத்துக் கொண்டுவரும்.

தண்ணீர் போத்தலில் ஐஸ் வோட்டர் நிரப்பவேண்டுமா? இல்லை சாதாரண தண்ணீர் நிரப்பவேண்டுமா? என்று கேள்வி கேட்கத்தெரியாமல் மௌனமாக நிற்பாள். சரி, ஒவ்வொரு வேலையாக எதற்கு ஏவவேண்டும், மொத்தமாகச் சேர்ந்து செய்யவேண்டிய வேலைகளை எல்லாம் செய்யச் சொல்லிவிடலாம் என்றால் அதுவும் முடியாது.

ஒவ்வொன்றாய்தான் சொல்ல வேண்டும். பெட்சீட்டை மடித்து வை என்று சொல்லி, அதை செய்து முடித்த பின்தான் தலையணையை எடுத்து வை என்று சொல்லவேண்டும். மொத்தத்தில் ஒரு நடமாடும் அழகிய உயிருள்ள பொம்மை என்று சொல்லிவிடலாம். அதேசமயம் வேலை ஏவுகிறவர்களுக்கு அசாத்தியமான பொறுமையும் பக்குவமும் வேண்டும். கொஞ்சம் அதட்டிவிட்டாலோ அல்லது கோபப்பட்டு விட்டாலோ, காரியம் கெட்டது, காற்றில் பறந்துபோகும் பஞ்சுபோல் மகாலட்சுமியின் முகத்தில் சிரிப்பது பறந்து போய்விடும்.

என்னுடைய அலுவல் நிமித்தமாக கொழும்புபோகும் போதெல்லாம் அக்கா வீட்டில் தான் தங்குவேன். நான் அங்கே தங்குகின்ற நாட்கள் மகாலட்சுமிக்கு சந்தோஷமான நாட்களாக இருக்கும். அவளுக்கு நான் தாய்மாமன் உறவாகையால் கேலியும் கிண்டலும் வீடே கலகலப்பாயிருக்கும்.

மகாலட்சுமிக்கு என்னிடம் புகார் சொல்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கும். சொல்ல இயலாததால் அவள் மனசுக்குள் தேங்கிக் கிடக்கும். அக்காளே அந்த விஷயங்களை விவரிப்பாள். மகா அமைதியாக கவனிப்பாள்.

"மாமா வரட்டும் சொல்லுறேன்னு சொன்னியே, இப்ப சொல்லுடி, எங்களுக்கு ஒன்னும் பயமில்லை"

எதையோ சொல்ல முயற்சித்து தோற்றுப்போவாள். கண்கள் கலங்கும். சிரிப்பு மறைந்துபோகும். வார்த்தைகள் வருவதற்குப் பதில் கண்ணீர் பொங்கி வரும்.

"நாலு மாசம் ஆச்சு தம்பி, அத இன்னும் மறக்காம வச்சிருக்குறதப் பாரேன், பெரிய ரோஷக்காரியா இருக்காப்பா"

"மகா, அழுகாதம்மா, மாமா இருக்கேன்ல, அத என்னனு கேட்டு, ஒங்க அம்மாவ நாலு சாத்து சாத்திருவோம், நீ அழாதே, மகா நல்ல புள்ளையாச்சே, மகா, கண்ணீரத் தொடச்சிக்கோ".

நாலு மாசத்திற்குமுன் நடந்த அந்த சம்பவத்தை அக்கா சொல்லச் சொல்ல அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள் மகா.

"வேற ஒன்னுமில்ல தம்பி, எளையவனைப் பாக்குறதுக்காக பொண்ணு வீட்டுக்காரங்க வந்தாக, அப்ப எளையவன் என்ன சொன்னாம்னா, மகா, நீ பெட்ரூமுக்குள்ளேயே இருந்துக்கோ, அவங்க போறவரைக்கும் வெளிய வராத அப்படின்னு சொன்னான். அதுக்கு இவ, அப்படித்தான் வருவேன், ரூமுக்குள்ள இருக்கமாட்டேன்னு அடம்பிடிச்சா, ஒடனே ரூமுக்குள்ள போட்டு பூட்டிட்டான். பொண்ணு வீட்டுக்காரங்க போனப்பொறவு, கதவத் தெறந்து பாத்தா, ரெண்டு கண்ணும் கோவப்பழமா செவந்து போயி, மொகமெல்லாம் வீங்கி, அழுது, அழுது யாரோ மாதிரி ஆயிட்டா தம்பி, ரெண்டு நாளு சாப்பிடவேயில்ல, அவள சாப்பிட வைக்கவே பெரும்பாடாப் போச்சு, ஒங்கிட்ட சொல்வம்னு ஓயாம சொன்னா, இன்னும் எளையவனோட பேசவே இல்ல"

"அக்கா, என்னதான் இருந்தாலும் இது பாவமில்லையாக்கா"

"பெரிய பாவம்தான் தம்பி, இல்லனு சொல்லல, நானும் ஒங்க மாமாவும், பையன்கள மீறி எந்த முடிவும் எடுக்க முடியல"

"பெத்த புள்ளைய, அதுவும் ஆசையா இருக்கிற ஒத்தப் பொம்பளப் புள்ளைய, தனி ரூமுக்குள்ள போட்டு பூட்டி வச்சிட்டு, நடு வீட்ல ஒக்காந்து சம்பந்தம் பேசுனீகளாக்கும், பலமா கத்தி, கதவத் தட்டி, கூப்பாடு போட்டு அழுதா, அப்ப என்ன செய்வீக, பெத்த புள்ளைய கழுத்தத் திருகி கொன்றுவீகளா?"

"தம்பி சம்பந்தம் பேச வந்தவங்க போற வரைக்கும் ஒரு மூச்சுகூட வெளிய விடல தம்பி, அப்படியே தூங்குனது மாதிரியே கெடந்து, மனசுக்குள்ளேயே அழுதிருக்கா, அவங்க புறப்பட்டுப் போனதுதான், அடுத்த நிமிஷமே அழுகையைப் பார்த்தா வீடு முழுக்க கேட்குது, கதறிக் கதறி அழுவுறா, யாரையும் கிட்டத்துல வரவிடல, பெரிய ரோஷக்காரிப்பா ஓம் மருமக, அவங்க இருக்கும்போது கத்தியிருந்தா, எங்க மானமே போயிருக்கும், நமக்குத்தான் தம்பி அறிவில்ல, அவளுக்கு அறிவு ரொம்ப அதிகம் தம்பி"

வந்த வேலைகள் முடிந்து நான் ஊருக்குப் புறப்படும்போது மகாலட்சுமி ரொம்பவும் சோகமாக இருப்பாள். நான் அவளிடமிருந்து விடைபெறும் முன் ஒரு பெரிய நாடகமே நடித்துக் காட்ட வேண்டியதிருக்கும்.

"மகா, மாமாவுக்கு டாட்டா சொல்லு, இன்னொரு தரம் ரூமுக்குள்ள போட்டு பூட்டுனா, ஒடனே மாமா வுக்கு போன் பண்ணு, ஒங்க அம்மாவையும், அண்ணனையும், நம்ம ரெண்டுபேரும் சேர்ந்து ரூமுக்குள்ள போட்டு பூட்டிருவோம்".

சந்தோஷம் பொங்க டாட்டா சொல்வாள். அக்காள் முகத்தில் உருளும் கண்ணீரைத் துடைப்பாள். மாமா மௌனமாய் பெருமூச்சுவிட்டபடி



நிற்பார்.

மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ கொழும்பு செல்லும்போதெல்லாம் அக்காள் வீட்டில் தங்குவதோடு, அக்காளின் போக்கில் சில மாற்றங்களையும் நான் கவனிக்கத் தவறவில்லை. அக்காள் இப்போது பக்திப் பழமாய் மாறிக்கொண்டிருந்தாள். பூஜையறையில் சாமிகளின் எண்ணிக்கையும், பூஜைப் பொருட்களின் எண்ணிக்கையும், சொல்வதென்றால் ஒரு கோயிலையே வீட்டுக்குள் உருவாக்கி இருந்தாள். பல மணிநேரம் பூஜையறையில் செலவிட்டாள். நிறைய விரதங்களை அனுஷ்டித்தாள்.

ஒருநாள் நானும் மாமாவும் சாப்பிட்ட பின் பேசிக் கொண்டிருந்தோம். மாமா சாவகாசமாக சிகரெட் புகையை உள்ளிழுத்து சுருள் சுருளாய் புகையைப் பரவவிட்டுக் கொண்டிருந்தார். என்னை ரொம்ப நாளாக அரித்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வி கட்டுப்படுத்த முடியாமல் வெளிவந்தது.

"மாமா, அக்கா இவ்வளவு பக்திமானா, மாறிட்டாளே, கொஞ்சம் விட்டா சன்னியாசியா மாறுனாலும் மாறிடுவா போலருக்கு, அப்படி என்னதான் வரம் கேட்காளாம"

"ஒங்கிட்ட ஒங்க அக்கா என்ன வரம் கேட்குறாங்கிறத சொல்லலையா"

"சொல்லலையே மாமா"

"நான் சொல்லியிருப்பானு நெனைச்சேன்"

"அவ, சொல்ல வேணாம், நீங்க சொல்லுங்க மாமா, அப்படி என்ன வரம் கேக்கா"

ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன், சிகரெட் புகையை வெளியேற்றியபடி மௌனித்திருந்தார். இலேசாக இறுமினார்:

"நானும் ஒங்க அக்காவும் சாகுறதுக்கு முன்னாடி மகாலட்சுமி செத்துறணும், இதுதான் ஒங்க அக்கா கேக்குற வரம்"

என்னால் பதில் பேச இயலவில்லை. மாமா புகையை இழுத்துக் கொண்டிருந்தார். அக்காள் மெதுவாக வந்து எங்கள் பக்கத்தில் உட்கார்ந்தாள். சூழலின் இறுக்கத்தை உணர்ந்து கொண்டாள்.

"ஏன், ரெண்டுபேரும் இப்படி இறுகிப் போயி உட்கார்ந்திருக்கீக, என்ன தம்பி சொல்லுப்பா"

"சாமிகிட்ட, நீ என்ன வரம் கேட்கேங்குறத ஒன் தம்பிக்கிட்ட சொன்னேன், அப்படியே அப்செட் ஆகிப் போயிட்டான்"

அக்கா ரொம்பவும் நிதானமாகப் பேசினாள். அழுகையை அடக்கி அடக்கியே பக்குவப்பட்டுவிட்டாள் போலும். கண்ணீர் சிந்தாமல் பேசினாள்.

"இங்க, கேளு, தம்பி, நானும் ஒங்க மாமாவும் இருக்குறவரைக்குத்தான் மகாலட்சுமிய கவனிச்சுக்குற முடியும், வேற யாராலயும் ஒரு நாளைக்குகூட அவள வச்சிக்குற முடியாது, பையன் ரெண்டு பேரும், அவ உயிரோட இருக்குறதே கேவலம்னு நெனைக்காங்க, இல்லனா ரூமுக்குள்ள போட்டு பூட்டுவானா, அதனால எங்க ரெண்டு பேரு கண்ணுக்குப் பின்னால, அவ இருந்தா வம்பா சீரழிஞ்சு போவாப்பா.

ஒன்னாலயும் பராமரிக்க முடியாது. நகைநட்டு, பணம் இருந்து என்ன செய்ய, பச்சப் புள்ளயப் போல வச்சுக் காப்பாத்தணும், அந்த மாதிரி மனசு இப்ப உள்ள தலமொறு ஆட்ககிட்ட அறவே கெடையாது. அதனால நானும் ஒங்க மாமாவும் சாகுறதுக்கு முன்னாடி அவ செத்துட்டா, நாங்க ரெண்டுபேரும் நிம்மதியா கண்ண மூடிருவோம், அவளும் நிம்மதியா போயி சேர்ந்திட்டாங்கிற நிம்மதி எங்களுக்கு கெடைக்கும்".

நானும் மனசைத் தேற்றிக்கொண்டேன். அக்காளுக்கும் மாமாவுக்கும் ஆறுதல் சொல்லிவிட்டு ஊர் வந்துசேர்ந்தேன். சாமியிடம் அக்கா கேட்ட விசித்திரமான வரம் பற்றி நினைக்கும் போதெல்லாம் இருதயத்தை யாரோ கசக்கி முறுக்குவது போலிருக்கும்.

"கடவுளே... அக்காள் கேட்கும் வரத்தை தயவு செய்து கொடுத்து விடாதே" அடி மனசில் எண்ணங்கள் குமிழியிடும்.

சரியாக ஒரே மாசம்தான், மகாலட்சுமி இறந்துவிட்ட செய்தி எனக்கு கிடைத்தபோது நம்பவே முடியவில்லை, சாமிகள் இவ்வளவு சீக்கிரமாகவா பக்தர்களுக்கு வரத்தை கொடுக்கின்றன. நான் சென்னை போய் சேர்ந்தபோது, அக்காள் சாமி தனக்கு வரம் கொடுத்த கதையை அழுகையினுடே சொன்னாள்.

"தம்பி நானும், மகாவும் கோயிலுக்கு போய்ட்டு வந்துக்கிட்டு இருந்தோம், அந்த எடம் கொஞ்சம் இருட்டா இருந்துச்சு சடக்னு கத்திய உருவுனமானிக்கு எங்க முன்னால திருடன், நகைய கழ்ட்ட முடியாதுனு நான் மல்லுக்கட்றன், மகாபதறிப்போயி தள்ளி நிக்கா, ஒரு கையால என்னோட தோளப் புடிச்சிக்கிட்டு கத்தியால என் வகுத்தல குத்துனான், சடக்னு என்னைய மகா கட்டிப் புடிச்சிக்கிட்டா, கத்தி அவளோட முதுகுல ஆழமா பாய்ஞ்சிருச்சு, திருடன் கத்திய விட்டுட்டு ஓடிட்டான்".

"மகாவை படைத்ததன் மூலம் படைப்பின் அர்த்தத்தை நான் உணர்ந்துகொண்டேன்" அக்காளின் அழுகை அடங்க வெகுநேரமாயிற்று. நான் இப்பொழுது அலுவல் நிமித்தம் கொழும்புக்கு சென்றால் லொட்ஜில் தங்கிவிட்டு ஊர் திரும்புகிறேன்.




மஹிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்குக்கு அமைவாக கித்துள் துறையை சக்திப்படுத்தி கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இடம்பெறும்

# கித்துள் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் - 2014

## ஒக்டோபர் மாதம் 31 இலிருந்து நவம்பர் 2 வரை

### மாத்தறை நூபே பழைய ஒல்லாந்தர் கட்டடத்தொகுதியில்
### தினந்தோறும் காலை 9.00 மணியில் இருந்து இரவு 9.00 மணி வரை

கித்துள் பாணி, கித்துள் கருப்பட்டி, கித்துள் சார்ந்த இனிப்புப் பண்டங்கள், கைவினைக் கைப்பணிப் பொருட்கள் மற்றும் பனம் பொருள் சார்ந்த உற்பத்திகளை உற்பத்தியாளர்களிடம் இருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்.

ஒழுங்கமைப்பு

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுடன்
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை





பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

# யாழில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை 13

**வே. அர்ச்சுனன்**



இவ்வாறு ஊடகவியலாளர்களை சமாளித்துக்கொண்டு சென்ற பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளும் பல்கலைக்கழக பேராசிரியர்களும் தமது அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் சிந்தித்துக் கொண்டு இருந்தபொழுது அரசிற்கும் புலிகளிற்கும் இடையில் சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னெடுக்கும் முயற்சியில் அமெரிக்காவின் பின்புலத்துடன் நோர்வே களம் இறங்கியது.

இதன் பிரதான கதாநாயகனாக நோர்வேயின் சிறப்பு சமாதான தூதுவர் எரிக்ஸ் சொல்ஹைம் இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக்கொண்டு வந்தார். ரணில் - பிரபாகரன் ஒப்பந்தம் கைச்சாத்தாகி இருதரப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி இரண்டாம்கட்ட பேச்சு வார்த்தை இடம்பெற்றபோது யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் காட்டமான அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப் பட்டு தடுப்புக்காவலில் வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். அவர்களுடைய விடுதலைக்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சாரப்பட கடுமையாகவும் காட்டமாகவும் இந்த அறிக்கையை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் வெளியிட்டு இருந்தனர்.

ஆனால் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியிலும் தமக்குத் தேவை ஏற்படுகின்ற காலப்பகுதியிலும் பல்கலைக்கழக மாணவர்களை தமது தேவைகளிற்காகப் பயன்படுத்திக் கொண்ட புலிகள் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகி அரசிற்கும் புலிகளிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெறத் தொடங்கியபோது பல்கலைக் கழக மாணவர்களையும் இவர்களது கோரிக்கைகளையும் ஒரு சிறிய அளவிற்கூட கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இதற்கு உதாரணமாக தாய்லாந்தில் இரண்டாவது சுற்றுப்பேச்சுக்களை அடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இந்தக் கைதிகள் குறித்து வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் B.B.C-யின் கொழும்பு நிருவரான பிரான்சிஸ் ஹரிசன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டவர்களின் விவகாரம் எவ்வாறு முடிவிற்குக் கொண்டு வரப்பட்டது என நிறுவினார்.

இதற்கு பதில் அளிப்பதற்கு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முற்பட்டபோது இடையில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குறுக்கிட்டு இந்தப் பிரச்சினை தொடர்பாக மிக ஆழமாகப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் மிகப் பெரும்பாலானவர்கள் விடுவிக்கப்பட்டு உள்ளனர் என அரசாங்கத்திற்குச் சார்பாக வக்காளத்து வாங்கினார். இதற்காக தமிழ்ச்செல்வன், கருணா போன்றவர்களின் கோபத்திற்கு ஆளாகிய அன்ரன் பாலசிங்கம் எல்லாவற்றையும் சிரித்து சமாளித்தவாறு இன்னும் சுமார் 193 கைதிகள் மட்டுமே தடுப்புக்காவலில் உள்ளனர். இவர்களில் 25பேர் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்று அரசாங்கம் வாக்குறுதி வழங்கியுள்ளது. ஏனையவர்கள் மீதான வழக்குகள் தனித்தனியாகப் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களும் விடுவிக்கப்படுவார்கள்.

அரசாங்கம் வழங்கியுள்ள வாக்குறுதிகள் எமக்குத் திருப்தியைத் தந்துள்ளன. இக்கைதிகள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றே எதிர்பார்க்கின்றோம் என அன்ரன் பாலசிங்கம் அளித்த பதிலில் பல்கலைக்கழக மாணவர்களின் காட்டமான அறிக்கைக்கு ஒரு போடு போட்டது.

இதேவேளை போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கத்தை மீளாய்வு செய்யவும், சமாதானத்தை நிலைநாட்டவும், முயற்சிகளை முன்னெடுப்பதற்காகவும் தாய்லாந்தின் நாகொன்பதாம் நகரில் புலிகளும் அரசதரப்பு பிரதிநிதிகளும் இரண்டாம்கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

ஒக்.31 முதல் நவம்பர் 2ஆம் திகதி வரையில் இந்த சந்திப்பு நீடித்தது. இந்த சந்திப்பின் ஆரம்பமே வித்தியாசமானதாக இருந்தது. இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின்போது முஸ்லிம் மக்களிற்குத் தனித்தரப்பு அந்தஸ்து கிடைக்கும் என்ற அறிவிப்புக் கைவிடப்பட்டிருந்தது.

முதலாவது விடயம் இதனைச் சமாளிக்கும் நோக்கில் அரசாங்கமும் முஸ்லிம் காங்கிரசும் முன்வைத்த கருத்துக்கள் சுவாரஷ்யமானவையாகும். அதாவது இரண்டாவது கட்டத்தில் முஸ்லிம்களிற்கான தனித்தரப்பு உறுதிப்படுத்தப்படும் எனவும் இப்போது நடைபெறவுள்ள முதலாவது கட்டத்தின் இரண்டாவது சுற்று எனவும் கூறப்பட்டது.

எனினும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முக்கிய சவாலாக ஏற்றுக்கொண்டு இதற்குத் தீர்வு காண்பதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் பிரமுகர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு கலந்துரையாடல்கள் நடத்தி தீர்வுகாண்பதாக இணக்கம் ஏற்பட்டது.

நாகொன்பதாம் நகரில் இரண்டாவது கட்டப் பேச்சுக்களை அடுத்து நோர்வே அரசின் சார்பாக வெளியிடப்பட்ட அறிக்கையை இங்கு முழுமையாகப் பார்ப்பது பொருத்தமுடையதாகும்.

இலங்கை அரசாங்கமும், புலிகளும் தாய்லாந்தில் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். கடந்த எட்டு மாத காலமாக அமுலில் இருக்கும் போர்நிறுத்த உடன்பாடு குறித்து இங்கு மீளாய்வு செய்யப்பட்டது. போர் நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பது மற்றும் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள இருதரப்பும் திடசங்கற்பம் கொண்டுள்ளன. இதற்காக பாதுகாப்பு நிலைகளை மேம்படுத்துவது மற்றும் இனங்களிற்கிடையில் நல்லுறவுகளைக் கட்டியெழுப்புவது அடிப்படை மனித உரிமைகளை வடக்குக் கிழக்கில் நிலைநிறுத்துவது என இனங்கண்டனர். இவ்வகையில் வடக்குக்கிழக்கில் வாழும் மூவின மக்களினதும் தேவைகளை உணர்ந்து ஏற்றுக்கொள்ள இருதரப்பும் இணங்கியிருந்தனர்.

குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையே நல்லுறவைக் கட்டியெழுப்ப இருதரப்பும் விசேட நடவடிக்கைகளை எடுப்பதென முடிவெடுக்கப்பட்டது. பின்வரும் விடயங்களின் அமுலாக்கம் தொடர்பாகக் கண்காணிக்கப்பட்டு எதிர்காலச் சமாதானப் பேச்சுக்களின் போது அவற்றின் முன்னேற்றம் குறித்து ஆராய்வது எனவும் முடிவு எடுத்தனர்.

போர்நிறுத்த உடன்பாட்டில் அமுலாக்கத்தில் எதிர்நோக்கப்படும் பிரதான சவால்களைக் கருத்தில் கொண்டு போர்நிறுத்த உடன்பாட்டில் 3.7 பந்திக்கு இசைவாக அமைக்கப்பட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உள்ளூர் முகவர்கள் மாற்றப்படுவதற்கும் இருதரப்பு சிரேஷ்ட பிரதிநிதிகள் பங்குகொள்ளத்தக்க வகையிலும் புதிய நியமனங்கள் மேற்கொள்வதற்கு இருதரப்பும் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் இருதரப்பும் இந்த இணக்கப்பாடுகள் தொடர்பில் நேர்மையாக நடந்துகொண்டதா என்றால் இல்லையென்று வெளிப்படையாகவே கூறிவிடலாம்.

இரண்டுதரப்பும் சமாதானம் பேசியவாறு கைகுலுக்கிக்கொண்டு மறுபுறத்தில் போரிற்கான தயார்படுத்தல்களையும் போரிற்கான ஆயத்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதை மறுதலிக்கமுடியாது. அதாவது நோர்வேயின் சமாதான ஏற்பாட்டில் பெரியளவில் முன்னேற்றங்களும் திருப்பங்களும் ஏற்படுமென சர்வதேச நாடுகள் பலவும் எதிர்பார்த்திருந்த போதிலும் உள்ளூரில் இருந்த தமிழ் மக்களிற்கும் இருதரப்பின் போக்குகளும் நடவடிக்கைகளும் கடுமையான சந்தேகத்தையே தோற்றுவித்தது.

இந்த சந்தேகம் பின்னைய நாட்களில் முள்ளிவாய்க்கால் முடிவுகளுடன் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் முன்னர் இந்தப் பேச்சுவார்த்தைகள் எதுவரை சென்றது மற்றும் எமது மக்களை எவ்வாறு இழுத்துச்சென்றது என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

**(தொடரும்)**

# மழை நண்பன் சொல்வது என்ன?

**மழைக்** காலம் தொடங்கி விட்டது. தெருக்களில், சாலைகளில் எங்கும் மழைவெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு வகையில் இது சந்தோஷமான விஷயம்தான். என்றாலும் மழை உண்டாக்கும் சேதம் தவிர்க்க முடியாதது.

மழைக் காலத்தில் சாலைகள் பெயர்ந்து போய்விடுவதைப் பார்த்திருப்போம். அதுபோல நம் வீட்டில் சிறிய அளவிலான விரிசல் இருப்பின், அதுவும் மழைக் காலத்தில் தான் தெரியவரும். இதனால் இக்காலத்தில் நமது உடைமைப் பொருள்களின் பராமரிப்பில் நம் கவனம் திரும்பும். ஆகையால் மழைக்கு நாம் நன்றி சொல்லவேண்டும்.

மழைக் காலங்களில் முக்கியமாக நம் வீட்டுக் கட்டுமானத்தில் உள்ள குறைகளைக் கவனிக்கவேண்டும். முற்றத்தில் மழைநீர் செல்வதற்கான வழிமுறை உள்ளதா எனச் சரி பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டின் முற்றத்தில் நீர்தேங்கினால் பலவிதமான கிருமிகள் உற்பத்தியாகி நோய் பரப்பக்கூடும். அதனால் மழை நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.



தேங்கியிருந்தால் உடனடியாக அதை அப்புறப்படுத்த வேண்டும். வீட்டுக் கட்டுமானத்தில் விரிசல் இருந்தால் அதை உடனடியாகப் பார்த்துச் சரிசெய்ய வேண்டும். மொட்டை மாடியில் மழைநீர் வெளியேறும் துளைகளில் அடைப்பு இருந்தால் நீக்கவேண்டும்.

பொதுவாக மழைக் காலங்களில் நம் வீட்டில் உள்ள மரப் பொருள்களில் பூச்சிகள் மற்றும் செல்லரிப்பு ஆகியவை ஏற்படக் கூடும். அதனால் மரப்பொருள்களைக் கவனமாகப் பராமரிக்க வேண்டும். இம்மாதிரியான பாதிப்புகளைக் கற்பூர வில்லைகள் கொண்டு நீக்கலாம்.

பயன்படுத்தாத மரப்பொருள்களை பிளாஸ்டிக் உறைகொண்டு மூடினால் இதுபோன்ற பாதிப்புகள் வராமல் இருக்கும். மழைக் காலங்களில் மரச்சாமான்களைச் சுத்தம்செய்வது அவசியம். மேசை, நாற்காலிகள் போன்ற மரப்பொருட்களுக்கு உறையிடுவது அவசியம்.

மழைக் காலத்தில் துணி வைக்கும் அலுமாரிகளைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். ஈரப்பதத்துடன் இருந்தால் துணிகளில் பூஞ்சைகள் படிய வாய்ப்பிருக்கிறது.

சரியாக உலராத துணி-களை அலுமாரிகள் உள்ளே மடித்துவைப்பதால் துர்நாற்றம் வரும். இதைத் தவிர்க்க ரசக் கற்பூரங்களைப் போட்டு வைக்கலாம். துணிகளை வெளியில்காய வைக்க முடியவில்லை என்றால் முடிந்தளவு மின்விசிறியிலாவது உலர வையுங்கள்.

மழைக் காலங்களில் மின்சாதனப் பொருள்களை எச்சரிக்கையுடன் அணுக வேண்டும். சுவிட்ச் போர்டுகளைத் தொடும்போது கவனமாக இருக்கவேண்டும். வீட்டு மின்சாதனங்களையும் கவனமாகக் கையாளவேண்டும். தண்ணீர் இறங்காமல் பார்த்து கொள்ளவேண்டும்.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

வணக்கமுங்கோ! சந்தானம், சூரி எண்டு புதுசு புதுசா வாறவங்கள் எல்லாம் வயிறு குலுங்கச் சிரிக்க வைச்சாலும் கவுண்டமணி – செந்தில் பண்ணிய லடாய் இன்னும் காதுக்குள்ளே விழுந்துகொண்டிருக்குது. அதனால இந்த வாரம் கவுண்டமணியும் செந்திலும் சந்திச்சுக் கொண்டால் எப்படி இருக்கும் எண்டு பாப்பம்.

**செந்தில்:-** (பாடிக் கொண்டு வருகிறார்)
ஆயிரத்தில் நானொருவன்
நீங்கள் ஆணையிட்டால்
படைத்தலைவன்...

**கவுண்டமணி:-** வாடா மவுனே யாரெல்லாம் தலைவனாகலாம் எண்டு ஒரு விவஸ்தையே இல்லாமச் போச்சடா... உனக்கெல்லாம் அந்த ஆசை வரலாமாடா?

**செந்தில்:-** உங்களுக்கு விசயம் தெரியாதான்னே? நம்ம நாடு ஜனநாயக நாடு அல்ல. யார் வேணுமெண்டாலும் தலைவராகலாம் அண்ணே!

**கவுண்டமணி:-** ஜனநாயகம் டா எந்த நாய் வேணு ண்டாலும் நாற்காலியில உட்கார்ந்துக்கலாமாடா?

**செந்தில்:-** ஆம் அண்ணே! நம்ம அயல்நாட்டையும் ஜனநாயக நாடு எண்டுதானே சொல்லுறாங்க. அங்கை ஆட்சி செய்யிற சில பேரு வைக்கல் பட்டடை நாய்போல நாற்காலியில உட்கார்ந்திருக்கிறாங்க எண்டு அந்த நாட்டு தலைவரே சொல்லியிருக்கிறாரண்ணே!

அப்படின்னா ஜனநாயக நாட்டில யாரும் தலைவராகலாம் எண்டுதானே அர்த்தம்.

**கவுண்டமணி:-** (எரிச்சலோட) டேய்.. டேய்.. டேய்.. சொறி பிடிச்ச நாயே அங்கவுள்வனுக கொஞ்சப் பேரு சிலோன் தமிழன்ர தலையில மிளகாய் அரைச்சு தங்கட ஓய்வுக்காலத்த ஓசியில அனுபவிச்சுக் கொண்டிருக்கிறானுகள். அதப் பார்த்து உனக்கு ஆசை வந்திடுச்சா. சரி அது உன்னோட இஸ்ரம் இந்த மகாஜனங்கள் ஏத்துக்கிட்டாங்க எண்டா எந்த நாற்காலியில வேணும் எண்டாலும் ஏறி உட்கார்ந்து அசிங்கம் பண்ணிப்போட்டு போ. இப்ப எதுக்கு இங்க வந்தாய் எண்ணு சொல்.

**செந்தில்:-** அண்ணே எங்கிட்ட ஒரு கதையொண்டு இருக்கு. அதப் படமெடுத்தீங்க எண்டு சொன்னா பியச்சுக்கிட்டு லிங்காவ முந்திக்கிட்டு ஓடும் அண்ணே!

**கவுண்டமணி:-** மவனே! கதை யெண்டு என் உயிரை வாங்க நினைச்சா டனால் பனால் ஆகியிடும்.

**செந்தில்:-** திஸ் இஸ் ஏ லவ் ஸ டோரி.

**கவுண்டமணி:-** மவனே! தமிழில ஸ்பீக்டா?

**செந்தில்:-** இது ஒரு காதல் கதை. ஒரு வித்தியாசமான காதல் கதை. காதலனும் காதலியும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமலேயே காதலிக்கிறாங்க.

**கவுண்டமணி:-** பார்க்காமலே காதலா?

**செந்தில்:-** ஆமாண்ணே. அவங்களுக்கு கண்ணு தெரியாது. அவங்க இருவரும் வெரி வெரி இளங்காதலர்கள். வயசு 32.

**கவுண்டமணி:-** எடப் பண்டி வாயா. 32 வயசெல்லாம் உனக்கு இளமையாவா தெரியுது?

**செந்தில்:-** அண்ணே காதலிக்குப் 16 வயசு. காதலனுக்கு 16 வயசு. கூட்டிப்பாருங்க கரெக்டா 32 வரும்.

**கவுண்டமணி:-** ஓஹோ... இதைத் தான் விஞ்ஞானம் எண்டு வெள்ளக்காரன் சொன்னானா?

**செந்தில்:-** யூ ஆர் றோங்! விஞ்ஞானம் எண்டு எப்ப அண்ணே வெள்ளக்காரன் சொன்னான். சயின்ஸ் எண்டுதானே சொன்னான்.

**கவுண்டமணி:-** மவனே நீயொரு அறிவுஜீவியடா. அது சரி உன்னோட காதலர்கள் ரெண்டுபேருமே ஊமையா?

**செந்தில்:-** தட்ஸ் ரைட். அவங்க ரெண்டு பேருக்கும் பக்கத்தில ஜோடி. அவள் இவனை நினைச்சுப் பாடுவாள். இவள் அவனை நினைச்சுப் பாடுவான். ரெண்டுபோருக்குமே பாடுவது கேட்காது.

**கவுண்டமணி:-** ஏன் ரொம்பத் தூரத்தில இருக்கிறாங்களோ?

**செந்தில்:-** இல்லை அண்ணே! இவங்களுக்குக் காது கேட்காது.

**கவுண்டமணி:-** ஓஹோ கண்ணால பார்க்காத காதல், காதால கேட்காத காதல், வாயால பேசாத காதல் எல்லாத்தையும் சேர்த்து நீங்க ஒரு புது ஸ்டோரி கிறியேட் பண்ணுறீங்களாக்கும். இந்தக் கதை படமாகிடுச்சென்டா லிங்கா, கத்தி எல்லாமே பிச்ச வாங்கனுண்டா மவனே.

அது சரி யாருடா ஹீரோ.

**செந்தில்:-** அண்ணே! கையில வெண்ணெய் இருக்க நெய்க்கு அலையலாமா. பையில காசு இருக்க கையேந்திப் பிச்சை எடுக்கலாமா?

**கவுண்டமணி:-** (வெட்கப்படுகிறார்) நான் ஹீரோவா நடிக்கணும் எண்டு சனங்க விரும்புறதா நீ சொல்லுற. ஆனா நான் விரும்புற மாதிரியில்ல. ஏனெண்டால் நீ உன்னோட படக்கூட்டில சேர்த்து வைச்சிருக்கிற யுனிட்காறங்க எல்லாரையும் கேட்டு அவங்கள் எல்லாம் கோரசா ஓ.கே பண்ணினாத்தான் நான் நடிப்பேன்.

**செந்தில்:-** ஓ.கே அண்ணே என்னோட யுனிட்காரங்கள கூட்டிப் பேசி ஒரு பொதுமுடிவோட உங்கக்கிட்ட வாறமண்ணே.

**கவுண்டமணி:-** மவனே கூடிப் பேசுறியா. இதையெல்லாம் எவ்வளவு காலமா அரசியல்ல நான் பார்த்திட்டு வாறன். பொதுக்குழுவைக் கூட்டி ஆராயப்போறம் எண்டு அரசியல்வாதிகள் சொல்லுறாங்க எண்டா பெரிய பொய்யாய் அவிழ்த்துவிட ஆயத்தம் பண்ணுறாங்க. அதுக்கு அவகாசம் தேடுறாங்க எண்டுதானேயடா அர்த்தம். இதெல்லாம் எங்கிட்ட வாய்க்காது. உங்கட கதையை நம்பி ஏமாறுறதுக்கு நானென்ன சிலோனில இருக்கிற முதலமைச்சராடா பண்ணித் தலையா! (வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு காலைத் தூக்குகிறார். உருண்டுகொண்டு ஓடுகிறார் செந்தில்)

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

# வரலாறு படைத்த வல்லுநர்கள்

## முதன் முதலில் பறந்தவர்கள்



சரியாகப் பகல் பத்து மணி முப்பத்தைந்து நிமிஷத்துக்கு ஆர்வில் தன்னுடைய விமானத்தில் போய்க் கீழ் இறக்கையின் நடுவில் உள்ள பகுதியில் வயிறு பதியக் குப்புறப் படுத்துக்கொண்டார். விமானம் கிளம்புவதற்கான விசையை இழுத்தார். அந்த அதிசய யந்திரம் ஆடியது. கனைத்தது. குலுங்கியது. புகையைக் கக்கியபடி மேலே எழுந்தது. இப்படியும் அப்படியும் ஆடியபடி அந்தரத்திலே பன்னிரண்டு விநாடிகள்-பன்னிரண்டே பன்னிரண்டு விநாடிகள் பறந்து, நூறு அடிகளுக்கு அப்பால் போய் இறங்கியது. சரித்திரப் புகழ்பெற்ற சாதனை நிகழ்ந்துவிட்டது. பல வருடங்களாகப் பட்டபாட்டுக்குப் பலன் கிடைத்துவிட்டது. கடைசியில் மனிதன் தன்னைப் பூமியோடு பிணைத்திருந்த தளைகளை முறித்துக்கொண்டு விண்ணிலே கிளம்பிவிட்டான்.

அதன் பிறகு சகோதரர்கள், அன்றைக்கே மாறி, மாறி அந்த யந்திரத்தில் அமர்ந்து நான்கு தடவைகள் பறந்தார்கள். நான்காவது தடவை வில்பர் விமானத்தில் 57 விநாடிகள் பறந்து 852 அடிகளைக் கடந்தார். வெற்றி கண்ட சகோதரர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாட டேய்டன் நகருக்குத் திரும்பினார்கள். அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பரிசாக உலகம் ஓர் ஒப்பற்ற சாதனைத்தைப் பெற்று மகிழ்ந்தது.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(30.10.2014 தொடக்கம் 05.11.2014 வரை)

### மேடம்

கூட்டுத்தொழில் செய்வதற்கான புதிய முயற்சிகளில் நல்ல பலன் வந்துசேரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருட்செலவுகளும், மனநிம்மதி இன்மையும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனம் தேவை. தொலைதூரப் பயணங்களை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்த்த காரியங்களில் மனநிறைவடைவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர முயற்சிப்பீர்கள். காதல் விசயங்களில் மற்றவர்களின் ஆதரவுகள் கிடைக்கும். உத்தியோகத் துறையினருக்குப் பதவி உயர்வுடன்கூடிய இடமாற்றமும் மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும். நாட்பட்ட விசா சம்மந்தமான பிரச்சினைகள் தீர்ந்து மனநிம்மதி அடைய வாய்ப்பு உள்ள காலமாகும்.

### துலாம்

புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் மனக்குழப்பங்கள் உண்டாகலாம். கணவன் மனைவி உறவுகளில் இதுநாள் வரை இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். நீண்டகாலமாகக் காணாமற் போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். நீண்டகாலமாக வரவேண்டிய பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். சொத்து விசயமாகக் கோர்ட் வழக்கு போன்றவற்றில் நல்ல சாதகமான முடிவுகளை எதிர்பார்க்க காலதாமதம் ஆகலாம். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். விசா சம்பந்தமா பிரச்சினைகள் தீர்வதற்கான வாய்ப்புகள் உள்ள காலமாகும். வெளிநாட்டில் இருந்து செய்திகள் கிடைப்பதற்கு இன்னும் சற்றுக் கால தாமதம் ஆகலாம்.

### இடபம்

கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி மனநிம்மதி அடைவீர்கள். வங்கிகளில் இருந்து வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த உதவித்தொகை கிடைக்கும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ளது. விவசாயம் சுமாராகப் பலிதமாகும். சமுதாய முன்னேற்றப் பணிக்கான பொதுத் தொண்டுகளில் தலையிட்டு பெயர், புகழ் அடைய வாய்ப்பு உள்ளது. புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவதன்மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். முன்கோபம் தவிர்த்தல் நல்லதாகும். செய்யாத குற்றங்களுக்காக வீண்பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடலாம்.

### விருச்சிகம்

உற்றார், உறவினர்களின் திடீர்வரவால் பொருட்செலவுகளும், புதிய பொறுப்புக்களும் உண்டாகலாம். காதலர்கள் கவனமாக இருக்கவேண்டும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ள காலமாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. உடம்பில் சளி மற்றும் காய்ச்சல் சம்பந்தமான உபாதைகள் வந்துபோகலாம். பொதுச்சேவைகளான ஆலயத் திருப்பணிகளில் பங்குகொண்டு நற்பெயர் எடுப்பீர்கள். கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். முன்கோபத்தை குறைத்துக் கொள்ளவும். பொதுவாக இது ஒரு மனச் சந்தோசம் தரும் வாரமாகும்.

### மிதுனம்

காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேர இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். ரேஸ் லோட்டரி போன்றவற்றின்மூலமாகப் பணம் கிடைக்கும் என எண்ணி ஏமாற்றம் அடையவேண்டாம். வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் நண்பர்களின் ஆதரவுகள் கிடைக்கும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் முன்கோபத்தைத் தவிர்த்து பேசிப் பழகுதல் நல்லதாகும். வீட்டை அலங்கரிப்பதிலும், வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமும் பொருட்செலவுகள் ஏற்படலாம்.

### தனுசு

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். மஹான்களின் தரிசனங்களால் மன மகிழ்ச்சியோடு காரியசித்தியும் அடைவீர்கள். உடல் நிலையில் இதுநாள் வரை இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக் குறையும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். நிலபுலன்கள் சம்பந்தமான பழைய வழக்குகள் மீண்டும் தொடரும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வீடுகளைப் புதுப்பித்துக் கட்டப்போட்ட திட்டங்கள் நிறைவேறும். காதல் விசயங்களில் பெண்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது.

### கடகம்

கட்டி முடிக்கப்படாத தடைப்பட்ட ஆலயப் பணிகளை மீண்டும் தொடர்ந்து செய்வீர்கள். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளைப் பழுதுபார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் தந்தையின் மருத்துவச் செலவுகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். புதிய கடன்வாங்கிப் பழைய கடனை அடைக்க முயற்சிப்பீர்கள். பிரிந்துபோன உறவுகளுடன் மீண்டும் சேர்ந்துவாழ வாய்ப்பு உள்ள காலமாகும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு மனநிம்மதி பெறுவீர்கள். வீடு, வாகனங்களை வாங்குவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டுவருவீர்கள். நிறைந்த வாரமாகும்.

### மகரம்

கை விட்டுப்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். யாத்திரையில் கவனம் தேவை. வங்கிகள் மூலமாக எதிர்பார்த்து இருந்த பண உதவிகள் கிடைப்பதற்கு சற்றுக் காலதாமதம் ஆகலாம். உற்றார் உறவினர்களின் திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். தீராத நாட்பட்ட நோய்களுக்கு புதிய மருத்துவரின் உதவிகளை நாடுவீர்கள். சூதாட்டங்களின்மூலம் பணம் கிடைக்கும் என நினைத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் எச்சரிக்கையுடன் இருக்கவும். காதலர்களுக்கு நல்ல செய்தி வரும். பொதுவாக நன்மை தரும் வாரமாகும்.

### சிங்கம்

பணப்புழக்கம் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணியாற்றுதல் நல்லது. அண்டை அயலார்களுடன் காரணமற்ற சிறிய விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லது. தென் திசையில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப்பெற வாய்ப்பு உள்ள காலமாகும். மற்றவர்களின் விசயங்களுக்காக ஜாமீன் போடுவதைத் தவிர்த்தல் நல்லது. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பாராட்டுகளும் பொருள்வரவும் உண்டாகும். தந்தையின் உடல்நிலை பாதிப்பால் குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் ஏற்படும்.

### கும்பம்

உடல்நிலையில் கண், காது போன்ற இடங்களில் கவனம் தேவை. வடக்குத் திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். குடும்பச் சொத்து சம்பந்தமாகிய விசயங்களில் பெரிய மனிதர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி சற்று முன்னேற்றம் காண்பீர்கள். வெளிநாட்டில் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது. சகோதர சகோதரிகளின் தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் சம்பந்தமாகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக வேறு மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள்.

### கன்னி

உடம்பில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்துபோகலாம். மற்றவர்களை நம்பிப் பணம் பொருட்களை கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய நட்புக்கள் உண்டாகி அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். உடம்பில் எலும்பு நரம்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். இதுநாள்வரையில் இருந்துவந்துள்ள பண நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காண்பதன்மூலம் மனநிம்மதி அடைவீர்கள். நாட்பட்ட காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேர வாய்ப்பு உள்ளது. விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். பொதுவாக இது ஒரு ஆறுதல் தரும் வாரமாகும்.

### மீனம்

தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் பணம் ஏமாற வேண்டாம். புதிய வீடு வாகனங்களை வாங்குவதற்காக வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கைவந்து சேரும். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள் வர இருப்பதால் எதிலும் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்கள் சென்றுவருவீர்கள். விசா பிரச்சினைகளுக்குப் புதிய செலவுகளை செய்வதன்மூலம் காரியத்தை நிறைவேற்றுவீர்கள். பொதுவாக இது ஒரு மகிழ்ச்சி தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS



# சாதனை

இத்தாலியை சேர்ந்த பெண்ணொருவர் காரொன்றை தலைமயிர்களால் அலங்கரித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். 44 வயதான மரியா லூசியா முங்னோ. எனும், பியட் ரக காரொன்றின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் முற்றிலும் தலைமயிர்களால் மறைத் அலங்கரித்துள்ளார்.

தனது உதவியாளர் வெலன்டினோ ஸ்டஸ்சானோவுட இணைந்து இக்காருக்கு பல்வேறு வகையான பின்னல் அலங்காரங்களை மரியா செய்துள்ளார். இந்தியாவிலி கொண்டுவரப்பட்ட தலைமயிர்களை இதற்கு பயன்படுத்தியதாக மரியா கூறுகிறார். தலைமயிர்களா முற்றாக மறைக்கப்பட்ட கார் என கின்னஸ் சாதனை நூலில் இக்கார் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனை சேர்ந்த மூதாட்டி ஒருவர் தனது 100 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவதற்காக கிளைடர் ரக விமானத்தில் 11,000 அடி உயரம் பறந்துள்ளார். நோரா எனும் இம்மூதாட்டி அண்மைக்காலமாக தனது பிறந்த தினங்களை வித்தியாசமான சாகசங்களுடன் கொண்டாடி வருகிறார்.

இதன்படி, 100ஆவது பிறந்த தினத்தன்று கிளைடர் விமானத்தில் விமானியொருவருடன் 11,000 அடி உயரம் பறந்தார்.

11,000 அடி உயரத்தில் வைத்து அவ்விமானத்தை விமானி. தலைகீழாக திருப்பி கரணமடிக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. தாதியாக பணியாற்றி ஓய்வுபெற்ற நோரா, தனது 80ஆவது பிறந்த தினத்தில் மிக வெப்பவாயு பலூனில் பறந்தார்.

95 ஆவது பிறந்த தினத்தன்று மூன்று சக்கரங்கள் கொண்ட மோட்டார் சைக்கிளொன்றை செலுத்தி தனது பிறந்த நாளை கொண்டாடியிருந்தார். இந்த மூதாட்டிக்கு இரு மகள்மார்களான 58 வயதான கே டிராபர், 52 வயதான சோனியா, மற்றும் மூன்று பேரக்குழந்தைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பேய் மனிதன்

கொலம்பியா நாட்டை சேர்ந்த நபர் ஒருவர் தனது முகத்தில் பச்சை மற்றும் தோடுகள் குத்திக்கொண்டு மனிதன் என்ற பெயரை பெற்றுள்ளார்.

கொலம்பியாவை சேர்ந்த கெயிம் மோரிஸ்(வயது-41) முகம் முழுவதும் பச்சை மற்றும் தோடுகள் குத்தி தன் பேய்போல் தோற்றமளிக்க செய்துள்ளார்.

இதற்காக 11 ஆண்டுகள் செலவுசெய்து கண்களை கறுப்பு நிறத்தில் பச்சை குத்தியும், தலை மற்றும் கை கொம்புகளையும் வைத்துள்ளார்.

இவ்வாறு அவர் கொடூரமாக அலங்காரம் செய்ததால் இவர் குடும்பத்தினரைவிட்டு மெக்சிக்கோ சென்றுள்ளார்.

இதுகுறித்து கெயிம் கூறுகையில், மக்கள் தன்னை பார்த்தவுடன் அதிர்ச்சியடைவர்கள் என்றும் எனக்கு மற் நபர்களைவிட வித்தியாசமாக இருக்கவேண்டும் என்பதற் இவ்வாறு செய்தேன் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது இவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து டி.ஜே வாக பணியாற்றுவதுடன், அரங்கில் நடனங்களை அரங்கேற்றிவருகிறார்.



# பாட்டியின் பல்டி



# பலசாலி பாதிரியார்

கனடாவைச் சேர்ந்த பாதிரியாரான கெவின் பாஸ்ட் உலகின் மிக வலிமையான உடல் கொண்ட பாதிரியார் எனப் புகழ்பெற்றுள்ளார். 51 வயது பாதிரியாரான கலாநிதி கெவின் பாஸ்ட் தனது உடற் பலத்தின்மூலம் பல்வேறு சாகசங்களை நிகழ்த்தியுள்ளதுடன் பல கின்னஸ் சாதனைகளையும் படைத்துள்ளார். 189 தொன் எடையுள்ள விமானமொன்றை தனது உடலில் கட்டி இழுத்தமையும் அவர் படைத்த கின்னஸ் சாதனைகளில் ஒன்றாகும்.

உலகில் மனிதர் ஒருவரால் இழுத்துச்செல்லப்பட்ட மிக அதிக எடையுள்ள விமானம் இதுவாகும். 100 அடி தூரத்திற்கு மிகப் பாரமான வாகனமொன்றை (63.2 தொன்) இழுத்துச்சென்றமை, 500 கிலோ எடையை தனது தோளில் தூக்கி வைத்திருந்தமை, மிக அதிக எண்ணிக்கையானோரை (11 பேர்) தனது தோளில் சுமந்தமை போன்ற சாதனைகளையும் அவர் படைத்துள்ளார். கனடாவின் கோபோர்க் பிராந்தியத்திலுள்ள தேவாலயமொன்றில் பாதிரியார் கெவின் பாஸ்ட் பணியாற்றுகிறார்.

ஓய்வுநேரத்தில் இத்தகைய சாகசங்களில் ஈடுபடுவதுடன், வடஅமெரிக்காவில் சாகச விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துகிறார். திருமணம் செய்து 3 பிள்ளைகளுக்குத் தந்தையான கலாநிதி கெவின் பாஸ்ட், தனக்கு கிடைக்கும் பணப்பரிசுகள் அனைத்தையும் அறக்கட்டளைகளுக்கு நன்கொடையாக வழங்குகிறராம். 188.8 தொன் எடையுள்ள சி.சி177 குளோப்மாஸ்டர் ரக விமானத்தை இழுத்தது சாதனை படைத்தபோதுதான் சேகரித்த 65,000 டொலர்களையும் இவர் அறக்கட்டளையொன்றுக்கு வழங்கினார்.

"இத்தகைய சாகசங்களை நான் எனது உடற்பலத்தில் செய்வது பலருக்கு நம்புவதற்கு கடினமாகவுள்ளது. ஆனால், எனது தேவாலயத்திற்கு வரும் மக்கள் எனக்கு எப்போதும் ஆதரவளிக்கின்றனர். இறைவன் அளித்த கொடையினால் என்னால் இந்த சாகசங்களை செய்ய முடிகிறது என எண்ணுகிறேன். மற்றவர்களுக்கு உதவுவதற்காகவே இறைவன் அருளால் எனக்குப் பரிசுகள் கிடைக்கின்றன எனவும் எண்ணுகிறேன். அதனால், பரிசுககளை அறக்கட்டளைகளுக்கு வழங்குகிறேன்" என அவர் கூறுகிறார்.

# செல்லப்பிராணி





சிங்கத்தை நாம் மிருகக்காட்சிச்சாலையும், டிஸ்கவ சனல்களிலும் மட்டுமே பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கே இவர்கள் வீட்டில் செல்லப்பிராணியாக வளர்த்து வருகின்றார்கள். இவர்களின் வீட்டுக்கு செல்வதற்கே அயலவர்கள் பயப்படுகிறார்களாம். என்னதான் பாசத்தை ஊட்டி செல்லமாக வளர்த்தாலும் சிங்கத்துடன் எப்போ கவனமாகத்தான் இருக்கவேண்டும்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துகன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஒக்டோபர் 30 ஆம் திகதி அ சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 13 வியாழக்கிழமை (30.10.2014) பக்கங்கள் IV ஓசை – 030

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# வடமாகாண சபைக்கு பொருத்தமற்ற தலைவர்

## ஆளும் வடமாகாண உறுப்பினர்கள் இணைந்து காட்டம்

வடக்கின் அபிவிருத்திக்காக வருகை தந்த ஜனாதிபதியை வரவேற்காது பின்னர் கடிதம் எழுதுவதும், விவாதிப்பதும், ஊடக அறிக்கை விடுவதும் உண்மையான தலைவனுக்கு உரிய பண்பு அல்ல.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடமாகாணத்திற்கு வருகை தந்த போது வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் புறக் கணிப்புச் செய்து வரலாற்றுத் தவறை இழைத்துவிட்டார்.

முதல்வரின் தன்னிச்சையான தீர்மானங்களும், தவறான வழி நடத்தல்களும், அரசிற்கு எதிரான கொள்கைவாதங்களும் வடமாகாண மக்களின் வாழ்வை சீரழிக்கவுள்ளது, சீரழித்தும் வருகின்றது.

வடமாகாண சபையில் நேற்று முன்தினம் கூட்டமர்வின் முடிவில் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதி வருகையைப் புறக்கணித்து சுயலாப அரசியல் செய்வது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கை

(IV) ஆம் பக்கம் பார்க்க

### வடக்கில் நவீன புற்றரை ஆடுகளம் அங்குரார்ப்பணம்



இலங்கை கிரிக்கட் சபை, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் யாழ்.படைத்தலைமையகம் ஆகியன இணைந்து வடமாகாணத்தில் முதல் முறையாக புற்றரை நவீன ஆடுகளம் அமைத்து நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

(IV) ஆம் பக்கம் பார்க்க

# மலையகத்தில் பேரிடர் 400 பேர் சாவு?



## உயிர்காக்கும் பணிக்கு ஜனாதிபதி விசேட உத்தரவு

பதுளை, கொஸ்லாந்த மீரிய பெத்தையில் ஏற்பட்ட பாரிய மண்சரிவுப் பேரிடரில் சிக்கி 400 பேர் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த பாரிய அனர்த்தத்தில், சிக்குண்டு உயிரிழந்தவர்களில் 14 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பு, இந்த மண்சரிவால் முற்றாக புதையுண்டுள்ளதாகவும் இதில் புதையுண்டவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீரியபெத்தையில் 7,8,9,10,11 மற்றும் 12ஆம் இலக்க லயன் குடியிருப்புக்களே மண்ணில் இவ்வாறு புதையுண்டுள்ளன.

7ஆம் இலக்க லயனில் 8 வீடுகளும், 8ஆம் இலக்க லயனில் 16 வீடுகளும், 9ஆம் இலக்க லயனில் 20 வீடுகளும், 10 ஆம் இலக்க லயனில் 10 வீடுகளும், 11ஆம் இலக்க லயனில் 6 வீடுகளும், 12 ஆம் இலக்க லயனில் 6 வீடுகளும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பால் சேகரிக்கும் நிலையங்கள் இரண்டு, வாகனங்கள் திருத்தும் இடம், இரண்டு கடைகள், மருத்துவ மாது குடும்பம்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## 2015 பட்ஜெட்டுக்கு ஆதரவளியோம் - மாவை

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிக்கப்படமாட்டாது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத்திட்டம் யுத்த வலயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித நலன்களையும் உள்ளடக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## புலித்தடையை இந்தியா நீக்காது ஆணைக்குழுவின் தலைவர் நம்பிக்கை

விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை இந்தியா எந்தச் சந்தர்ப்பத்திலும் நீக்காது என தான் நம்புவதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதீப மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க முடியும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சரியாக புரிந்து கொள்ளாத விடயங்களின் அடிப்படையில் புலிகளின் ஆதரவாளர்கள் இந்தியாவில் அந்த அமைப்புக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கி கொள்ள முயற்சித்து வருகின்றனர்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளினால் ஐரோப்பிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை 4 ஆண்டுகள் விசாரித்த பின்னர் அண்மையில் ஐரோப்பிய நீதிமன்றம் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியுள்ளது.

(IV) ஆம் பக்கம் பார்க்க

## உழைப்பால் உயர்ந்த வெற்றியை வரலாறு எப்போதும் ஞாபகப்படுத்தும்

### விருது வழங்கும் விழாவில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு




உழைப்பால் உயர்ந்தவர்களையே வரலாறு எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கும். நிரந்தர வெற்றிகளுக்கு கடுமையான உழைப்பே காரணமாக இருக்கும். கைத்தொழில் முயற்சியில் சிறந்த பெறுபேற்றை வெளிக்காட்டிய உங்களுக்கு விருதுகளை வழங்குவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு பயன் மிகுந்த திட்டங்களையும், பெருந்தொகையான நிதி ஒதுக்கீட்டையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ளார்.

அதற்காக இந்த வேளையில் ஜனாதிபதிக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்

(IV) ஆம் பக்கம் பார்க்க



# உப அதிபர் ஜெயவீரசிங்கத்திற்கு மணிவிழா

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் புகழ்பூத்த கல்விமான் உப அதிபர் சொ.ஜெயவீரசிங்கத்திற்கு நாளை காலை 9.00 மணிக்கு அழகரத்தினம் மண்டபத்தில் மணிவிழா நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் மெமோறியல் பாடசாலை அதிபர் த. மாதவன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இக்கல்லூரியில் நீண்ட காலம் உப அதிபராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புற்றுநோய் – மாரடைப்புக்கு சமாந்தரமாக பாரிசவாத நோய்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களாக பாரிசவாத நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை வெற்றியளித்துள்ளதாக, யாழ். மருத்துவ சங்கம் தெரிவித்தது.

உலக பாரிசவாத நோய் தடுப்பு தினமான நேற்று மக்களுக்கு பாரிசவாதம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஊடகவியலாளர் மாநாடு யாழ். போதனா வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், மருத்துவ சங்கத்தை சேர்ந்த தலைவர் வைத்திய கலாநிதி. முரளி வல்லிபுரநாதன், செயலாளர் ஆர். சுரேந்திரகுமார், உதவித் தலைவர் நளாயினி ஜெகதீசன் மற்றும் வைத்திய நிபுணர் கே.அஜந்தா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

இலங்கையில் பாரிசவாத நோயானது புற்றுநோய், மாரடைப்பு ஆகிய நோய்களுக்கு அடுத்ததாக 3 ஆவது இடத்தில் உள்ளது. இந்நோய் 60 வயதுக்கு மேற்பட்டவர்களையே பாதிக்கின்றது என்றாலும் தற்போது இளவயதினரையும் பாதிக்க தொடங்கியுள்ளது. இலங்கையில் வருடத்துக்கு 25 ஆயிரம் பேர் வரை பாரிசவாத நோயால் பாதிப்புக்குள்ளாகின்றனர். இந்நோயானது, உயர்குருதி அமுக்கம், குருதியில் கொழுப்பு தன்மை அதிகரித்தல், இதயத்துடிப்பு குறைதல் மற்றும் நீரிழிவு நோயாளர்களையே அதிகம் பாதிக்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது உப்பு பாவனை அதிகரித்துள்ளது. ஒரு நாளுக்கு ஒரு தேக்கரண்டிக்கு அதிகமாக உப்பு பாவிக்ககூடாது. ஆனால் இங்கு அதிகமாக உப்பு பாவித்தல் கூடாது. உப்பின் பாவனை அதிகரிப்பதாலும் இந்நோய் ஏற்படவாய்ப்புண்டு என தெரிவித்தனர்.

## மலேசியா, கட்டார் வேலை வாய்ப்புக்கள்

மலேசியாவின், கௌரவமான, செல்வாக்கான தமிழ் இல்லங்களில், மொழி, கலாசார, சமய சிக்கலற்ற சூழலில் கவர்ச்சிகரமான சம்பளத்தில் பணிப்பெண் வேலை வாய்ப்புக்கள் முற்றிலும் இலவசம்.

வேலை ஒப்பந்த அனுமதி இல: **A/L2119/05/14**

கட்டார் நாட்டில்

| இல | தொழில் | தொகை | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | பூந்தோட்டப் பணியாளர் | 15 | QR 1200+200 |
| 02 | நீச்சல் தடாக சுத்திகரிப்பாளர் | 10 | QR 900+200+உணவு |
| 03 | ஸ்டீல் கம்பனி வேலையாட்கள் | 10 | QR 800+200 |
| 04 | சமையல் உதவியாளர் | 05 | QR 800+OT |
| 05 | மேசன் | 10 | QR 1500+OT |
| 06 | இயந்திரப் படகு ஓட்டுனர் | 02 | QR 2000+OT |
| 07 | தச்சுவேலை | 10 | QR 1200+200 |
| 08 | மேசன் | 08 | QR 1100+200 |
| 09 | தளபாடப் பெயின்டர் | 03 | QR 1200+200 |
| 10 | டயில் மேசன் | 04 | QR 1100+200 |
| 11 | வெல்டர் | 06 | QR 1250+200 |
| 12 | A/C இலெக்ட்ரீஷியன் | 04 | QR 1100+200 |
| 13 | இலெக்ட்ரீஷியன | 02 | QR 1250+200 |
| 14 | பெயின்ட்டர் | 05 | QR 1200+200 |
| 15 | லேபர் | 10 | QR 900+200 |
| 16 | சாரதி | 03 | QR 1500+200 |
| 17 | விற்பனையாளர் | 02 | QR 1500+200 |

E-mail:rajagoodway@yahoo.com (C/368)

**தொடர்புகளுக்கு**

*025 222 4848. யாழ்.தொடர்புகளுக்கு- 077 387 5718*

## பனை அபிவிருத்திச் சபை

### கூறுவிலை கோரல்

சபையின் பாவனைக்கு பின்வரும் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட வேண்டியுள்ளமையால் தகுதி வாய்ந்தவர்கள் அதற்கான தங்களின் ஆகக்குறைந்த கூறுவிலையினை சபையின் தலைமை அலுவலகத்திற்கு 11.11.2014 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலில் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். மேலும் கூறுவிலை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விரிவாக்கல் பகுதிக்கான கூறுவிலை எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

1.தையல் இயந்திரம் - கராக்கி - 05 எண்ணிக்கை
2. முட்டி - 3750 எண்ணிக்கை.

**தலைவர்**
**பனை அபிவிருத்திச் சபை,**
**01ம் மாடி தேசிய வீடமைப்புசெயலகம்,**
**கண்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/3580)

## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

**றீசைக்கிள்**
**(மீள் சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3388)

## விற்பனைக்கு

நல்லூரடியில் 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. மற்றும் 2 ஸ்ரீமைனர் கார், சணல் ஆடு, யமுனா பாரி ஆடு, மற்றும் ஆட்டெரு, துவிச்சக்கர வண்டி, சொனி 29" பழைய மொடல் ரீவி என்பன.

தொ.பே. 077 4347 800. (R/369)

## காப்புறுதிச் சேவையில் 450 காப்புறுதி ஆலோசகர்களை இணைத்துக்கொள்ளல்

சர்வதேச தரத்திற்கொப்பாக காப்புறுதி முகாமைத்துவம், உளவியல், ஆங்கிலம், சமூகசேவை ஆகியவற்றில் பயிற்சி பெற்றவரும், 54 வருடங்களுக்கு மேல் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் காப்புறுதியின் முன்னோடியும் பலமானதுமான அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அகில இலங்கை அதிசிறந்த அமைப்பாளர் விருது பெற்று இங்கிலாந்து சென்று திரும்பிய 34 வருடங்கள் காப்புறுதிச் சேவையைப் பூர்த்தி செய்தவரும் 25 வருடங்கள் குழுத்தலைவவராக செயற்பட்டவருமான சிரேஷ்ட குழு நிதியியல் ஆலோசகரின் கீழ் செயலாற்ற காப்புறுதி ஆலோசகர்கள் தேவைப்படுகின்றனர். அகில இலங்கை முழுவதும்

### தகைமைகள்

01. G.C.E O/L (கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி) A/L
02. கணனி பற்றிய அறிவு
03. ஆங்கிலத்தில் காப்புறுதி விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் ஆற்றல்.
04. நாளாந்தம் ஆகக்குறைந்தது 2 மணித்தியாலங்கள் காப்புறுதிச் சேவைக்காக அர்ப்பணிக்கக் கூடிய ஆற்றல்
05. வயது : 18 இற்கு மேல் (18- 65)

### எம்மால் உருவாக்கப்பட்ட காப்புறுதி ஆலோசகர்கள் பெற்ற நன்மைகள்

1. சேவைக்கட்டணமாக மாதாந்தம் 3 இலட்சத்துக்கு மேல்
2. அகில இலங்கை, யாழ்.பிராந்தியம், நெல்லியடி கிளை அலுவலகம் ஆகியவற்றில் காப்புறுதி ஆலோசகருக்கான போட்டிகளில் முதலிடம் பெற்றமை.
3. இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், வியட்நம், சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா, தாய்லந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு காப்புறுதி நடவடிக்கைக்காக சென்றமை.

* முக்கிய குறிப்பு - பொருத்தமானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சேவையாற்ற விரும்பும் அலுவலகம் (உ+ம் யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, சாவகச்சேரி, பம்பலப்பிட்டி, புத்தளம், சிலாபம்) தொலைபேசி இலக்கம், கிராம சேவகர் பிரிவு இலக்கம் உள்ளடங்கலாக சுய விபரக்கோவையுடன் (Bio Datas) விண்ணப்பங்களை 15.11.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்பு: விளம்பர இல.03
மே/பா தினமுரசு
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (R/367)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 303 |
| திகதி - | 2014.10.28 |
| வர்ணம் - | மஞ்சள் |

வெற்றி இலக்கங்கள்: 23 44 51 59 — ஆங்கில எழுத்து: I

பரிசுத் தொகை ரூபா. **16,223,240/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 04 | 200,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 216 | 216,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 369 | 369,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9266 | 555,960/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4873 | 194,920/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 121974 | 2,439,480/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17725 | 354,500/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 16,223,240/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,329,860/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. **16,461,760/-**

2014.10.31ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web: www.dlb.lk

(C/3536)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

Applications are invited by me up to 30.11.2014 from suitably qualified persons for the following posts.

### 1. BURSAR

**QUALIFICATIONS:**

1. (a). Should possess a Membership of the Institute of Chartered Accountants of Sri Lanka or its equivalent.

AND

(b). Should possess at least six (6) years of experience in Accounting and/or Auditing in an executive capacity after acquiring the qualifications at 1(a) above.

OR

2. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who possesses three (03) years of satisfactory service in that post and confirm in the post with qualification at 1(a) above. At least one (01) year out of the above.(03) years of experience should be after acquiring the qualification at1(a) above.

OR

3. A holder of the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system who is confirmed in that post and possess ten (10) years of experience in accounting and/or auditing in an executive capacity and at least eight (08) years of satisfactory service in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the University system with qualification as at 1(a) above. Three (03) years of such experience should be after acquiring the qualification at 1(a) above.

OR

4. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who is confirmed in that post with Master's Degree in Accountancy/Finance/ Management * from a recognized University/HEI and possesses the intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent with not less than twelve (12) years of experience in accounting and/or auditing in an executive capacity after successfully completion of the above Intermediate qualification. At least ten (10) years of such experience should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor or above in the University system.

OR

5. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University System who possesses three (03) years of satisfactory service in that post and confirmed in the post with a Degree from a recognized University/HEI and the Intermediate qualification of the institute of Charted Accountants of Sri Lanka (ICASL) or its equivalent/ Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor, with not less than fourteen (14) years of experience in Accounting and/or Auditing in an executive capacity after obtaining the above Intermediate Qualification/HNDA. At least five (05) years of such experience should be at the level of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor and/or Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor in the Grade of U-EX2(II) in the University system.

OR

6. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University system who possesses a Degree from a recognized University/HEI or Intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent or Higher National Diploma in Accountancy (HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor, with not less than eighteen (18) years of experience in Accounting or Auditing in the University system out of which at least three (03) years should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the University system and confirmed in that post.

NOTE: 'Accounting and/or Auditing' experience means, experience gained in an executive capacity in Accounting and/or Auditing in a State or Reputed Private Sector Organization.

# யாழ்.குடாவில் நலிவுற்ற பிரதேசங்களுக்கு வேள்ட் விஷன் குடிநீர் வழங்க ஏற்பாடு

வடக்கில் சாவகச்சேரியிலும், வலி. மேற்கிலும் வேள்ட் விஷன் நிறுவனம் ஒருங்கிணைந்த குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழ் பாரிய இரு திட்டங்களை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளது.

யாழ்.வேள்ட் விஷன் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெ.அன்ரனி இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

குடிதண்ணீருக்கு அல்லற்படும் பல்லாயிரக்கணக்கான மக்களின் அவசர குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அதேநேரம் சுகாதாரத் திட்டத்தினையும் ஒருங்கிணைந்த ரீதியில் நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்காக அவுஸ்ரேலிய நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஆரம்பக் கூட்டம் நேற்று முன்தினம் வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் வலி.மேற்கு உள்ளூராட்சி சபை அலுவலர்கள் கலந்து கொண்டதுடன், கிராம அலுவலர்கள் எதிர்கால அபிவிருத்தி திட்டத்திற்கான பிரதேசங்களைத் தெரிவு செய்தனர்.

அடுத்த முன்னோடிக் கூட்டம் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறும்.

இதில் சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை அலுவலர்கள் கலந்து கொள்வர் எனத் தெரியவருகிறது.

*Term 'Management' means a Degree in Management/ Public Administration/Business Administration with major component in Accounting & Finance.

**Salary Scale:** U-EX 3(II) Rs.47,845 -7X1,050;11X1,310-69,605/- p.m.

**Selection :** By Structured Interview

**Sabbatical Leave entitlement:** The holder of the above post will be eligible for Sabbatical Leave as per the regulation of the University Grants Commission.

### 2. WORKS ENGINEER [CIVIL] GRADE II

**QUALIFICATIONS:**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution or an Associate Member of a recognized Institute of Engineers.

AND

(B) A minimum of five (05) years of experience in the design, construction and Maintenance of Buildings, water supplies, drainage, road and electrical installation. Should also possess experience in handling contracts as well as managing direct labour.

**Selection:** By Structured Interview

**Salary Scale:** U- EX2 (II) Rs.33,745-8X645; 8X790-45,225/- p.m

**AGE:** Not more than 45 years. Age limit is not be applicable for applicants in the Government Departments, State Corporations and Statutory Bodies.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications should be on **specified forms** issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non - Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar, University of Jaffna together with self addressed Stamped envelope of 23X10 c.m in size. Only Applications sent on the **specified** form will be accepted. (**Please annexed copies of relevant documents**). The envelope containing the dully filled application form must bear" **the name of the post applied for**" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar on or before 30.11.2014.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR,**
**University of Jaffna,**
**28.10.2014.**

(C/3581)

# மக்கள் இன்று நிம்மதியாகவும் அபிவிருத்தி சூழலிலும் வாழ்கின்றனர்

## அரச அதிபர் அருமைநாயகம் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் பயங்கரவாத எதிர்ப்பு குழுவின் நிறைவேற்று குழுவுக்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

குழுவின் உதவிச் செயலாளர் நாயகம் ஜீன்-பால் லெபோரேட் தலைமையிலான குழுவே இந்த சந்திப்பை மேற்கொண்டது.

இந்தச் சந்திப்பு குறித்து யாழ். மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

பயங்கரவாத நடவடிக்கைகள் நிலவிய காலங்களில் இருந்ததைவிட தற்போது எவ்வாறான முன்னேற்றங்கள் அடையப்பெற்றுள்ளன என்பது தொடர்பில் அவர்கள் எங்களிடம் [illegible] கேட்டிருந்தனர்.

அத்துடன், மக்கள் தங்கள் உரிமைகளை எந்தளவுக்கு சுதந்திரமாக அனுபவிக்கின்றனர் என்பது தொடர்பிலும் கேட்டிருந்தனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் எவ்விதமான இயல்பு நிலையில் மக்கள் வாழ்கின்றனர் என்றும் அந்த மக்களுக்காக வழங்கப்படும் சேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர்.

மேலும், சிவில் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும், குற்றங்கள் செய்தவர்கள் எவ்வாறு தண்டிக்கப்படுவதாகவும் கேட்டிருந்தனர்.

இவற்றுக்கு பதிலளித்த நாம் பொலிஸ் நிர்வாகம் நடைமுறையில் இருக்கின்றது. குற்றங்கள் செய்தவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக தண்டிக்கப்படுவதாகவும், மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் திருப்தியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினோம்.

மக்களுக்கிடையில் இருக்கின்ற ஒருங்கிணைப்பு தொடர்பில் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளோம் என சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட செயலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ, 25)

## புலித்தடையை...

வழக்கில் பிரதிவாதிகள் புலிகளின் ஆதரவாளர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை குறிப்பிட்டிருந்துடன், புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பல்ல என்றும் இறுதியில் வாதிட்டிருந்தனர்.

புலிகளின் அமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் செயற்பாடுகளை முன்னெடுக்க ஐரோப்பாவில் இடமளிக்கப்பட வேண்டும் எனவும் ஐரோப்பாவில் எந்த சந்தர்ப்பத்திலும் பயங்கரவாத செயல்களில் ஈடுபடவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்ப்பின் மூலம் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படவில்லை. அவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடையே நீக்கப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார தடைநீக்கம் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் நிதி சேகரிக்கவும் மீண்டும் உறுப்பினர்களை சேர்க்கவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கான பெருமள்வில் அவர்களால் பணத்தை செலவிட முடியும். இதன் அடிப்படையிலேயே ஐரோப்பிய நீதிமன்றம் தடையை நீக்கியுள்ளது.

இவ்வாறான வழக்கில் மேன்முறையீடு செய்யவும் தீர்ப்பை மீளாய்வு செய்யவும் சந்தர்ப்பங்கள் உள்ளன என்றார்.

## 400 பேர்...

தங்கியிருந்த விடுதி, சாரதியின் வீடு, சிகிச்சை நிலையம் மற்றும் கோவில் ஆகியனவும் மண்ணில் புதையுண்டுள்ளன. இவற்றில் தங்கியிருந்தவர்களும் 68 லயன் குடியிருப்புகளில் தங்கியிருந்த வர்களும் என சுமார் 400 பேர் காணாமற் போயிருப்பதாகத் தெரியவருகிறது.

மண்சரிவு காலை 7.00 மணிக்கும் 7.30 இக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளதாகவும், இப் பகுதியில் மண்சரிவு அபாயம் ஏற்படும் என்று முன் கூட்டியே எச்சரிக்கை விடப்பட்டமையால், பலர் பாது காப்பான இடங்களுக்கு முன் கூட்டியே இடம்பெயர்ந்து விட்டதாகத் தெரிவிக்கப்படு கின்றது. அதனால், மண்ணில் புதையுண்டவர்களின் எண்ணிக்கையை சரியாக கூறமுடியாதுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அந்தக் குடியிருப்புக்களில் வசித்த பாடசாலை மாணவர்கள் பலர் நேற்றுக் காலையிலேயே மீரியபெத்த பாடசாலைக்கு சென்று விட்டனர் என்றும் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்த பலர் தங்களுடைய உடமைகளை எடுப்பதற்காக நேற்றுக் காலை அங்கு சென்றிருந்த போதே இந்த அனர்த்தத்தில் சிக்கிகொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மண்சரிவில் சிக்குண்டுள்ளவர்களை தேடும் பணியில் முப்படையினரும் இலங்கை விமானப்படையின் விசேட ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது. அத்துடன், பதுளை, பண்டாரவளை உள்ளிட்ட பிரதான வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதியர், மருத்துவ குழு மற்றும் நோய் காவு வண்டிகளும் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பதுளை, கொஸ்லாந்தை மீரியபெத்த பகுதியில் இடம்பெற்றுள்ள அனர்த்த நிலைமை குறித்து உடனடியாக ஆராய்ந்து, மண்சரிவில் சிக்குண்டவர்களை காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபுதி பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளர், ஊவா மாகாண முதலமைச்சர் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ஆகியோருக்கு தொலைபேசி ஊடாக ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் இருந்து ஜனாதிபதி இந்த பணிப்புரையை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும தெரிவித்துள்ளது.

இதேவேளை, மண்சரிவில் சிக்குண்டுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகளில் 500இக்கும் அதிகமான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மத்திய பிராந்தியத்திற்குப் பொறுப்பான இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா கூறியுள்ளார்.

## வடமாகாண...

யில், கடந்த மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் வடக்கில் இடம்பெற்றது வடமாகாண சபையின் வரலாற்றுத் தேர்தல்.

இத்தேர்தலில் அரசியல் ஞானம், சிரேஷ்ட நிர்வாகத் திறனும், மொழிப்புலமையும் உள்ள கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சியினர் உள்ளபோது அரசியல் திறனும், நிர்வாகத் திறனும், தீர்மானம் எடுக்கும் திறனும் இல்லாத ஒருவரை நாம் முன்மொழிந்தது வரலாற்றுத் தவறாகும்.

இத்தவறினால் முன்னுக்கு வந்தவர் வடமாகாண முதல மைச்சர் க.வி.விக்னேஸ்வரன். இன்று முதலமைச்சரின் கீழ் வடக்கின் ஐந்து மாவட்டங்கள் உள்ளன. மாகாண சபைக்கு உரித்தாக்கப்பட்ட 35 அதிகாரங்கள் எழுத்தில் உள்ளன.

இதனைவிட வடமாகா ணத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் 34 இற்கும் மேற்பட்ட திணைக்களங்கள் உள்ளன. இத்திட்டங்களின் முன்னேற்றங்கள், அபிவிருத்திகள், முன் மொழிவுகள், புதிய நகல் திட்டங்களை ஆராய்வதற்கும் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளிற்கு வடக்கிற்கு நிதி ஒதுக்கீடு குறித்து பேசுவதற்காகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முற்கூட்டியே தனது வருகையை அறிவித்த நிலையில் தனது தன்னிச்சையான தீர்மானம் மூலம் ஜனாதிபதியின் வருகையை பகிஷ்கரித்ததுடன், மற்றைய வடமாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற மற்றும் பிரதேச சபைத்தவிசாளர்களின் பிரசன்னத்திற்கும் தடை விதித்து வரலாற்றுத் துரோகத்தை இழைத்துள்ளார்.

தனது சொந்தத் தேவைகருதி எவ்வித நிகழ்ச்சி நிரலுமின்றி ஏனைய கூட்டமைப் பின் சிரேஷ்ட தலைமைக்குத் தெரியாமல் ஜனாதிபதியை இரகசியமாகச் சந்திக்கும் தலைவரையே இன்று நாம் வடக்கில் பெற்றுள்ளோம்.

இதனைவிட முதன்மைப்படுத்தப்பட்ட ஒன்றாக ஜனாதிபதியின் வடக்கிற்கான விசேட அபிவிருத்தி குழுவிற்குச் சென்று வடக்கிற்கு ஜனாதிபதி இதுவரை செய்தது என்ன? செய்யாதது என்ன? என்ற விடயத்தை முன்னிற்கு நின்று கேள்விகளைத் தொடுத்து விளக்குவதற்கு திராணியற்ற வடக்கு முதலமைச்சர் க.வி.வின்னேஸ்வரன் பின்னர் தனது புகைப்படத்துடன் ஒருபக்க பத்திரிகைச் செய்தியை பிரசுரிப்பதும், ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுவதும், மேடையில் பேசுவதும் வழமையாகிவிட்டது.

இவ்வாறான தலைமைத்துவத்தினால் சீரழியப் போவது எம்மின வடக்கு வாழ் தமிழினமே என்பதனை இந்த யுக மக்கள் புரிய வேண்டும்.

இன்னும் வடமாகாண ஆட்சிக்காலம் 4 வருடங்கள் உள்ளன. இதன் ஊடாக வடமாகாண சபையை நம்பியுள்ள மக்கள் நன்மை அடைய வேண்டும்.

இல்லாவிடில் விசேட பிரேரணை முன்வைத்து வடமாகாணசபையை கலைப்பதற்கும், வடக்கு ஆளுநருக்கான பரிந்துரையை முன்வைத்து செயற்படுத்துவதற்கும் நமது உறுப்பினர்கள் தயாராகிவிட்டனர் என காட்டமாக தெரிவித்துள்ளனர்.

## வடக்கில்...

யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தின் ஆசீர்வாதத்துடன் சனத்ஜெயசூரியா, யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி உதயபெரேரா மற்றும், கிரிக்கட் சபைத்தலைவர் ஆகியோரினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மிகக் கோலாகலமாக நடைபெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களுக்கு நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு, கிழக்கு இணைந்த 23 வயதுப் பிரிவு அணிக்கும், சனத்ஜெயசூரியா தலைமையிலான முன்னாள் இலங்கை கிரிக்கற் அணிக்கிடையிலான காட்சி ஆட்டம் இடம்பெற்றது.

இதில் முத்தையா முரளிதரனும் கலந்துகொண்டு கண்காட்சி ஆட்டத்தில் பங்குபற்றியிருந்தார். இதன்போது பெருமளவிலான கிரிக்கட் ரசிகர்களும், மாணவர்களும் சனத்தையும், முரளியையும் விட்டுவைக்கவில்லை. கையொப்பம் பெறவும், புகைப்படம் எடுக்கவும் முண்டியடித்ததைக்காணக்கூடியதாக இருந்தது. (எஸ்.பி.,இ)

## 2015...

நலன்களை உறுதி செய்வதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித ஏற்பா டுகளும் செய்யப்படவில்லை.

வரவு-செலவுத்திட்டம் குறித்த உத்தியோகபூர்வ தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும் எனவும், வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பெருந்தோட்டப்பகுதிகளில் பெரும் எண்ணிக் கையிலான சிறுவர்கள் போசாக் கின்மையினால் அவதியுறு வதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்த வலய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவ தற்கு போதியளவு ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை. தனியார் மற்றும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களுக்கு போதியளவு ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை.

வெளிநாட்டுக் கடன்களின் அடிப்படையி லேயே வரவு செலவுத் திட்ட நலன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த நலன்களை பெற்றுக் கொள்ளும் மக்கள் மீது வரிச்சுமை திணிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உழைப்பால்...

தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை 5.30 மணிக்கு பத்தரமுல்லையில் அமைந்துள்ள வாட்டர் எட்ஜ் நட்சத்திர விருந்தகத்தில் நடைபெற்ற, இலங்கை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான வர்த்தக சம்மேளனம் நடத்திய, கைத்தொழில் முயற்சியில் திறமை மற்றும் முன்னேற்றம் காட்டியவர்களுக்கான விருது வழங்கும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு விருதுகளை வழங்கிவைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஒன்பது மாகாணங்களிலும் திறமையான கைத்தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் வட மாகாணத்தில் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அண்ணா தொழிலகம் தெரிவு செய்யப்பட்டது.

மேலும் கைத்தொழில் முயற்சியாளர்களை உற்சாகமூட்டும் வகையில் விருதுகளை யூனியன் வங்கி இணைந்து வழங்கியது. இந்நிகழ்வில் அமைச்சருடன் அமைச்சரின் செயலாளர் திரு. வி.சிவஞானசோதி உட்படப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.